# லெனின்

## இரண்டாவது அகிலத்தின் தகர்வு



உலகத் தொழிலாளர்களே, ஒன்றுசேருங்கள்!

## வி. இ. லெனின்

# இரண்டாவது அகிலத்தின் தகர்வு

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

மொழிபெயர்ப்பாளர்: ரா. கிருஷ்ணையா

## பதிப்பாளர் முன்னுரை

வி. இ. லெனினது இரண்டாவது அகிலத்தின் தகர்வு எனும் இந்நூல் சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின் மார்க்சிய-லெனினியக் கழகத்தினரால் தயாரிக்கப்பட்ட வி. இ. லெனின், நூல்திரட்டு, ஐந்தாம் பதிப்பின் 26ஆவது தொகுதியின்படி மொழிபெயர்க்கப்பட்டதாகும்.

விலை: ரூ. 0-50

© தமிழ் மொழிபெயர்ப்பு
''முன்னேற்றப் பதிப்பகம்'', 1976

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

Л $\frac{10102-654}{014(01)76}$ 632—76

அகிலத்தின் தகர்வு என்பதன் மூலம் சம்பிரதாய விதிமுறை விவகாரம் மட்டுமே குறிக்கப்படுவதாக, அதாவது போரிடும் நாடுகளது சோஷலிஸ்டுக் கட்சிகளிடையே சர்வதேசத் தொடர்பு தடைப்பட்டிருப்பதும், சர்வதேச மாநாட்டையோ சர்வதேச சோஷலிஸ்டு பியூரோவையோ[1] கூட்ட முடியாமற் போயிருப்பதும், இன்ன பிறவும் மட்டுமே குறிக்கப்படுவதாகச் சில நேரங்களில் கருதப்படுகிறது. இந்தக் கருத்தோட்டத்தைத்தான் சிறிய நடுநிலை நாடுகளைச் சேர்ந்த சிற்சில சோஷலிஸ்டுகளும் மற்றும் சந்தர்ப்பவாதிகளும் அவர்களது ஆதரவாளர்களும் கொண்டிருக்கிறார்கள்; அந்நாடுகளது அதிகாரபூர்வமான கட்சிகளில் பெரும்பாலானவையும், இதே கருத்தோட்டத்தைக் கொண்டிருக்கலாம். ருஷ்யப் பத்திரிகை உலகில் திரு வி. கசோவ்ஸ்கி இந்தக் கருத்து நிலையைப் பூந்தின் செய்தியேட்டில்,[2] இதழ் 8ல், நமது ஆழ்ந்த நன்றிக்குரியவாறு ஒளிவுமறைவில்லாப் பகிரங்க முறையில் ஆதரித்து வாதாடினார். இக்கட்டுரை ஆசிரியருடன் தமக்குக் கருத்துடன்பாடு இல்லையென இந்த ஏட்டின் ஆசிரியர்கள் குறிப்பு ஏதும் தரவில்லை. தேசியவாதத்துக்கு ஆதரவாக வாதாடுகையில் திரு கசோவ்ஸ்கி, ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதிகள் யுத்தக் கடன்களை ஆதரித்து வாக்களித்தது நியாயமே என்று சாதிக்கும் அளவுக்குச் சென்றார். பூந்தின் முதலாளித்துவ-தேசியவாதத் தன்மையைத் தொழிலாளர்கள் பலரும் முடிவாக உணர்ந்து கொள்வதற்குத் திரு கசோவ்ஸ்கியின் இந்தத் தேசியவாத ஆதரவு துணைபுரியுமென நம்புவோமாக.

வர்க்க உணர்வு படைத்த தொழிலாளர்களுக்கு சோஷலிசமானது வைராக்கிய முடிபாகிய பற்றுக்கோளாகுமே அன்றி, குட்டிமுதலாளித்துவ இணக்கவாதப் பிரயத்தனங்களேயும் தேசியவாத எதிர்த்தரப்புப் பிரயத்தனங்களேயும் மூடிமறைத்துக் கொள்ள உதவும் வசதியான ஒரு மூடுதிரை அல்ல. அகிலத்தின் தகர்வு என்பதன் மூலம், அவர்கள் தமது வைராக்கிய முடிபுகளுக்கு அதிகார பூர்வமான மிகப் பெரும்பாலான சமூக-ஜனநாயகக் கட்சிகள் இழைத்த அவக்கேடான துரோகமே குறிக்கப்படுவதாக, ஷ்டுட்கார்ட்டிலும் பாஸெலிலும் நடைபெற்ற சர்வதேசக் காங்கிரசுகளில் இக்கட்சிகள் நிகழ்த்திய உரைகளிலும், இந்தக் காங்கிரசுகள் ஏற்ற தீர்மானங்களிலும் அடங்கியுள்ள மிகவும் புனிதமான பிரகடனங்களுக்கு இழைத்த துரோகமே குறிக்கப்படுவதாகக் கொள்கிருர்கள். இந்தத் துரோகத்தைக் கண்டு கொள்ள விரும்பாதவர்கள்தான், அல்லது இதைக் கண்டுகொள்வதில் தமக்கு ஆதாயமில்லையெனத் தெரிந்தவர்கள்தான் இதைக் காணத் தவற முடியும். இந்த விவகாரத்தை விஞ்ஞான முறையில் எடுத்துரைப்போமாயின், அதாவது தற்கால சமுதாயத்தில் நிலவும் வர்க்க உறவுகளின் நோக்கு நிலையிலிருந்து எடுத்துரைப்போமாயின், மிகப் பெரும்பாலான சமூக-ஜனநாயகக் கட்சிகளும், இவற்றுக்கு எல்லாம் தலைமையில் முதலாவதாகவும் முதன்மையானதாகவும் இரண்டாவது அகிலத்தின் மிகப் பெரிய, மிகவும் செல்வாக்கு வாய்ந்த கட்சியாகிய ஜெர்மன் கட்சியும், பாட்டாளி வர்க்கத்துக்கு எதிராய்த் தமது இராணுவத் தலைமை அலுவலர்களின், தமது அரசாங்கங்களின், தமது முதலாளித்துவ வர்க்கங்களின் தரப்புக்குச் சென்றுவிட்டன என்றே கூற வேண்டும். இது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்ச்சியாகும், மிகவும் விரிவான பகுத்தாய்வினை அவசியமாக்கும் ஒன்ருகும். யுத்தங்கள் எவ்வளவுதான் பயங்கரமான கொடூரத்தையும் துன்பதுயரங்களேயும் விளைவித்தாலும், குறைந்த பட்சம் அவை அதிகமாகவோ குறைவாகவோ முக்கியத்துவம் வாய்ந்த பின்வரும் அனுகூலத்தை உண்டாக்குகிறவை என்பது—மனித நிறுவன அமைப்புகளில் ஊழல் மலிந்தனவாய், காலங் கடந்தனவாய், உயிரற்றனவாய் இருப்பவற்றில் ஒரு பெரும் பகுதியை இரக்கமற்றவாறு புலப்படுத்தி அம்பலம் செய்து காட்டி

அழித்திடுகிறவை என்பது—நெடுங் காலமாகவே ஏற்றுக் கொள்ளப்படுகிறது. 1914-15ஆம் ஆண்டின் ஐரோப்பிய யுத்தமானது, நாகரிக நாடுகளின் முன்னேறிய வர்க்கத்துக்கு அதன் கட்சிகளினுள் எவ்வளவுப் படுமோசமாகச் சீழ் கொண்டு புரையோடிய கட்டி வளர்ந்துள்ளது, சகிக்க முடியாதபடி எப்படி அதிலிருந்து புடை நாற்றம் வீசுகிறது என்பதைப் புலப்படச் செய்து ஓரளவுக்கு நலம் புரிய ஆரம்பித்திருப்பதில் ஐயப்பாட்டுக்கு இடமில்லை.

## 1

ஐரோப்பாவின் பிரதான சோஷலிஸ்டுக் கட்சிகள் தமது பற்றுக்கோள்கள், கடமைகள் யாவற்றையும் தொலைத்துக் கட்டித் தலை முழுகியிருப்பது மெய்யா, பொய்யா? இது குறித்து விவாதிப்பதற்குத் துரோகிகளும் சரி, துரோகிகளிடத்தே தாம் நட்புணர்வுடன் நயமாக நடந்துகொண்டாக வேண்டுமென்பதை நன்கு உணருவோரும்—அல்லது ஊகித்துக் கொள்வோரும்—சரி, தயக்கமின்றி முன்வர மாட்டார்கள்தான். இரண்டாவது அகிலத்தின் ''அதிகார மேலவர்கள்'' பலருக்கும், அல்லது ருஷ்ய சமூக-ஜனநாயகவாதிகளிடையே இருக்கக் கூடிய அவர்களது சக-சிந்தனையாளர்களுக்கும் எவ்வளவுதான் கசப்பானதாக இருப்பினுங்கூட, உண்மைகளை நாம் நேர் நின்றே பார்த்தாக வேண்டும், அவையவற்றையும் அவற்றுக்குரிய சரியான பெயர் கொண்டே அழைத்திட வேண்டும்; தொழிலாளர்களிடம் நாம் உண்மைகளைக் கூறியே ஆக வேண்டும்.

தற்போதைய யுத்தத்துக்கு முன்னதாக, இதை எதிர்பார்த்து, சோஷலிஸ்டுக் கட்சிகள் தமது கடமைகளும் தமது போர்த்தந்திரமும் எவ்விதம் இருக்க வேண்டுமெனக் கருதின என்பதைக் காட்டும் உண்மைகள் எவையேனும் இருக்கின்றனவா? சந்தேகத்துக்கு இடமின்றி இருக்கின்றன. 1912ஆம் ஆண்டின் பாஸெல் சர்வதேச சோஷலிஸ்டுக் காங்கிரசால் ஏற்கப்பட்ட தீர்மானம் இருக்கிறது. இந்தத் தீர்மானத்தையும், இதனுடன் கூட இதே ஆண்டில் ஹெம்னித்ஸ் நகரத்தில் நடைபெற்ற ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சிக் காங்கிரஸ்

ஏற்றுக் கொண்ட தீர்மானத்தையும்[4] சோஷலிசத்தின் மறக்கப்பட்டுவிட்ட இலட்சியங்களை நினைவுபடுத்தும் முறையில் மீண்டும் நாம் அச்சிடுகிறோம். எல்லா நாடுகளிலும் பெரிய அளவில் வெளியான யுத்த-எதிர்ப்புக் கிளர்ச்சி, பிரசார இலக்கியத்தைத் தொகுத்துரைக்கும் இந்தத் தீர்மானம் யுத்தத்தைப் பற்றிய சோஷலிஸ்டுக் கருத்தோட்டங்களையும் யுத்தம் சம்பந்தமாய் அனுசரிக்க வேண்டிய போர்த்தந்திரத்தையும் எடுத்துரைக்கும் யாவற்றிலும் முழுமையும் துல்லியமும் மிக்க, யாவற்றிலும் புனிதமும் பவித்திரமும் வாய்ந்த ஆய்வுரையாகும். நேற்றைய அகிலத்துக்கும் இன்றைய சமூக-தேசியவெறிக்கும் அதிகார மேலவர்களாய் அமைந்தோரில் எவருமே—ஹைண்டுமனும் கெட்டும் [Guesde] சரி, காவுத்ஸ்கியும் பிளெஹானவும் சரி—அந்தத் தீர்மானத்தைத் தமது வாசகர்களுக்கு நினைவுபடுத்தத் துணிவதில்லை, இதனைத் துரோகச் செயலேயன்றி வேறு எதுவாகவும் சொல்வதற்கில்லை. இவர்கள் இத்தீர்மானம் குறித்து மௌனம் சாதிக்கிறார்கள், அல்லது (காவுத்ஸ்கியைப் போல) இரண்டாந்தர முக்கியத்துவமுடைய தனித்தெடுக்கப்பட்ட வாசகங்களை மேற்கோளாகக் காட்டிவிட்டு, மெய்யாகவே முக்கியத்துவம் வாய்ந்தவை யாவற்றையும் தட்டிக் கழித்து விடுகிறார்கள். ஒரு புறத்தில், மிகமிக ''இடதுசாரி''யான, அதிதீவிர-புரட்சிகரத் தீர்மானங்கள்; மறு புறத்தில் அறவே வெட்கங் கெட்ட ஞாபகமறதி அல்லது இத்தீர்மானங்களை நிராகரித்தல்—இது அகிலத்தின் தகர்வினை மிகவும் எடுப்பாகத் தெரியப்படுத்தும் வெளிப்பாடுகளில் ஒன்றாகும்; அதே போது பழைய கபட நாடகம் தொடர்ந்து நீடிக்க வேண்டுமென்ற கள்ளத்தனமான விருப்பத்தின் பாற்பட்டதாகிய அரிய வெகுளித்தனம் வாய்ந்தோரால் மட்டுமே வெறும் தீர்மானங்களைக் கொண்டு சோஷலிசத்தைத் ''திருத்திச் சரி செய்துவிடலாம்'' என்றும், ''அதன் கொள்கை வழியை ஒழுங்குபடுத்திவிடலாம்'' என்றும் இப்போது நம்ப முடியும் என்பதற்கான ஐயந்திரிபற்ற நிரூபணமும் ஆகும் இது.

நேற்றுதான் என்று சொல்லலாம்—யுத்தத்துக்கு முன்பு, ஹைண்டுமன் ஏகாதிபத்தியத்துக்கு ஆதரவாக வாதாடமுற்பட்ட போது, ''கண்ணியமான'' சோஷலிஸ்டுகள் எல்லோரும் அவரைக் குழம்பிப் போன பித்துக்குளியெனக் கருதி

வந்தனர், எப்போதுமே அவரைப் பற்றி இகழ்ச்சியாகவே பேசி வந்தனர். ஆனால் இன்று எல்லா நாடுகளிலும் மிகவும் முதன்மையான சமூக-ஜனநாயகத் தலைவர்கள் எல்லோரும் முற்றிலும் ஹைண்டுமனின் நிலைக்குச் சரிந்துசென்றுவிட்டனர், கருத்துச் சாயல்களிலும் உள்ளப்பாங்கிலும் மட்டும்தான் இவர்களிடையே வேறுபாடு காணப்படுகிறது. நாஷே ஸ்லோவோ[5] ஏட்டின் ஆசிரியர்களைப் போன்றோரின் குடிமை வீரத்தினை மதிப்பிடவோ, குண நிர்ணயமோ செய்யும் விதத்தில் ஓரளவுக்குப் பொருத்தமான நாடாளுமன்ற நயமொழியினை எம்மால் தேடிப் பிடிக்க முடியவில்லை—இவர்கள் "திருவாளர்" ஹைண்டுமனைப் பற்றி இகழ்ந்துரைத்துவிட்டு, அதே நேரத்தில் "தோழர்" காவுத்ஸ்கியைப் பற்றிப் பணிவன்புடன் (அல்லது அடிவருடித்தனத்துடனா?) பேசுகின்றனர், இல்லையேல் எதுவும் கூறாமலே இருக்கின்றனர். இம்மாதிரியான ஒரு போக்கினை சோஷலிசத்திடமும், பொதுவில் அவரவரும் தத்தமது பற்றுக்கோள்களிடத்தும் காட்ட வேண்டிய மதிப்புணர்ச்சிக்கு இசைவானதாகக் கொள்ள முடியுமா? ஹைண்டுமனின் தேசியவெறி தவறானது, நாசம் விளைவிப்பது என்பதாக நீங்கள் திடமாய் நம்புவீர்களாயின், இம்மாதிரியான கருத்தோட்டங்களை ஆதரித்து வாதாடுவோரில் அதிக செல்வாக்குடையவரும், அதிக அபாயகரமானவருமாகிய காவுத்ஸ்கியை எதிர்த்து நீங்கள் உங்களது விமர்சனத்தையும் தாக்குதல்களையும் தொடுக்க வேண்டியது அவசியம் அல்லவா?

கெட்டின் கருத்தோட்டங்கள் வேறு எதிலும் விட அதிக விவரமாய், நாம் விரும்பும் சமாதானம் என்ற தலைப்புடைய ஒரு பிரசுரத்தில் கெட்டியராகிய ஷார்ல் டியூமாவால் அண்மையில் எடுத்துரைக்கப்பட்டிருக்கின்றன. இந்த "ஜூல் கெட்டின் தலைமை அமைச்சர்"—பிரசுரத்தின் தலைப்புப் பக்கத்தில் இவர் தம்மைத் தாமே இவ்வாறுதான் அழைத்துக் கொள்கிறார்—இயற்கையாகவே சோஷலிஸ்டுகளின் முன்னைய தேசபக்த வாக்குமூலங்களை "மேற்கோளாகத்" தருகிறார் (ஜெர்மன் சமூக-தேசியவெறியரான டவீதும் தாயகப் பாதுகாப்பு பற்றி அண்மையில் அவர் எழுதிய பிரசுரத்தில் இவ்வாறேதான் செய்கிறார்), ஆனால் பாஸெல் அறிக்கையை அவர் குறிப்பிடத் தவறிவிடுகிறார்! தேசியவெறி கொண்ட வழக்க

மான அற்பப் பேச்சுகளை அளவு கடந்த சுயமனத் திருப்தியுடன் பேசி வரும் பிளெஹானவும் இதே போல் பாஸெல் அறிக்கை குறித்து பேச்சுமூச்சின்றி மௌனமாயிருக்கிறார். காவுத்ஸ்கியும் பிளெஹானவைப் போலவே நடந்து கொள்கிறார்: பாஸெல் அறிக்கையிலிருந்து மேற்கோள்கள் தரும் அவர், புரட்சிகர வாசகங்கள் யாவற்றையும் (அதாவது ஜீவாதார உள்ளடக்கம் கொண்டவை யாவற்றையும்!) விட்டுவிடுகின்றார், தணிக்கை விதிகள் தடை போடுவதாக அவர் சால்சாப்பு கூறிக்கொள்ளலாம்.... வர்க்கப் போராட்டத்தையோ, புரட்சியையோ பற்றிக் குறிப்பிட முடியாதபடி தணிக்கை விதிகளைக் கொண்டு தடை போடும் போலீசாரும் இராணுவ அதிகாரிகளும் சோஷலிசத்தின் துரோகிகளுக்குத் தக்க தருணத்தில் கை கொடுத்து உதவியுள்ளனர்!

பாஸெல் அறிக்கை வெற்று வேண்டுகோளாய் அமைந்து, இன்று நடைபெறும் இந்த ஸ்தூலமான யுத்தத்துடன் நேரடித் தொடர்புள்ள திட்டவட்டமான வரலாற்று அல்லது போர்த்தந்திர உள்ளடக்கம் ஏதும் இல்லாததாய் இருக்குமோ?

இதற்கு நேர்மாறானதே உண்மை. ஏனையத் தீர்மானங்களைக் காட்டிலும் பாஸெல் தீர்மானம் குறைந்த அளவிலான வெற்று வாய்வீச்சையும், அதிக அளவிலான தெள்ளிய உள்ளடக்கமும் கொண்டதாகும். தற்போது வெடித்துக் கிளம்பியிருக்கிறதே அதே யுத்தங் குறித்துத்தான், 1914-15ல் மூண்டெழுந்துள்ளனவே அந்த ஏகாதிபத்திய மோதல்கள் குறித்துத்தான் பாஸெல் தீர்மானம் பேசுகிறது. பால்கன் தீபகற்பங் குறித்து ஆஸ்திரியாவுக்கும் செர்பியாவுக்கும் இடையிலும், அல்பேனியாவும் பிறவுங் குறித்து ஆஸ்திரியாவுக்கும் இத்தாலிக்கும் இடையிலுமான மோதல்கள், பொதுவாக சந்தைகளும் காலனிகளுங் குறித்து பிரிட்டனுக்கும் ஜெர்மனிக்கும் இடையிலும் ஆர்மீனியாவும் கான்ஸ்டான்டிநோப்பிளுங் குறித்து ருஷ்யாவுக்கும் துருக்கிக்கும் பிறவற்றுக்கும் இடையிலுமான மோதல்கள்—தற்போதைய யுத்தத்தை எதிர்பார்க்கும் விதத்தில் பாஸெல் தீர்மானம் இவை யாவுங்குறித்துக் கூறுகிறது. ''ஐரோப்பாவின் வல்லரசுகளுக்கு'' இடையிலான தற்போதைய யுத்தம் ''மக்களது நலன்களுக்கு இம்மியளவுங்கூட உகந்தது

என்பதாக நியாயம் கூற முடியாததாகும்'' என்பது அந்தத் தீர்மானத்திலிருந்து பெறப்படுகிறது.

பிளெஹானவும் காவுத்ஸ்கியும்—மிகவும் இனமாதிரியான அதிகாரபூர்வமான சோஷலிஸ்டுகளில் இருவரை எடுத்துக் கொள்வோமாயின், இருவரையும் நாம் நன்கு அறிவோம், ஒருவர் ருஷ்யனில் எழுதுகிறவர், இன்னொருவர் கட்சிக் கலைப்புவாதிகளால்[6] ருஷ்யனில் மொழிபெயர்க்கப்படுகிறவர்—இப்போது (அக்செல்ரோதின் உதவியுடன்) யுத்தத்துக்கான எல்லா விதமான ''ஜனரஞ்சக நியாயங்களையும்'' (அல்லது, முதலாளித்துவச் சாக்கடைப் பத்திரிகைகளிலிருந்து எடுக்கப்பட்ட இழிவான நியாயங்களெனக் கூறுவதே பொருத்தமாயிருக்கும்) தேடுகிறார்கள்; புலமை வாய்ந்த தோரணையோடு, மார்க்சிடமிருந்து பொய்யான பல மேற்கோள்களை எடுத்தாண்டு இவர்கள் *1813, 1870*ஆம் ஆண்டுகளின் யுத்தங்களையோ (பிளெஹானவ்), *1854-71, 1876-77, 1897*ஆம் ஆண்டுகளின் யுத்தங்களையோ (காவுத்ஸ்கி) ''முன்மாதிரியாகக் கொள்ளத்தக்கனவாகக்'' குறிப்பிடுகிறார்கள். உண்மை என்னவெனில், சோஷலிசத்தில் திட நம்பிக்கை இம்மியளவும் இல்லாதவர்களால் மட்டும்தான், சோஷலிஸ்டு மனசாட்சி கடுகளவும் இல்லாதவர்களால்—மட்டும்தான், இத்தகைய வாதங்களைக் கருத்துக்குரியவையாகக் கொள்ள முடியும், ஒப்பீடில்லா ஏமாற்றாகவும் கபடமாகவும் சோஷலிசத்தை இழிவுபடுத்தும் சோரத்தனமாகவும் குறிப்பிடத் தவற முடியும்! காவுத்ஸ்கியை நேர்மையுடன் கண்டன விமர்சனம் செய்வதற்காக மேரிங், ரோசா லுக்சம்பர்க் இவர்களது புதிய சஞ்சிகையை (*Die Internationale*)[7] ஜெர்மன் கட்சியின் செயற் குழு (''ஃபார்ஷ்தாண்டு'') இழித்தும் பழித்தும் கூறி சாபமிடட்டும். வண்டர்வேல்டே, பிளெஹானவ், ஹைண்டுமன் வகையறுக்கள் அவர்களது எதிராளிகளை மூவர் உடன்பாட்டு[8] நாடுகளது போலீசின் துணை கொண்டு இவ்விதமே நடத்தட்டும். பாஸெல் அறிக்கையை அப்படியே அச்சிட்டு இதற்கு நாம் பதிலளிப்போம். துரோகச் செயலென்றே குறிப்பிட வேண்டிய ஒரு பாதையை இத்தலைவர்கள் தெரிந்தெடுத்துக் கொண்டு விட்டதை இந்த அறிக்கை தெளிவுபடுத்தும்.

பாஸெல் தீர்மானம் தேசிய அல்லது மக்கள் யுத்தம் குறித்துப் பேசவில்லை—தேசிய அல்லது மக்கள் யுத்தத்துக்கு உதாரணமாகக் கூறக்கூடிய யுத்தங்கள் ஐரோப்பாவில் நடைபெற்றிருக்கின்றன, 1789—1871ஆம் ஆண்டுகளின் காலத்துக்கு இவையே உருமாதிரியாய் அமைந்த யுத்தங்கள் என்று கூடச் சொல்லலாம்; இத்தீர்மானம் புரட்சிகர யுத்தம் குறித்துப் பேசவில்லை—சமூக-ஜனநாயகவாதிகள் புரட்சிகர யுத்தத்தை ஒருபோதும் நிராகரித்ததில்லை. பாஸெல் தீர்மானம் தற்போதைய யுத்தம் குறித்துத்தான் பேசுகிறது: ''முதலாளித்துவ ஏகாதிபத்தியத்தின்,'' ''அரசவம்ச நலன்களின்'' விளைவான, போரிடும் அரசுகளாலாகிய இரு கோஷ்டிகளாகிய ஆஸ்திரோ-ஜெர்மன், ஆங்கிலோ-பிரெஞ்சு-ருஷ்யக் கோஷ்டிகளால் பின்பற்றப்படும் ''நாடு பிடிக்கும் கொள்கையின்'' விளைவான தற்போதைய யுத்தம் குறித்துத்தான் பேசுகிறது. காலனிகளுக்கான இந்த ஏகாதிபத்திய, கொள்ளைக்கார யுத்தத்தை மக்கள் யுத்தமாக, (இந்த அல்லது அந்தத் தரப்பின்) தற்காப்புக்கான யுத்தமாகச் சித்திரிப்பதற்கு எல்லா நாடுகளையும் சேர்ந்த முதலாளித்துவ வர்க்கத்தினரும் தமது முழு சக்தியையுங் கொண்டு பெருமுயற்சி செய்கிறார்கள். பிளெஹானவும் காவுத்ஸ்கியும் இவர்களது கூட்டத்தினரும் ஏகாதிபத்தியத் தன்மையதல்லாத யுத்தங்களை வரலாற்று உதாரணங்களாகக் குறிப்பிட்டு இந்த யுத்தத்துக்கு நியாயம் கற்பிக்க முற்படுகையில், எல்லா நாடுகளின் முதலாளித்துவ வர்க்கத்தாரது தன்னலப் பொய்யுரையை அப்படியே திருப்பிக் கூறுவதன் மூலம் அப்பட்டமாகத் தொழிலாளர்களை ஏமாற்றி வருகிறார்கள்.

தற்போதைய யுத்தம் ஏகாதிபத்திய, கொள்ளைக்கார, பாட்டாளி-வர்க்க-எதிர்ப்புத் தன்மையதாகும் என்கிற பிரச்சினை முற்றிலும் தத்துவார்த்தப் பிரச்சினைக்குரிய கட்டத்தைக் கடந்து சென்று நெடுநாட்களாகின்றன. ஏகாதிபத்தியத்தின் பிரதான இயல்புகள் யாவும் தத்துவார்த்த வழியில் கணிக்கப்பட்டிருக்கின்றன. கிழடு தட்டிப் போய் அந்திமக் காலத்தை வந்தடைந்துவிட்ட முதலாளித்துவ வர்க்கம் உலகைப் பங்கு போட்டுக் கொள்வதற்காகவும் ''சிறு'' தேசங்களை அடிமை செய்வதற்காகவும் போராட்டம் நடத்தி வருகிறதென்று மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த

முடிவுகள் எல்லா நாடுகளிலும் விஸ்தாரமாக இருந்து வரும் சோஷலிஸ்டுப் பத்திரிகைகளில் ஆயிரக் கணக்கான தரம் மீண்டும் மீண்டும் கூறப்பட்டுள்ளன. உதாரணமாக, நமது ''நேச'' தேசங்களில் ஒன்றின் பிரதிநிதியாகிய பிரெஞ்சுக் காரர் தெலெசி மூண்டுவரும் யுத்தம் (1911!) என்ற தமது பிரசுரத்தில் பிரெஞ்சு முதலாளித்துவ வர்க்கத்தையும் கணக்கில் கொண்டு, தற்போதைய யுத்தத்தின் கொள்ளைக்காரத் தன்மையை எளிய முறையில் விளக்கிக் கூறினர். அது மட்டுமல்ல. பாஸெலில் எல்லா நாடுகளின் பாட்டாளி வர்க்கக் கட்சிகளது பிரதிநிதிகளும் ஏகாதிபத்தியத் தன்மை வாய்ந்த ஒரு யுத்தம் மூண்டு வந்ததென்ற தமது அசைக்க முடியாத திடமான கருத்தை ஒருமனதாகவும் அதிகாரபூர்வமாகவும் வெளியிட்டனர்; இதிலிருந்த எழுந்த போர்த்தந்திர முடிவுகளை அவர்கள் எடுத்துரைத்தனர். ஆகவே, தேசியப் போர்த்தந்திரத்துக்கும் சர்வதேசியப் போர்த்தந்திரத்துக்கும் இடையிலான வேறுபாடு போதுமான அளவு விவாதிக்கப் படவில்லை (நாஷே ஸ்லோவோ, இதழ்கள் 87, 90ல் அக்செல்ரோதின் சமீபத்தியப் பேட்டியைப் பார்க்கவும்) என்பதாகவும் இன்ன பலவாருகவும் கூறப்படுபவை யாவற்றையும் ஏனைய பல காரணங்களுடன் கூட இக்காரணத்தை முன்னிட்டும் நாம் குதர்க்கவாதமென முற்றுகவும் முடிவாகவும் நிராகரித்தே ஆக வேண்டும். இது குதர்க்கவாதமே ஆகும், ஏனெனில் ஏகாதிபத்தியத்தை விரிவாய் விஞ்ஞான முறையில் பகுத்தாய்தல் என்பது ஒன்று—இந்தப் பகுத்தாய்வு நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கிறது, சாராம்சத்தில் இது விஞ்ஞானத்தைப் போலவே முடிவின்றி தொடர்ந்து நடைபெறுவதாகும்; முதலாளித்துவ ஏகாதிபத்தியத்துக்கு எதிரான சோஷலிஸ்டுப் போர்த்தந்திரத்தின் கோட்பாடுகள் முற்றிலும் வேறொரு விவகாரமாகும்—சமூக-ஜனநாயகச் செய்தியேடுகளின் பத்துலட்சக் கணக்கான பிரதிகளிலும், அகிலத்தின் தீர்மானத்திலும் இக்கோட்பாடுகள் எடுத்துரைக்கப்பட்டிருக்கின்றன. சோஷலிஸ்டுக் கட்சிகளானவை போராடும் பாட்டாளி வர்க்கத்தின் நிறுவனங்களாகுமே அன்றி, வாக்குவாதங்கள் நடத்திச் செல்வதற்கான பட்டிமன்றங்கள் அல்ல; பல படைப்பிரிவுகள் பகைவன் பக்கம் சேர்ந்து கொண்டுவிட்ட போது, அவற்றின் பெயர்களைக்

குறிப்பிட்டு அவற்றைத் துரோகிகளென நிந்தனை செய்தாக வேண்டும். ''ஏகாதிபத்தியத்தை எல்லாரும் ஒரு மாதிரியாகப் புரிந்து கொள்ளவில்லை'' என்றும், தேசியவெறியர் காவுத்ஸ்கியும் தேசியவெறியர் குனேவும் இதைப் பற்றி பல தொகுதிகளில் நூல்கள் எழுதிச் செல்ல முடிகிறது என்றும், இப்பிரச்சினை போதுமான அளவுக்கு விவாதிக்கப்படவில்லை என்றும், இன்ன பலவாறுகவும் கூறப்படும் வஞ்சகக் கூற்றுகளால் நாம் ஏமாற்றப்படுவதற்கு இடந் தரலாகாது. முதலாளித்துவமானது அதன் கொள்ளைக்காரத் தன்மையின் எல்லா வெளிப்பாடுகளிலும், அதன் வரலாற்று வளர்ச்சியிலும் தேசிய இயல்புகளிலுமான மிகமிக நுட்பமான எல்லாக் கிளைப் பிரிவுகளிலும் முற்றுகவும் ஒன்று விடாமலும் ஆராயப்படுதல் ஒருபோதும் முடிவுறப் போவதில்லை. அறிஞர்கள் (முக்கியமாகப் பகட்டுப் புலமையாளர்கள்) விவரங்கள் குறித்து வாதம் புரிவது ஒருபோதும் முடிவடையப் போவதில்லை. இக்காரணங்களை முன்வைத்து முதலாளித்துவத்துக்கு எதிரான சோஷலிசப் போராட்டத்தைக் கைவிடுதலும், அந்தப் போராட்டத்துக்குத் துரோகமிழைப்போரை எதிர்க்காமல் இருப்பதும் நகைக்கத் தக்கதாகிவிடும். ஆனால் காவுத்ஸ்கியும் குனேவும் அக்செல்ரோதும் இவர்களைப் போன்றேரும் நம்மைச் செய்யச் சொல்வது இதுவே அன்றி வேறென்ன?

யுத்தம் மூண்டெழுந்துவிட்ட இந்த நேரத்தில் பாஸெல் தீர்மானத்தைப் பரிசிலிக்கவும், அது தவறுனதென நிரூபிக்கவும் யாரும் முயலவுங்கூட முற்படவில்லை.

## 2

யுத்தமானது புரட்சிகரச் சூழ்நிலையை உண்டாக்குமென்று எதிர்பார்த்துத்தான் நேர்மையான சோஷலிஸ்டுகள் பாஸெல் தீர்மானத்தை ஆதரித்தனர் என்றும், ஆனல் புரட்சி சாத்தியமற்றதாகிவிடவே நிகழ்ச்சிகள் அவர்களை மறுதலித்து ஓடச் செய்தன என்றும் கொள்ளலாமா?

இம்மாதிரியான குதர்க்கவாதத்தைக் கையாண்டுதான் குனேவ் (கட்சியின் தகர்வா? என்னும் வெளியீட்டிலும் வரிசை

யாகப் பல கட்டுரைகளிலும்) முதலாளித்துவ முகாமுக்குத் தாம் ஓடியதற்கு நியாயம் கூறமுயன்றுள்ளார். காவுத்ஸ்கியின் தலைமையிலுள்ள அனேகமாய் ஏனைய எல்லா சமூக-தேசிய வெறியர்களின் எழுத்துகளிலும் இதையொத்த ''வாதங்கள்தான்'' சூசகமாய்க் குறிப்பிடப்படுகின்றன. புரட்சி வருமென்ற நம்பிக்கைகள் வெற்றுப் பிரமைகளாகிவிட்டன, பிரமைகளுக்காகப் போராடுவது மார்க்சியவாதிக்குரிய செயலல்ல என்று வாதாடுகிறார் குனேவ். ஆனால் பாஸெல் அறிக்கையில் கையொப்பமிட்டவர்கள் எல்லோருக்கும் இந்தப் ''பிரமைகளில்'' பங்குண்டு என்பது குறித்து இந்த ஸ்துரூவேவியர்[9] ஒரு வார்த்தைகூட கூறக் காணோம். தாம் அப்பழுக்கில்லா நேர்மையாளர் என்பதாகப் பாவனை செய்துகொண்டு, பெனெக்குக்கையும் ராதெக்கையும் போன்ற அதிதீவர இடதுசாரியினரையே குற்றம் கூற வேண்டும் என்கிறார்!

பாஸெல் அறிக்கையைத் தயாரித்தவர்கள் புரட்சி வருமென மனப்பூர்வமாக எதிர்பார்த்தனர், ஆனால் நிகழ்ச்சிகள் அவர்களை மறுதலித்து ஓடச் செய்தன என்ற வாதத்தின் கருப்பொருளைப் ப்ரிசிலித்துப் பார்ப்போம். பாஸெல் அறிக்கை கூறுவதாவது: (1) யுத்தமானது பொருளாதார, அரசியல் நெருக்கடியை உண்டாக்கும்; (2) தொழிலாளர்கள் தாம் யுத்தத்தில் பங்கு கொள்வது குற்றமாகுமென்றும், ''முதலாளிகளுடைய லாபத்துக்காகவும் அரசவம்ச சிறப்புக்காகவும் இரகசியத் தூதுத் துறை ஒப்பந்தங்களின் நிறைவேற்றத்துக்காகவும் தாம் ஒருவரையொருவர் சுட்டுக் கொன்று கொள்வது'' கொடுங் குற்றமே ஆகுமென்றும் கருதுவார்கள்; யுத்தமானது தொழிலாளர்களிடத்தே ''ஆத்திரத்தையும் கலகத்தையுமே'' எழச் செய்யும்; (3) இந்த நெருக்கடியையும் தொழிலாளர்களது இந்த மனப்பாங்கையும் பயன்படுத்தி ''மக்களைத் தட்டியெழுப்புவதும் முதலாளித்துவத்தின் வீழ்ச்சியைத் துரிதப்படுத்துவதும்'' சோஷலிஸ்டுகளுடைய கடமையாகும்; (4) யுத்தத்தைத் துவக்குவதன் மூலம் விதிவிலக்கின்றி எல்லா ''அரசாங்கங்களும்'' தமக்குப் ''பேரபாயத்தை விளைவித்துக் கொள்ளவே செய்யும்''; (5) அரசாங்கங்கள் ''பாட்டாளி வர்க்கப் புரட்சி குறித்து அஞ்சுகின்றன''; (6) அரசாங்கங்கள் பாரிஸ் கம்யூனினையும்

(அதாவது உள்நாட்டு யுத்தத்தையும்), 1905ஆம் ஆண்டு ருஷ்யப் புரட்சியையும், இன்ன பிறவற்றையும் ''நினைவில் கொண்டிருக்க வேண்டும்''. இவை யாவும் தெட்டத் தெளிவான கருத்துக்கள். இவை உண்மை நிலைவரங்களும் போக்குகளும் கறாராய்க் குணநிர்ணயம் செய்யப்பட வேண்டுமென வலியுறுத்துகின்றனவே ஒழிய, புரட்சி ஏற்பட்டுவிடுமென உத்தரவாதம் செய்யவில்லை. இந்தக் கருத்துக்கள், வாதங்கள் குறித்துப் பேசுகையில், எதிர்பார்க்கப்பட்ட புரட்சியானது வெறும் பிரமையாகி விட்டதெனக் கூறுகிறவர் எவரும் மார்க்சியவாதிக்குரிய போக்கை வெளியிடவில்லை, ஸ்துரூவேவிய, போலீஸ்-ஓடுகாலிக்குரிய போக்கையே வெளியிடுகின்றார்.

புரட்சிகரச் சூழ்நிலை இல்லையேல் புரட்சி சாத்தியமன்று, அதேபோது புரட்சிகரச் சூழ்நிலை ஒவ்வொன்றும் புரட்சியை எழச் செய்ய வேண்டுமென்பதும் இல்லை—மார்க்சியவாதிக்கு இது மறுக்க முடியாத ஒன்று. பொதுவாகப் பேசுமிடத்து, புரட்சிகரச் சூழ்நிலை என்பதற்கான அறிகுறிகள் யாவை? எந்தத் தவறும் இழைக்கவில்லை என்கிற நிச்சயத்துடன் நாம் பின்வரும் மூன்று பிரதான அறிகுறிகளைக் குறிப்பிடலாம்: (1) ஆளும் வர்க்கங்கள் தமது ஆட்சியை எந்த மாற்றமுமின்றி தொடர்ந்து நடத்திச் செல்வது சாத்தியமற்றதாகுதல்; ''மேல் வர்க்கங்களிடையே'' ஏதேனும் ஒரு வடிவத்தில் நெருக்கடி ஏற்பட்டு, ஆளும் வர்க்கத்தினுடைய கொள்கை நெருக்கடிக்கு உள்ளாகி, இதன் விளைவாய் வெடிப்பு உண்டாகி ஒடுக்கப்பட்ட வர்க்கங்களுடைய அதிருப்தியும் ஆத்திரமும் இவ்வெடிப்பின் வழியே பீறிட்டெழுதல். புரட்சி நடைபெறுவதற்கு, பழைய வழியில் வாழ ''அடிமட்டத்து வர்க்கங்கள் விரும்பாதது'' மட்டும் சாதாரணமாகப் போதாது; பழைய வழியில் வாழ ''மேல் வர்க்கங்களுக்கு முடியாமற் போவதும்'' அவசியமாகும். (2) ஒடுக்கப்படும் வர்க்கங்களுடைய துன்பதுயரமும் வறுமையும் வழக்கமாக இருப்பதைக் காட்டிலும் அதிகக் கடுமையாகிவிடுதல்; (3) மேற்கண்ட காரணங்களின் விளைவாய் மக்கட் பெருந்திரளினரது செயற்பாடு கணிசமாய் அதிகரித்துவிடுதல்; மக்கட் பெருந்திரளினர் ''சமாதான காலத்தில்'' தாம் சூறையாடப்படுவதற்கு முறையிடாமலே இடமளிப்பவர்களாயினும், கொந்தளிப்பான

காலங்களில், வரலாறு படைக்க வல்ல சுயேச்சைச் செயலில் இறங்கும்படி நெருக்கடி நிலைமைகள் யாவற்ருலும் மற்றும் ''மேல் வர்க்கங்களாலுங்கூட'' இழுத்துவிடப்படுகிருர்கள்.

தனிப்பட்ட கோஷ்டிகள், கட்சிகளின் சித்தத்தை மட்டுமின்றி, தனிப்பட்ட வர்க்கங்களின் சித்தத்தையும் சார்ந்திராத இந்த எதார்த்தப் புறநிலை மாறுதல்கள் இல்லாமல், பொதுவாகப் புரட்சி சாத்தியமன்று. இந்த எதார்த்தப் புறநிலை மாறுதல்கள் யாவும் சேர்ந்த ஒட்டுமொத்தமே புரட்சிகரச் சூழ்நிலை எனப்படுவது. இப்படிப்பட்ட சூழ்நிலை ருஷ்யாவில் 1905லும், மேலைய நாடுகளில் புரட்சிகரக் காலக் கூறுகள் யாவற்றிலும் நிலவிற்று. மற்றும் ஜெர்மனியில் கடந்த நூற்ருண்டின் அறுபதாம் ஆண்டுகளிலும், ருஷ்யாவில் 1859-61லும் 1879-80லும் இந்தச் சூழ்நிலை நிலவிற்று என்ருலுங்கூட இச்சந்தர்ப்பங்களில் புரட்சி ஏற்படவில்லை. காரணம் என்ன? காரணம் என்னவெனில், புரட்சிகரச் சூழ்நிலை ஒவ்வொன்றும் புரட்சியை எழச் செய்துவிடுவதில்லை. மேற்கூறிய எதார்த்தப் புறநிலை மாறுதல்களுடன் கூடவே அகநிலை மாறுதலும் இருக்கும்படியான ஒரு சூழ்நிலையில் மட்டும்தான், அதாவது பழைய அரசாங்கத்தைத் தகர்க்கும்படி (அல்லது சீர்குலைக்கும்படி) போதிய அளவுக்குப் பலம் படைத்த புரட்சிகர வெகுஜனச் செயலை மேற்கொள்வதற்குப் புரட்சிகர வர்க்கம் ஆற்றலுடையதாக இருக்கும்படியான ஒரு சூழ்நிலையில் மட்டும்தான்—பழைய அரசாங்கம் ''கவிழ்க்கப்படாத'' வரை, நெருக்கடியான காலக்கூறிலுங்கூட அது ''விழுந்துபடாமல்'' இருந்து கொண்டுதான் இருக்கும்—புரட்சி எழ முடியும்.

இவைதாம் புரட்சியைப் பற்றிய மார்க்சியக் கருத்தோட்டங்கள். இவை மிகப் பல தடவை தெளிவாக எடுத்துரைக்கப்பட்டவை; மறுக்கமுடியாதனவாக எல்லா மார்க்சியவாதிகளாலும் ஏற்கப்பட்டவை; ருஷ்யர்களாகிய நமக்கு 1905ஆம் ஆண்டின் அனுபவத்தால் குறிப்பான அளவுக்கு எடுப்பாய் மெய்ப்பித்துக் காட்டப்பட்டவை. அப்படியானல், 1912ல் பாஸெல் அறிக்கை இது சம்பந்தமாக ஊகித்துக் கொண்டது என்ன? 1914-15ல் நடைபெற்றது என்ன?

''பொருளாதார, அரசியல் நெருக்கடி'' என அது சுருக்கமாய் குறிப்பிட்ட புரட்சிகரச் சூழ்நிலை எழுமென்று பாஸெல்

அறிக்கை ஊகித்தது. இம்மாதிரியான சூழ்நிலை எழுந்துள்ளதா, இல்லையா? சந்தேகத்துக்கு இடமின்றி எழுந்துதான் உள்ளது. குனேவ், காவுத்ஸ்கி, பிளெஹானவ் முதலான எத்தர்களைக் காட்டிலும் கபடமின்றியும் பகிரங்கமாகவும் நேர்மையோடும் தேசியவெறியை ஆதரித்து வாதாடும் சமூக-தேசியவெறியர் லெஞ்ச் பின்வருமாறு கூறுமளவுக்குச் செல்கிறார்: ''இப்போது நாம் கடந்து செல்வது ஒரு வகைப் புரட்சியே ஆகும்'' (அவரது பிரசுரமான ஜெர்மன் சமூக-ஜனநாயகமும் யுத்தமும், பெர்லின், 1915, பக்கம் 6). அரசியல் நெருக்கடி நிலவுகிறது; எந்த அரசாங்கத்துக்கும் நாளை என்னாகும் என்ற உறுதிப்பாடு இருக்கவில்லை; நிதித்துறை நொடிப்பு, பிரதேச இழப்பு, நாட்டிலிருந்து வெளியேற்றப்படுதல் (பெல்ஜிய அரசாங்கம் வெளியேற்றப்பட்டது போல) ஆகிய அபாயங்களின்றி எந்த அரசாங்கமும் பாதுகாப்புடன் இருக்கவில்லை. எல்லா அரசாங்கங்களும் எரிமலையின் மீது அமர்ந்திருக்கின்றன. மக்கட் பெருந்திரளினர் முன்முயற்சியும் வீரமும் வெளிப்படுத்திக் காட்ட வேண்டுமென இந்த அரசாங்கங்கள் யாவும் தாமே அறைகூவி வருகின்றன. ஐரோப்பாவின் அரசியல் ஆட்சியமைப்பு முழுதுமே ஆட்டங் கண்டுவிட்டது. மாபெரும் அரசியல் கொந்தளிப்புகளுக்கான ஒரு காலத்துள் நுழைந்துள்ளோம் (மேலும் மேலும் ஆழமாய் மூழ்கும்படி இதனுள் செல்கின்றோம்—இத்தாலியானது யுத்தப் பிரகடனம் செய்திருக்கும் நாளன்று இதை எழுதுகிறேன்), யாராலும் இதை மறுப்பதற்கில்லை. யுத்தம் பிரகடனமாகி இரண்டு மாதங்களுக்குப் பிற்பாடு காவுத்ஸ்கி எழுதினார் (1914 அக்டோபர் 2ல், *Die Neue Zeit*[10] ஏட்டில்): ''யுத்தம் தொடங்கும் நேரத்தில் இருப்பது போல் வேறு எந்த நேரத்திலும் அரசாங்கங்கள் இவ்வளவு வலுமிக்கனவாகவும் கட்சிகள் இவ்வளவு வலுவற்றனவாகவும் இருப்பதில்லை'' என்று. வரலாற்று விஞ்ஞானம் பொய்யாகத் திரித்துப் புரட்டப்படுவதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு. ஸூடெக்கும்களையும் ஏனைய சந்தர்ப்பவாதிகளையும் திருப்தி செய்வதற்காகக் காவுத்ஸ்கி இப்படித் திரித்துப் புரட்டுகின்றார். முதலாவதாக, யுத்தக் காலத்தில் தேவையாக இருப்பது போல வேறு எந்தக் காலத்திலும் அரசாங்கங்களுக்கு ஆளும் வர்க்கங்களது எல்லாக் கட்சிகளுக்குமிடையே உடன்பாடு

நிலவுவதோ, ஒடுக்கப்படும் வர்க்கங்கள் ''அமைதியாக'' அந்த ஆட்சிக்குக் கீழ்ப்பட்டிருப்பதோ தேவையாக இருப்ப தில்லை. இரண்டாவதாக, ''யுத்தம் தொடங்கும் போது''— முக்கியமாய் விரைவில் வெற்றி கிட்டுமென எதிர்பார்க்கும் ஒரு நாட்டில்—அரசாங்கம் எல்லாம் வல்ல சக்தி வாய்ந் தாகத் தோன்றிய போதிலும், புரட்சிகரச் சூழ்நிலை ஏற்படு வதற்குரிய வாய்ப்புகளை உலகில் யாருமே ஒருபோதும் யுத் தத்தின் ''தொடக்கத்துடன்'' மட்டுமே இணைந்தவையாகக் கொண்டதில்லை; தவிரவும் ''தோற்றத்தை'' உண்மை நிலை வரத்துக்கு முழுதொத்ததாக யாரும் கொள்வது இன்னுங் கூட அரிதாகும்.

ஐரோப்பிய யுத்தமானது கடந்த காலம் கண்ட எந்த யுத்தத்தையும் விடக் கொடூரமானதாக இருக்கும் என்பது எல்லாரும் அறிந்தும், கண்ணுற்றும், ஏற்றுக் கொண்டும் வந்ததுதான். யுத்தத்தின் அனுபவம் மேலும் மேலும் கண் கூடாக இதனை மெய்ப்பித்து வருகிறது. யுத்தத் தீ பல்கிப் பரவிச் செல்கிறது. ஐரோப்பாவின் அரசியல் அடித்தளங்கள் மேன்மேலும் ஆட்டிக் குலுக்கப்படுகின்றன. மக்கட் பெருந் திரளினரது துன்பதுயரங்கள் சொல்லும் தரமற்றவை. அர சாங்கங்களும் முதலாளித்துவ வர்க்கத்தாரும் சந்தர்ப்பவாதி களும் இந்தத் துன்பதுயரங்களை மூடி மறைப்பதற்காகச் செய்யும் முயற்சிகள் மேன்மேலும் பயனற்றுப் போகின்றன. முதலாளிகளில் சில தொகுதியோருக்குக் கிடைக்கும் யுத்த இலாபங்கள் அசுரத்தனமாய் உயர்ந்து, முரண்பாடுகள் அளவு கடந்து கடுமையாகி வருகின்றன. மக்கட் பெருந்திர ளினரின் அதிகமாகிவரும் ஆத்திரக் கனல், மிதித்துத் துவைக் கப்பட்டு, அறியாமை இருளில் வதையும் சமுதாயப் பகுதி களிடையே அருளார்ந்த (''ஜனநாயக'') சமாதானம் வேண்டு மென்று மேலோங்கிவரும் தெளிவற்ற ஏக்கம், ''அடிமட் டத்து வர்க்கங்களிடையே'' தோன்ற ஆரம்பித்திருக்கும் அதிருப்தி—ஆகிய இவை யாவும் கண்கூடான உண்மைகள். யுத்தம் மேலும் மேலும் நீடித்தும் கடுமையாகியும் செல்லச் செல்ல, மக்கட் பெருந்திரளினரது செயற்பாட்டை அர சாங்கங்கள் தாமே மேலும் மேலும் ஊக்குவிக்கின்றன— ஊக்குவித்தே ஆகவேண்டியிருக்கிறது. மக்கட் பெருந்திரளின ரை அவை அளவுமீறிய முயற்சியை மேற்கொள்ளும்படி,

சர்வபரித் தியாகம் புரியும்படி அறைகூவி அழைக்கின்றன. யுத்த அனுபவமானது வரலாற்றின் எந்த நெருக்கடியின், மனித வாழ்வில் எந்தப் பெரிய விபத்தின், எந்தத் திடீர்த் திருப்பத்தின் அனுபவத்தையும் போலவே, சில பேரைக் கதி கலங்க வைத்து ஒடிந்து விழச் செய்கிறது, ஆனால் ஏனை யோரை அறிவொளி பெற வைத்துப் பதமடைந்து உறுதி யுறச் செய்கிறது. ஒட்டுமொத்தமாகப் பார்க்கையில், அனைத்து உலக வரலாற்றையும் கருதுகையில், இரண்டாவது வகை யினரின் எண்ணிக்கையும் பலமும்—இந்த அல்லது அந்த அர சின் சரிவும் வீழ்ச்சியுமான தனிப்பட்ட சில உதாரணங்களைத் தவிர்த்து—முதலாவது வகையினரின் எண்ணிக்கையையும் பலத்தையும் காட்டிலும் அதிகமாகும் என்பது தெளிவு.

சமாதானம் முடிக்கப்படுவதால் இந்த இன்னல்கள் யா வற்றுக்கும், முரண்பாடுகள் எல்லாம் இப்படி மும்முரமாகிச் செல்வதற்கும் ''உடனடியாக'' முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு விடாது; மாறாக, மக்களின் மிகவும் பிற்பட்ட திரளினரை அது இந்த இன்னல்களைப் பல விதத்திலும் மேலும் கூர்மை யாகவும் உடனடியாகவும் உணர்ந்து கொள்ளவே செய்யும்.

சுருங்கக் கூறுமிடத்து, ஐரோப்பாவின் வல்லரசுகளிலும், மிகப் பெரும்பாலான முன்னேறிய நாடுகளிலும் புரட்சிகரச் சூழ்நிலையே இருந்து வருகிறது. இவ்விதம், பாஸெல் அறிக் கை முன்னறிந்து கூறியதானது முழு அளவில் மெய்ப்பிக்கப் பட்டு ஊர்ஜிதமாகியுள்ளது. நேரடியாகவோ, மறைமுகமாக வோ இந்த உண்மையை மறுப்பதும், குனேவும் பிளெஹானா வும் காவுத்ஸ்கியும் இவர்களைச் சேர்ந்தோரும் செய்திருப் பது போல் இவ்வுண்மையைக் கவனியாது புறக்கணிப்பதும் அபாண்டப் பொய்யைச் சொல்லித் தொழிலாளி வர்க்கத்தை ஏமாற்றுவதே ஆகும்; முதலாளித்துவ வர்க்கத்தாருக்குத் தொண்டூழியம் புரிவதே ஆகும். புரட்சியைக் கண்டு அஞ்சுவோர்—குட்டிமுதலாளித்துவக் கிறிஸ்தவப் பாதிரி மார்களும் இராணுவத் தலைமை அலுவலர்களும் கோடீஸ் வரர்களது செய்தியேடுகளும்—ஐரோப்பாவில் புரட்சிகரச் சூழ்நிலைக்கான அறிகுறிகள் உள்ளன என்று ஒத்துக் கொள் ளும்படியான நிர்ப்பந்தம் ஏற்பட்டிருப்பதை நிரூபிக்கும் உண்மைகளை சோத்சியால்-டெமக்ராத் ஏட்டில்[11] (இதழ்கள் 34, 40, 41) நாம் எடுத்துரைத்தோம்.

இந்தச் சூழ்நிலை அதிக காலத்துக்கு நீடிக்குமா? இன்னும் இது எவ்வளவு கடுமையாகிச் செல்லும்? இது புரட்சிக்கு இட்டுச் செல்லுமா? இவற்றை நாம் அறியோம், யாராலும் அறியவும் முடியாது. புரட்சிகர உணர்வினது வளர்ச்சியின் போதும், முன்னேறிய வர்க்கமான பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரச் செயற் கட்டத்துக்கான மாற்றம் ஏற்படும் போதும் கிடைக்கப்பெறும் அனுபவத்தால் மட்டுமே இதற்குப் பதிலளிக்க முடியும். இது சம்பந்தமான ''பிரமைகள்'' குறித்தோ, அவற்றை நிராகரிப்பது குறித்தோ பேசுவதற்கு இடமில்லை; ஏனெனில் எந்த சோஷலிஸ்டாலும் இந்த யுத்தம் (அடுத்தது அல்ல), இன்றையப் புரட்சிகரச் சூழ்நிலை (நாளையது அல்ல) புரட்சியை உண்டாக்கிவிடுமென அறுதியிட்டுக் கூறுவதற்கில்லை. எல்லா சோஷலிஸ்டுகளுக்குமுள்ள மறுக்க முடியாத அடிப்படைக் கடமையையே நாம் விவாதிக்கிறோம்—புரட்சிகரச் சூழ்நிலை இருப்பதை மக்கட்பெருந்திரளினருக்குப் புலப்படச் செய்வது, அதன் வீச்சையும் ஆழத்தையும் விளக்கிக் கூறுவது, பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர உணர்வினையும் புரட்சிகர வைராக்கியத்தையும் தட்டியெழுப்புவது, புரட்சிகரச் செயலில் இறங்கும் நிலைக்கு முன் செல்ல அதற்கு உதவுவது, இதன் பொருட்டு புரட்சிகரச் சூழ்நிலைக்கு ஏற்ற நிறுவனங்களை அமைத்திடுவது ஆகிய இந்தக் கடமையையே நாம் விவாதிக்கிறோம்.

இதுவே சோஷலிஸ்டுக் கட்சிகளுக்குரிய கடமை என்பது குறித்து செல்வாக்கு படைத்த அல்லது பொறுப்புணர்ச்சி கொண்ட எந்த சோஷலிஸ்டும் ஒருபோதும் ஐயுறவு கொள்ளத் துணிந்ததில்லை. பாஸெல் அறிக்கை சிறிதளவும் ''பிரமைகளைப்'' பரப்பவோ, அவற்றுக்கு இடமளிக்கவோ முற்படாமல், சோஷலிஸ்டுகளின் முன்னுள்ள இந்தக் கடமையைத் திட்டவட்டமாக எடுத்துரைத்துப் பேசிற்று: மக்களைத் தட்டியெழுப்பிக் கிளர்த்திவிடுவதும் (பிளெஹானவும் அக்செல்ரோதும் காவுத்ஸ்கியும் செய்து வந்திருப்பது போலத் தேசியவெறியை ஊட்டி மக்களைத் தூங்க வைப்பதல்ல), நெருக்கடியைப் பயன்படுத்தி முதலாளித்துவத்தின் வீழ்ச்சியைத் துரிதப்படுத்துவதும், [பாரிஸ்] கம்யூன், 1905 அக்டோபர்-டிசம்பர் ஆகிய உதாரணங்களைத் தமக்கு வழிகாட்டியாகக் கொள்வதும் சோஷலிஸ்டுகளின் கடமையாகும்

என்றது. தற்போதுள்ள கட்சிகள் இந்தக் கடமையை நிறைவேற்றத் தவறியதானது, இக்கட்சிகளின் துரோகத்தை, இவற்றின் அரசியல் மரணத்தை, தமக்குரிய பாத்திரத்தைத் துறந்துவிட்டு இவை முதலாளித்துவ வர்க்கத்தின் பக்கத்துக்கு ஓடிவிட்டதைக் குறிக்கிறது.

## 3

ஆனல் இரண்டாவது அகிலத்தின் மிக முக்கிய பிரதிநிதிகளும் தலைவர்களும் சோஷலிசத்துக்குத் துரோகம் புரியும்படியான இந்நிகழ்வு நடைபெற முடிந்தது எப்படி? இந்தப் பிரச்சினையை விவரமாகப் பிற்பாடு ஆராய்வோம். இதன் முன் இந்தத் துரோகத்துக்குத் ''தத்துவார்த்த'' நியாய விளக்கம் தருவதற்காகச் செய்யப்படும் முயற்சிகளை முதற்கண் பரிசீலிக்கலாம். சமூக-தேசியவெறியின் பிரதான தத்துவங்களைக் குணநிர்ணயம் செய்ய முயலுவோம். பிளெஹானவையும் (பிரதானமாக ஆங்கிலோ-பிரெஞ்சு தேசியவெறியர்கள், ஹைண்டுமன், அவரது புதிய ஆதரவாளர்கள் ஆகியோரது வாதங்களையே இவர் திருப்பிக் கூறி வலியுறுத்துகின்றார்), காவுத்ஸ்கியையும்(பன்மடங்கு அதிக'' நுண்ணயம் வாய்ந்த'', அதிக அளவுக்குத் தத்துவார்த்த ஆழமுடையதாய்த் தோற்றமளிக்கும் வாதங்களை இவர் முன்வைக்கிருர்) இந்தத் தத்துவங்களுடைய பிரதிநிதிகளாகக் கருதலாம்.

இவற்றுள் முதிர்ச்சித் தரத்தில் மிக மட்டமாய் இருப்பது, ''ஆரம்பித்தது யார்?'' என்பதான தத்துவம். இதைப் பின்வருமாறு விரித்துரைக்கலாம்: நாங்கள் தாக்குதலுக்கு உள்ளாகினேம், தற்காத்துக் கொள்கிருேம்; ஐரோப்பாவில் சமாதானத்துக்குக் குந்தகம் விளைவித்தவர்களைச் சரியானபடி எதிர்த்தடித்தாக வேண்டும், பாட்டாளி வர்க்கத்தின் நலன்கள் இதைக் கோருகின்றன. எல்லா அரசாங்கங்களும் வெளியிட்டிருக்கும் பிரகடனங்களையும் உலகெங்குமுள்ள முதலாளித்துவ, சாக்கடைப் பத்திரிகைகள் எழுப்பும் கூப்பாடுகளையும் திரட்டித் திருப்பிக் கூறுவதே ஆகும் இது. இழிவார்ந்த இந்த அபத்தத்துக்குங்கூட பிளெஹானவ் ''இயக்கவியலைப்'' பற்றிய அவரது தவிர்க்கவொண்ணுத ஏமாற்றுச் சுட்டுரை

களைக் கொண்டு மேற்பூச்சிட்டுச் சிங்காரிக்கிருர்: ஸ்தூல மான சூழ்நிலையை நாம் மதிப்பீடு செய்ய வேண்டுமாயின், அதை ஆரம்பித்தவர் யாரென்று முதலில் கண்டுபிடித்து அவரைத் தண்டித்தாக வேண்டும்; ஏனைய எல்லாப் பிரச்சினை களும் வேருெரு சூழ்நிலை எழும் வரை காத்திருக்கவே வேண் டும். (பார்க்கவும்: பிளெஹானவின் யுத்தம், பாரிஸ், 1914 என்ற பிரசுரத்தையும், இதன் வாதங்களை அப்படியே திருப்பிக் கூறிக் கோலஸ்[12] இதழ் 86லும் 87லும் அக்செல்ரோது எழுதுவதையும்.) இயக்கவியலை அகற்றிவிட்டு அதற்குப் பதில் குதர்க்கவாதத்தைக் கைக்கொள்ளும் உன்னத காரியத்தில் பிளெஹானவ் ஒரு புதிய சாதனை கண்டிருக்கின்ருர். குதர்க்க வாதி பல ''வாதங்களில்'' ஒன்றைத் தாவிப் பற்றிக் கொண்டு விடுகிருர். உலகில் எதை வேண்டுமானுலும் நிரூபிப்பதற்கு ''வாதங்களைத்'' தேடிப் பிடிக்க முடியுமென்று நெடுங் காலத் துக்கு முன்பே ஹெகல் மிகவும் பொருத்தமாய்க் கூறினர். இயக்கவியலானது, குறிப்பிட்ட எந்தவொரு சமூக நிகழ்வு குறித்தும் அதன் வளர்ச்சியினூடே பன்முக ஆய்வு அவசியம் என்கிறது, புறத்தமைந்தவையும் வெளித்தோற்றமானவை யும் அடிப்படை இயக்கு சக்திகளாக, உற்பத்தி சக்திகளது வளர்ச்சியாக, வர்க்கப் போராட்டமாகக் குறுக்கிச் சுருக் கப்பட வேண்டும் என்கிறது. பிளெஹானவ் ஒரு மேற்கோளை ஜெர்மன் சமூக-ஜனநாயகப் பத்திரிகைகளிலிருந்து பிய்த் தெடுக்கிருர்: ஆஸ்திரியாவும் ஜெர்மனியும் ''ஆரம்பித்தன'' என்று யுத்தத்துக்கு முன்பே ஜெர்மானியர்களே ஒத்துக் கொள்கிருர்களே, பாருங்கள் இதை என்கிருர் அவர். கலி ஷியாவையும் ஆர்மீனியாவையும் பிறவற்றையும் பிடித்துக் கொள்வதற்கான ஜாரிஸ்டுத் திட்டங்களை ருஷ்ய சோஷலிஸ்டு கள் திரும்பத் திரும்ப அம்பலப்படுத்திஞர்கள், ஆனல் பிளெஹானவ் இவ்வுண்மையைக் குறிப்பிடவில்லை. குறைந்தது கடந்த முப்பது ஆண்டுக் காலத்துப் பொருளாதார, அர சுறவுத் துறை வரலாற்றையுங்கூட ஆய்ந்தறிய இம்மியளவு முயற்சிகூட செய்யவில்லை அவர். தற்போது போரிட்டுக் கொண்டிருக்கும் இரு தரப்பு அரசுகளது கொள்கைகளுக்கும் காலனிகளைக் கைப்பற்றுவதும், அயல் நாடுகளைச் சூறையாடு வதும், தம்மிலும் அதிக வெற்றி கண்டுவரும் போட்டி யாளர்களைத் துரத்தியடிப்பதும் கேடுறச் செய்வதும்தான்

முதுகெலும்பாய் இருந்தன என்பதை இந்த வரலாறு சந்தேகத்துக்கு இடமின்றி முடிவாய் நிரூபிக்கின்றது.*

யுத்தங்கள் குறித்து இயக்கவியலின் பிரதான கோட்பாடு என்னவெனில், முதலாளித்துவ வர்க்கத்தாரை மகிழ்

---

* பிரிட்டிஷ் சாத்துவிகவாதி பிரெயில்ஸ்ஃபோர்டு எழுதும் உருக்குக்கும் தங்கத்துக்குமான யுத்தம் (லண்டன், 1914; இது மார்ச் 1914 தேதியிட்ட ஒரு புத்தகம்!) மிகவும் அறிவுபுகட்டுவதாகும். சோஷலிஸ்டைப் போல் பாவனை செய்து கொள்வது இந்த ஆசிரியருக்குப் பிடிக்காத ஒன்றல்ல. தேசியப் பிரச்சினைகள் இப்போது பின்னணிக்குச் சென்றுவிட்டதை, தீர்க்கப்பட்டுவிட்டதை (பக்கம் 35), இவை இன்றையப் பிரச்சினைகளாக இருக்கவில்லை என்பதை, ''தற்கால அரசுறவுத் துறைக்குரிய தனிப் பெரும் பிரச்சினையாக'' (பக்கம் 36) இருப்பது பாக்தாது ரயில்வே, அதற்கு வேண்டிய தண்டவாளங்களுக்கான ஒப்பந்தங்கள், மொரோக்கோ சுரங்கங்கள் போன்றவையே என்பதை இவர் தெளிவாக உணருகின்றார். காலனிச் செல்வாக்கு மண்டலங்களைப் பிரிவினை செய்து கொள்வதையும் பாரிஸ் பங்குச் சந்தையில் ஜெர்மன் கடன் ஆவணங்களின் விலை விவரங்களையும் பற்றிய உடன்பாட்டின் அடிப்படையில் ஜெர்மனியுடன் ஒப்பந்தம் முடித்துக் கொள்ள காய்யோ செய்த முயற்சிகளை (1911லும் 1913லும்) எதிர்த்து பிரெஞ்சு தேசபக்தர்களும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகளும் போராடியதுதான் ''ஐரோப்பிய அரசுத்தந்திரத்தின் அண்மைகால வரலாற்றில் அதிக அறிவுபுகட்டும் நிகழ்ச்சிகளில்'' ஒன்றாகுமென இவ்வாசிரியர் கருதுவது பிழையற்றதாகும். பிரிட்டிஷ், பிரெஞ்சு முதலாளித்துவ வர்க்கத்தினர் இம்மாதிரியான ஒரு ஒப்பந்தம் முடிவாகாதபடி குறிக்கிட்டுத் தடுத்தனர் (பக்கங்கள் 38—40). பலவீன நாடுகளுக்கு மூலதனத்தை ஏற்றுமதி செய்வதே ஏகாதிபத்தியத்தின் நோக்கமாகும் (பக்கம் 74). பிரிட்டனில் இம்மாதிரியான மூலதனத்திலிருந்து கிடைத்த இலாபங்களின் மொத்தத் தொகை 1899ல் 9,00,00,000 பவுண்டுக்கும் 10,00,00,000 பவுண்டுக்குமிடையில் இருந்தது (ஜிஃபென்), 1909ல் 14,00,00,000 பவுண்டு இருந்தது (பாயிஷ்). இத்துடன் நாம் இன்னொன்றையும் குறிப்பிடலாம்: லாயிட்ஜார்ஜ் அண்மையில் ஒரு சொற்பொழிவில் இத்தொகையை 20,00,00,000 பவுண்டாய்க் கணக்கிட்டார், இது ஏறத்தாழ 200 கோடி ரூபிளாகும். கீழ்த்தரமான சதிச் செயல்கள், லஞ்சமளித்து உயர் பதவி வகிக்கும் துருக்கியர்களை வசப்படுத்தல், பிரிட்டிஷ் பிரபுக் குலத்தவரின் இளைய புதல்வர்

விப்பதற்காக மானவெட்கமின்றிப் பிளெஹானவ் திரித்துப் புரட்டும் இந்தக் கோட்பாடு என்னவெனில், ''அரசியலைப் பிற'' (அதாவது, வன்முறை) ''வழிகளில் தொடர்ந்து

---

களுக்கு இந்தியாவிலும் எகிப்திலும் சொகுசான வேலைகள்— இவைதாம் பிரதான இயல்புகள் (பக்கங்கள் 85-87). அற்ப சொற்பச் சிறுபான்மையினரே ஆயுதங்களிலிருந்தும் யுத்தங்களிலிருந்தும் இலாபமடிக்கின்றனர் என்கிருர் இவ்வாசிரியர், இந்தச் சிறுபான்மையோருக்கு ''சமூகத்திலிருந்தும்'', நிதித் துறையினரிடமிருந்தும் ஆதரவு கிடைக்கிறது என்கிருர். ஆனல் சமாதானத்தை ஆதரிப்போருக்குப் பின்னல் இருப்போர் பிளவுண்ட தேச மக்கள் (பக்கம் 93). இன்று சமாதானத்தையும் படைக்கலக் குறைப்பையும் பற்றிப் பேசும் சாத்துவிகவாதி நாளைக்கு யுத்தத் தளவாட கான்டிராக்டர்களையே முற்றிலும் சார்ந்திருக்கும் ஒரு கட்சியின் உறுப்பினர் என்பது தெரிய வருகிறது (பக்கம் 161). மூவர் உடன்பாடு வெற்றி பெறுமாயின் அது மொரோக்கோவைக் கைப்பற்றிக் கொள்ளும், பாரசீகத்தைப் பாகப் பிரிவினை செய்து கொள்ளும்; முக்கூட்டு[13] வெற்றி பெறுமாயின் அது டிரிப்போலியை எடுத்துக் கொள்ளும், பாஸ்னியாமீது தனக்குள்ள பிடியைப் பலப்படுத்திக் கொள்ளும், துருக்கியைக் கீழ்ப்படியச் செய்து கொள்ளும் (பக்கம் 167). 1906 மார்ச்சில் லண்டனும் பாரிசும் ருஷ்யாவுக்கு நூறு கோடிக் கணக்கில் தந்து, சுதந்திர இயக்கத்தை நசுக்குவதற்கு ஜாரிசத்துக்குத் துணை புரிந்தன (பக்கங்கள் 225-28); இன்று பாரசீகத்தை நசுக்க ருஷ்யாவுக்குப் பிரிட்டன் உதவுகின்றது (பக்கம் 229). ருஷ்யாவானது பால்கன் யுத்தத்தைத் தூண்டிவிட்டது (பக்கம் 230). இதில் புதுமையானது ஏதும் இருக்கிறதா, என்ன? இந்த விவரங்கள் யாவும் பொதுவாகத் தெரிந்தவையே, உலகெங்கும் சமூக-ஜனநாயகச் செய்தியேடுகளில் ஆயிரக்கணக்கான தரம் திரும்பத் திரும்ப எடுத்துரைக்கப்பட்டு வந்தவையே. யுத்தத்துக்குச் சற்றே முன்பு பிரிட்டிஷ் முதலாளித்துவவாதி ஒருவர் இவற்றையெல்லாம் முடிந்த அளவுக்குத் தெளிவாகவே பார்க்கின்ருர். உலகறிந்த இந்த எளிய உண்மைகளைப் பின்னணியாகக் கொள்கையில், ஜெர்மனியின் குற்றச் செயல் குறித்து பிளெஹானவும் பத்ரேசவும் முன்வைக்கும் தத்துவங்களும், முதலாளித்துவத்தில் படைக்கலக் குறைப்புக்கும் நிலையான சமாதானத்துக்குமாகிய ''வாய்ப்புகளைப்'' பற்றிய காவுத்ஸ்கியின் தத்துவமும் எப்படிப்பட்ட முட்டாள்தனமான பிதற்றலாய், அசட்டுத் திருப்திக்குரிய கபடமாய், மீனுக்கான பொய்க்கூற்ருய்க் காட்சி தருகின்றன!

நடத்திச் செல்வதே யுத்தம் எனப்படுவது''. யுத்தத்தின் வரலாறு பற்றிய மாபெரும் எழுத்தாளர்களில் ஒருவரும், தமது சிந்தனையில் ஹெகலினால் ஊக்குவிக்கப் பட்டவருமான கிளாவுசெவிட்ஸ் வகுத்திட்ட சூத்திரம் இது.* இதுவே தான் எப்போதும் மார்க்சும் எங்கெல்சும் ஏற்ற நிலையாகும். இவர்கள் எந்த யுத்தமும், சம்பந்தப்பட்ட அரசுகளுடைய— மற்றும் அந்நாடுகளில் இருக்கும் பல்வேறு வர்க்கங்களுடைய— அரசியலைக் குறிப்பிட்ட ஒரு காலகட்டத்தில் தொடர்ந்து நடத்திச் செல்வதே ஆகுமென்று கருதினர்.

பிளெஹானவின் செப்பமிலாத் தேசியவெறிக்கு எந்தத் தத்துவார்த்த நோக்குநிலை அடிப்படையாக அமைந்திருக்கிறதோ, அதுவேதான் இதனிலும் நுண்ணயமும் இதமான இணக்கப்பான்மையும் கொண்டதாகிய காவுத்ஸ்கியின் தேசியவெறிக்கும் அடிப்படையாக இருக்கிறது. எல்லா நாடுகளின் சோஷலிஸ்டுகளும் கடமை துறந்து அவரவர்தம் ''சொந்த'' முதலாளிகளின் தரப்புக்கு ஓடுவது சரிதானென ஆசி கூறுகையில் காவுத்ஸ்கி பின்வரும் வாதங்களையே கையாளுகிறார்:

''தமது தாயகத்தைப் பாதுகாப்பது ஒவ்வொருவருக்குமுரிய உரிமையும் கடமையும் ஆகும். எல்லாத் தேசங்களது சோஷலிஸ்டுகளுக்கும், எனது தேசத்துடன் யுத்தம் புரிவோரும் உட்பட எல்லா சோஷலிஸ்டுகளுக்கும் இந்த உரிமை உண்டென அங்கீகரிப்பதில்தான் மெய்யான சர்வதேசியம் அடங்கியிருக்கிறது... (பார்க்கவும்: 1914 அக்டோபர் 2, *Die Neue Zeit* ஏட்டையும் இவ்வாசிரியரின் பிற நூல்களையும்).

---

* Karl von Clausewitz, *Vom Kriege*, Werke, I Bd., S. 28.Cf. II.பார்க்கவும்: தொகுதி III, பக்கங்கள் 139-40: ''அரசாங்களின், தேசங்களின் அரசியல் உறவுகள் காரணமாகவே நங்கள் உண்டாகின்றன, இது எல்லார்க்கும் தெரிந்ததே; னும் யுத்தம் ஆரம்பமானதும் இந்த உறவுகள் முடிவுற்று வது போலவும், அறவே புதியதொரு சூழ்நிலை தோற்று கப்பட்டு இது தனக்கேயுரிய விதிகளை அனுசரிப்பது போல ம்தான் சாதாரணமாக எவரும் கற்பனை செய்து கொள் றார். இதற்கு நேர் மாறாக நாம் வலியுறுத்துவது என்னவெனில், அரசியல் உறவுகளைப் பிற வழிகளின் தலையீட்டுடன் தொடர்ந்து நடத்திச் செல்வதே யுத்தம் எனப்படுவது.''

இந்த இணையற்ற வாதமுறையானது சோஷலிசத்தைச் சொல்லுந் தரமில்லாக் கேவலக் கேலிக்குரியதாக்குவதால், இரண்டாம் வில்ஹெல்ம், இரண்டாம் நிக்கலாய் இவர்கள் இருவரின் உருவங்களை ஒரு பக்கத்திலும் பிளெஹானவ், காவுத்ஸ்கி இவர்கள் இருவரின் உருவங்களை மறு பக்கத்திலும் தாங்கிய ஒரு பதக்கத்தைத் தயாரித்தளிப்பதுதான் இதற்குரிய சிறந்த பதிலாக இருக்கும். ஜெர்மன் தொழிலாளர்கள் பிரெஞ்சுத் தொழிலாளர்களைச் சுட்டுக் கொல்வதையும், பிரெஞ்சுத் தொழிலாளர்கள் ஜெர்மன் தொழிலாளர்களைச் சுட்டுக் கொல்வதையும் ''தாயகப் பாதுகாப்பு'' என்பதன் பெயரில் நியாயமெனக் கூறுவதில்தான் மெய்யான சர்வதேசியம் அடங்கியிருக்கிறது என்கிறார்கள் இவர்கள்!

ஆனால் காவுத்ஸ்கியின் வாதமுறையிலுள்ள தத்துவார்த்த முதற்கோள்களை மேலும் நெருங்கிச் சென்று பரிசீலிக்கையில், சுமார் எண்பது ஆண்டுகளுக்கு முன்பு கிளாவுசெவிட்ஸ் எள்ளி நகையாடிய அதே கருத்து—அதாவது, யுத்தம் வெடித்திடும்போது, தேசங்களுக்கும் வர்க்கங்களுக்கும் இடையில் வரலாற்று வழியில் உருவாக்கப்பட்ட அரசியல் உறவுகள் யாவும் முடிவுற்று, அறவே புதியதொரு சூழ்நிலை எழுந்துவிடுகிறது என்ற அதே கருத்து—இவற்றில் இருப்பது புலப்படுகிறது! தாக்குவோரும் தற்காத்துக் கொள்வோரும் ''மட்டுமே'' இருக்கிறார்கள், ''தாயகத்தின் பகைவர்களை'' எதிர்த்தடிப்பது ''மட்டுமே'' நடைபெறுகிறது! ஆதிக்கம் புரியும் ஏகாதிபத்தியத் தேசங்கள் உலக மக்கட் தொகையில் பாதிக்கு மேற்பட்டோரைக் கொண்ட மிகப் பல தேசங்களை ஒடுக்குதல்; இந்தக் கொள்ளையில் பங்கு பெறுவதற்காக ஆதிக்க தேசங்களது முதலாளித்துவ வர்க்கங்களிடையே நடைபெறும் போட்டாபோட்டி; தொழிலாளி வர்க்க இயக்கத்தைப் பிளவுபடுத்தவும் நசுக்கியடக்கவும் முதலாளிகளுக்குள்ள விருப்பம் — இவையெல்லாம் பிளெஹானவின், காவுத்ஸ்கியின் கண்பார்வையிலிருந்து திடுமென மறைந்துவிடுகின்றன, ஆயினும் யுத்தத்துக்கு முன்பு பல பத்தாண்டுகளாக இவர்கள் இதே ''அரசியலை'' விவரித்துக் கூறிக் கொண்டிருந்தவர்கள்தாம்.

இச்சந்தர்ப்பத்தில் மார்க்சையும் எங்கெல்சையும் பற்றிய பொய்யான சுட்டுரைகள் சமூக-தேசியவெறியின் இவ்விரு

அதிபதிகளது வாதத்தின் மணிமுடியாகத் திகழ்கின்றன. பிரஷ்யாவின் 1813ஆம் ஆண்டின் தேசிய யுத்தத்தையும் ஜெர்மனியின் 1870ஆம் ஆண்டின் தேசிய யுத்தத்தையும் பிளெஹானவ் குறிப்பிடுகின்ருர்; 1854-55, 1859, 1870-71ஆம் ஆண்டுகளது யுத்தங்களில் யாருடைய வெற்றி (அதாவது, எந்த முதலாளித்துவ வர்க்கத்தின் வெற்றி) அதிகம் விரும்பத்தக்கதென மார்க்ஸ் பரிசிலனை செய்தாரென்றும், அதே போல 1876-77, 1897ஆம் ஆண்டுகளது யுத்தங்களில் மார்க்சியவாதிகள் பரிசீலனை செய்தனரென்றும் காவுத்ஸ்கி மெத்தப் படித்த மேதாவியின் பாவனையுடன் வாதாடுகிருர். கோட்பாட்டில் ஒத்தவையாக இராத சூழ்நிலைமைகளைச் சுட்டும் எடுத்துக்காட்டுகளைக் கூறிக்கொண்டிருப்பது எக்காலத்திலும் குதர்க்கவாதிகளுக்குரிய ஒரு பழக்கமாகும். இவர்கள் குறிப்பிடும் கடந்த காலத்து யுத்தங்கள், முதலாளித்துவ வர்க்கத்தாரது பல ஆண்டுகளுக்கு நீடித்து நடைபெற்ற தேசிய இயக்கங்களின் ''அரசியலைத் தொடர்ந்து நடத்திச் செல்கிறவையாக'' இருந்தவை; இந்தத் தேசிய இயக்கங்கள் அந்நியரது ஒடுக்குமுறை ஆட்சியை எதிர்த்தும், (துருக்கிய அல்லது ருஷ்ய) எதேச்சாதிகாரத்தை எதிர்த்தும் நடைபெற்றவை. அந்தக் காலத்தில் ஒன்றேதான் பிரச்சினை: எந்த முதலாளித்துவ வர்க்கத்தின் வெற்றி வேண்டற்பாலது என்பதுதான். இவ்வகைப்பட்ட யுத்தங்களுக்கு மார்க்சியவாதிகள் தேசிய வெறுப்பை மூடிவிட்டு முன்கூட்டியே தேசமக்களைத் தட்டியெழுப்பலாம் — மார்க்ஸ் 1848லும் அதற்குப் பிற்பாடு ருஷ்யாவுக்கு எதிராய் யுத்தம் நடைபெற வேண்டுமென அவர் அழைப்பு விடுத்த போதும் செய்தாரே, எங்கெல்ஸ் 1859ல் ஜெர்மனியின் ஒடுக்குமுறையாளர்களான மூன்றும் நெப்போலியன் மீதும் ருஷ்ய ஜாரிசத்தின் மீதும் ஜெர்மன் தேசிய வெறுப்பை வளர்த்திட்டாரே, அதே போல.*

---

* தாம் எதிர்ப்புரட்சித் தன்மையானவை என்பதை மெய்ந்நடப்பில் காட்டிக் கொண்டுவிட்ட ஐரோப்பிய தேசங்களுக்கு எதிராக, அதாவது ''ஸ்லாவ்களுக்கும் குறிப்பாய் ருஷ்யர்களுக்கும்'' எதிராகப் புரட்சிகர யுத்தம் வேண்டுமென 1848ல் மார்க்ஸ் ஏற்ற நிலைக்கு மீஸின்[14] ஏட்டில் திரு

பிரபுத்துவத்தையும் எதேச்சாதிகாரத்தையும் எதிர்த்துப் போராடும் ''அரசியலைத் தொடர்ந்து நடத்திச் செல்வதை''—சுதந்திரத்துக்காகப் போராடிய முதலாளித்துவ வர்க்கத்தின் ''அரசியலைத் தொடர்ந்து நடத்திச் செல்வதை'' —கிழடு தட்டிய, அதாவது ஏகாதிபத்திய, முதலாளித்துவ வர்க்கத்தினுடைய, அதாவது அனைத்து உலகையும் சூறையாடியுள்ள ஒரு முதலாளித்துவ வர்க்கத்தினுடைய, நிலப்பிரபுக்களுடன் கூட்டு சேர்ந்து கொண்டு பாட்டாளி வர்க்கத்தை நசுக்க முயலும் பிற்போக்குவாத முதலாளித்துவ வர்க்கத்தினுடைய ''அரசியலைத் தொடர்ந்து நடத்திச் செல்வதுடன்'' ஒப்பிடுவதானது பாலைச் சுண்ணும்பு நீருடன் ஒப்பிடுவது போன்றதே ஆகும். ''முதலாளித்துவ வர்க்கப் பிரதிநிதிகளாகிய'' ராபஸ்பேரையும் கரிபால்டியையும் மெலயாபவையும், ''முதலாளித்துவ வர்க்கப் பிரதிநிதிகளே ஆகிய'' மில்லரானையும் சலாந்திராவையும் குச்கோவையும் போன்றோருடன் ஒப்பிடுவதற்கு ஒத்ததே ஆகும் அது. மாபெரும் முதலாளித்துவப் புரட்சியாளர்கள் தத்தமது முதலாளித்துவத் ''தாயகம்'' குறித்துப் பேச வரலாற்று வழியில் உரிமை

---

கர்தேனின் ''புரட்சிகரத் தேசியவெறி''—ஆம், தேசியவெறியே—என்பதாகப் பெயர் சூட்டுகிருர். மார்க்சைப் பற்றிய இந்த நிந்தனையானது இந்த ''இடதுசாரி'' சோஷலிஸ்டு-புரட்சியாளரின் சந்தர்ப்பவாதத்தை (அல்லது—சரியான படிச் சொல்வதெனில்—சந்தர்ப்பவாதத்தையும் மற்றும் துச்சத்தனத்தையும்) மீண்டுமொரு தரம் புலப்படுத்திக் காட்டுகிறது. எதிர்ப்புரட்சித் தேசங்களுக்கு எதிரான புரட்சி யுத்தத்தை மார்க்சியவாதிகளாகிய நாங்கள் எப்போதுமே ஆதரித்து வந்துள்ளோம், இனியும் ஆதரிக்கவே செய்வோம். உதாரணமாய், 1920ல் அமெரிக்காவிலோ, ஐரோப்பாவிலோ சோஷலிசம் வெற்றியடைந்து, ஜப்பானும் சீனுவும் என்பதாக வைத்துக் கொள்வோம், தமது பிஸ்மார்க்குகளை அப்போது நமக்கு எதிராகச் செயல்பட வைக்குமாயின்—ஆரம்பத்தில் அரசுறவுத் துறையில் மட்டும்தான் என்ருலும்—அவற்றுக்கு எதிராய்த் தாக்குதல் தொடுக்கும் புரட்சிகர யுத்தத்துக்கு நிச்சயம் நாம் ஆதரவாகவே இருப்போம். திரு கர்தேனினே, உமக்கு இது விபரீதமாகவா படுகிறது? ஆனல் நீர்தான் ரோப்ஷின் ரகத்தைச் சேர்ந்த புரட்சியாளர் ஆயிற்றே!

பெற்றிருந்தவர்கள், பிரபுத்துவத்துக்கு எதிரான போராட்டத்தில் புதிய தேசங்களைச் சேர்ந்த கோடிக் கணக்கான மக்களுக்குத் தலைமை தாங்கி நாகரிக வாழ்வை நோக்கி அவர்களை இட்டுச் சென்றவர்கள்—இவர்கள்பால் ஆழ்ந்த மரியாதை உணர்வு கொள்ளாமல் எவரும் மார்க்சியவாதியாக இருக்க முடியாது. ஜெர்மன் ஏகாதிபத்தியவாதிகளால் பெல்ஜியம் தாக்கி நசுக்கப்படுவது சம்பந்தமாகவோ, ஆஸ்திரியாவையும் துருக்கியையும் கொள்ளையடிப்பது குறித்து பிரிட்டன், பிரான்சு, ருஷ்யா, இத்தாலி இவற்றின் ஏகாதிபத்திய வாதிகளுக்கு இடையிலுள்ள ஒப்பந்தம் சம்பந்தமாகவோ "தாயகப் பாதுகாப்பு" என்பதாய்ப் பேசுவோராகிய பிளெஹானவ், காவுத்ஸ்கி இவர்களது குதர்க்கத்தின்பால் இகழ்ச்சி கொள்ளாமலும் எவராலும் மார்க்சியவாதியாக இருக்க முடியாது.

சமூக-தேசியவெறி பற்றிய இன்னொரு "மார்க்சியத்" தத்துவமும் இருக்கிறது, அது கூறுவதாவது: முதலாளித்துவத்தின் வேகமான வளர்ச்சியை அடிப்படியாகக் கொண்டதாகும் சோஷலிசம்; எனது நாட்டில் முதலாளித்துவத்தின் வளர்ச்சியும், ஆகவே அங்கே சோஷலிசத்தின் உதயமும் எனது நாட்டின் வெற்றியால் துரிதப்படுத்தப்படும்; எனது நாட்டின் தோல்வி அதன் பொருளாதார வளர்ச்சியையும், ஆகவே அங்கே சோஷலிசத்தின் உதயத்தையும் மந்தப்படுத்திவிடும். இந்த ஸ்துருவேவியத் தத்துவம் ருஷ்யாவில் பிளெஹானவாலும், ஜெர்மானியர்களிடையே லெஞ்சாலும் ஏனையோராலும் வளர்க்கப்பட்டிருக்கிறது. கொச்சையான இத்தத்துவத்தை எதிர்த்து—அதை வெளிப்படையாகவே ஆதரித்து நிற்கும் லெஞ்சை எதிர்த்தும், அதை மறைமுகமாக ஆதரித்து நிற்கும் குனோவை எதிர்த்தும்—வாதாடுகிறார் காவுத்ஸ்கி. இதில் காவுத்ஸ்கியின் நோக்கம் எல்லாம், மேலும் நுண்ணயம் வாய்ந்த, வஞ்சகமான தேசியவெறித் தத்துவத்தின் அடிப்படையில் எல்லா நாடுகளின் சமூக-தேசியவெறியர்களையும் இணக்குவிப்பதுதான்.

கொச்சையான இந்தத் தத்துவம் குறித்து நாம் அதிகம் கூறத் தேவையில்லை. ஸ்துருவேயின் **விமர்சனக் குறிப்புகள்** 1894ல் வெளிவந்தபின் கடந்த இருபது ஆண்டுகளில் அறிவார்ந்த ருஷ்ய முதலாளித்துவவாதிகள் புரட்சிகர உள்

ளடக்கம் துடைத்தகற்றப்பட்ட ஒரு ''மார்க்சியத்தை'' மூடு திரையாகக் கொண்டு அதன் மறைவில் தமது கருத்துக்களை முன்வைத்தும், தமது விருப்பங்களுக்காகப் பாடுபட்டும் செல்வதென்ற அவர்களது இந்தப் ''பழக்கம்'' ருஷ்ய சமூக-ஜனநாயகவாதிகளுக்கு நன்கு அறிமுகமான ஒன்ருகிவிட்டது. ஸ்துரூவேவியம் ருஷ்யப் பிரயத்தனம் மட்டுமல்ல, அண்மைக் கால நிகழ்ச்சிகள் தெளிவாகவே நிரூபிப்பது போல சர்வ தேசப் பிரயத்தனமும் ஆகும்—முதலாளித்துவத் தத்துவ வாதிகள் ''அன்பைக் கொண்டு'' மார்க்சியத்தை ஒழித்துக் கட்டுவதற்காக, தமது அரவணைப்புகளைக் கொண்டு அதை நசுக்கிவிடுவதற்காக, மார்க்சியத்தின் ''கிளர்ச்சித் தன்மை யதான'', ''வாய்வீச்சான'', ''பிளாங்கிய-கற்பனுவாத'' இயல்பினைத் தவிர்த்து ''மெய்யாகவே விஞ்ஞான வழிப் பட்ட'' ''எல்லா'' இயல்புகளையும் கூறுகளையும் ஏற்றுக் கொள்வதாகப் பாசாங்கு செய்வதன் மூலம் அதைக் கொல் வதற்காக மேற்கொள்ளும் பிரயத்தனமாகும். வேறு வித மாகக் கூறினல், சீர்திருத்தங்களுக்கான போராட்டமும், (பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் இல்லாத) வர்க்கப் போராட்டமும், ''சோஷலிச இலட்சியங்களைப்'' ''பொதுப் பட'' அங்கீகரித்தலும், முதலாளித்துவத்துக்குப் பதிலாய் ஒரு ''புதிய முறையைக்'' கொண்டுவருதலும் அடங்கலாக, மிதவாத முதலாளித்துவ வர்க்கத்தாருக்கு ஏற்புடைத்தவை யாவற்றையும் அவர்கள் மார்க்சியத்திடமிருந்து எடுத்துக் கொள்கிருர்கள்; மார்க்சியத்தின் உயிருள்ள ஆன்மாவை ''மட்டும்'', அதன் புரட்சிகர உள்ளடக்கத்தை ''மட்டும்'' அவர்கள் விட்டொழித்து விடுகிருர்கள்.

மார்க்சியமானது விடுதலைக்கான பாட்டாளி வர்க்க இயக் கத்தின் தத்துவமாகும். ஆகவே, மார்க்சியத்துக்குப் பதில் ஸ்துரூவேவியத்தைக் கொண்டுவந்து அமர்த்திடுவதற்கான எந்த முயற்சி குறித்தும் வர்க்க உணர்வு படைத்த தொழி லாளர்கள் தலையாய கவனம் செலுத்துவது அவசியமாகும். இப்படிக் கொண்டுவந்து அமர்த்திடும் இந்த நிகழ்ச்சிப் போக்குக்கு இயக்கு சக்திகளாக இருப்பவை பல்வேருன வை, பலதரப்பட்டவை. மூன்று பிரதான சக்திகளை மட்டும் இங்கு குறிப்பிடுகிருேம்: (1) மார்க்ஸ் சொன்னதே சரியென நிரூபித்துக் காட்டும் விவரப் பொருள்களை மேலும் மேலும்

அதிகமாக விஞ்ஞானத்தின் வளர்ச்சியானது அளித்துக் கொண்டிருக்கிறது. இதனுல் மார்க்சை எதிர்த்துக் கள்ளத் தனமான முறையில் போராடுவது அவசியமாகிறது—மார்க்சியத்தின் கோட்பாடுகளேப் பகிரங்கமாக எதிர்க்காமல், மார்க்சியத்தை ஏற்றுக் கொள்வதாகப் பாசாங்கு செய்து கொண்டு, அதேபோது குதர்க்கவாதம் புரிந்து அதை உயிராற்றல் இழக்கச் செய்து, முதலாளித்துவ வர்க்கத்தாருக்குத் தீங்கிழைக்க முடியாத புனிதப் ''பூசையறைப் படமாக'' மாற்றுவது அவசியமாகிறது. (2) சமூக-ஜனநாயகக் கட்சிகளிடத்தே சந்தர்ப்பவாதத்தின் வளர்ச்சியானது மார்க்சியம் இவ்வாறு ''திரித்துப் பதனம் செய்யப்படுதலே'' ஊக்குவித்து, சந்தர்ப்பவாதத்துக்கு எல்லா வழிகளிலும் விட்டுக் கொடுத்துச் செல்வதற்கு நியாயம் கூறத்தக்கவாறு மார்க்சியத்தைத் தகவமைக்கிறது. (3) ஏகாதிபத்தியச் சகாப்தமானது, தனியுரிமை பெற்று ஏனைய எல்லாத் தேசங்களேயும் ஒடுக்கும் ''மாபெரும்'' தேசங்களிடையே உலகம் பங்கிடப்பட்டுவிடும் சகாப்தமாகும். இந்தத் தனியுரிமைகளின் விளேவாகவும் இந்த ஒடுக்குமுறையின் விளேவாகவும் கைவரப் பெறும் கொள்ளேயில் சில கவளங்கள் குட்டிமுதலாளித்துவப் பிரிவினரில் குறிப்பிட்ட சில பகுதியோருக்கும் தொழிலாளி வர்க்கப் பிரபுக்குலத்தோருக்கும் அதிகாரவகுப்பாருக்கும் நிச்சயம் கிடைக்கவே செய்கின்றன. பாட்டாளி வர்க்கத்தவரிலும் உழைப்பாளிப் பெருந்திரளினரிலும் அற்பசொற்பச் சிறுபான்மையினராகிய இப்பகுதியோர் ''ஸ்துரூவேவியத்தை'' நோக்கி ஈர்க்கப்படுகின்றனர், ஏனெனில் இவர்கள் எல்லா தேசங்களேயும் சேர்ந்த ஒடுக்கப்பட்ட பெருந்திரளினருக்கு எதிராகத் தமது ''சொந்த'' தேசிய முதலாளித்துவ வர்க்கத்துடன் கூட்டணி கொண்டிருப்பதற்கு ''ஸ்துரூவேவியம்'' நியாயம் கற்பிக்கிறது. பிற்பாடு நாம் அகிலத்தின் தகர்வுக்கான காரணங்கள் குறித்துப் பேசுகையில், இதை எடுத்துரைக்க நமக்குச் சந்தர்ப்பம் கிடைக்கும்.

## 4

சமூக-தேசியவெறியின் மிக அதிக நுண்ணயம் படைத்த தத்துவமாக, விஞ்ஞான வழிப்பட்டதாயும் சர்வதேசத் தன்மையதாயும் தோன்றும்படி மிகவும் சாமர்த்தியமாய் ஒப்பனே

செய்யப்பட்ட தத்துவமாக இருப்பது, காவுத்ஸ்கி முன்வைத்துள்ள ''அதீத-ஏகாதிபத்தியம்'' எனும் தத்துவமாகும். இதோ இந்தத் தத்துவத்தின் மிகத் தெளிவான, மிகத் துல்லியமான, மிக அண்மைக் காலத்தியதான விளக்கம் இதன் ஆசிரியரின் சொற்களில்:

''பிரிட்டனில் காப்பு வரி இயக்கத்தின் தணிவு; அமெரிக்காவில் சுங்க வரிகளின் இறக்கம்; படைக் கலக் குறைப்பை நோக்கியமைந்த போக்கு; யுத்தத்துக்கு உடனடியாக முந்திய ஆண்டுகளில் பிரான்சிலிருந்தும் ஜெர்மனியிலிருந்தும் மூலதன ஏற்றுமதியின் அதிவேகச் சரிவு; முடிவில் நிதி மூலதனத்தின் பல்வேறு கோஷ்டிகளிடையிலுமான சர்வதேசப் பிணைவின் வளர்ச்சி—இவை யாவும் என்னைத் தற்போதைய ஏகாதிபத்தியக் கொள்கையினிடத்தில் ஒரு புதிய அதீத-ஏகாதிபத்தியக் கொள்கை உதித்தெழ முடியாதா என்று, தேசிய நிதி மூலதனத்தின் பரஸ்பர போட்டாபோட்டிக்குப் பதில் சர்வதேச அளவில் ஒன்றுபட்ட நிதி மூலதனத்தால் உலகம் கூட்டு முறையில் சுரண்டப்படும் முறையைப் புகுத்தக்கூடிய ஒரு புதிய அதீத-ஏகாதிபத்தியக் கொள்கை உதித்தெழ முடியாதா என்று சிந்திக்க வைத்துள்ளன. முதலாளித்துவத்தின் இம்மாதிரியான ஒரு புதிய கட்டம் எப்படியும் சிந்தனைக்குரியதே. இது சாதிக்கப்படக் கூடியதா? இந்தக் கேள்விக்கு நாம் பதிலளிப்பதற்குப் போதுமான முதற்கூறுகள் இன்னும் ஏற்பட்டாகவில்லை....'' (*Die Neue Zeit*, இதழ் 5, 1915 ஏப்ரல் 30, பக்கம் 144).

''தற்போதைய யுத்தத்தின் நடப்பும் விளைவும் இது சம்பந்தமாகத் தீர்மானகரமானதாகிவிடலாம். நிதி முதலாளிகளிடையிலும் தேசிய வெறுப்பினை உச்ச அளவுக்குத் தூண்டிவிடுவதன் மூலமும், படைக்கல உற்பத்திப் போட்டியைக் கடுமையாக்குவதன் மூலமும், இரண்டாவது உலக யுத்தம் ஒன்றைத் தவிர்க்க முடியாததாக்குவதன் மூலமும் தற்போதைய யுத்தம் அதீத-ஏகாதிபத்தியத்தின் பலவீனமான ஆரம்பக் கூறுகளை அடியோடு ஒழித்துக் கட்டிவிடலாம். இந்த நிலைமைகளில், ஆட்சியதிகாரத்துக்கான பாதை என்ற எனது பிரசுரத்தில் நான் முன்னறிந்து வரையறுத்துக் கூறியது பயங்கரமான பரிமாணங்களில் மெய்ப்பிக்கப்பட்டுவிடும்; வர்க்கப் பகைமைகள் மேலும்மேலும் கூர்மையாகி, அதனுடன் கூடவே முதலாளித்துவத்தின் நெறிமுறை நசிவும் [சொல்லின் நேர்ப்பொருளில்: ''தொழில் முறிவு, Abwirtschaftung'', தகர்வு] ஏற்படும்....'' [இந்தப் பகட்டுச் சொல்லின் மூலம் காவுத்ஸ்கி ''பாட்டாளி வர்க்கத்துக்கும் நிதி மூலதனத்துக்கும் இடையிலுள்ள பகுதியோர்'', அதாவது ''அறிவுத்

துறையினர், குட்டிமுதலாளித்துவப் பிரிவோர், மற்றும் சிறு முதலாளிகளுங்கூட'' முதலாளித்துவத்தின் பால் கொண்டுள்ள ''பகைமையையே'' குறிப்பிடுகிருர் என்பதைக் கவனிக்க வேண்டும்.] ...''ஆனல் யுத்தம் வேறு விதமாகவும் முடிவுறலாம். அதீத-ஏகாதிபத்தியத்தின் பலவீனமான ஆரம்பக் கூறுகள் பலமடைவதற்கு அது வகை செய்யலாம். அதன் படிப்பினைகள்'' [இதைக் கவனிக்கவும்!] ''சமாதான நிலைமைகளில் நாம் நீண்ட நெடுங் காலத்துக்குக் காத்திருக்க வேண்டியிருக்கும்படியான வளர்ச்சிகளைத் துரிதப்படுத்தலாம். அது இப்படி வகை செய்யுமாயின், தேசங்களுக்கு இடையிலான உடன்பாட்டுக்கும் படைக்கலக் குறைப்புக்கும் நிலையான சமாதானத்துக்கும் வகை செய்யுமாயின், யுத்தத்துக்கு முன்பு முதலாளித்துவத்தின் மேன்மேலும் கூடுதலான நெறிமுறை நசிவுக்கு இட்டுச் சென்ற காரணங்களில் படுமோசமானவை மறைந்துவிடக் கூடும்''. இந்தப் புதிய கட்டம் பாட்டாளி வர்க்கத்துக்குப் ''புதிய கேடுகளை'', ''ஒருக்கால் படுமோசமானவற்றையும்'' கொண்டுவரவே செய்யும், ஆனல் ''குறிப்பிட்ட ஒரு காலத்துக்கு'', ''அதீத-ஏகாதிபத்தியம்'' ''முதலாளித்துவத்தின் கட்டுக்கோப்புக்குள்ளேயே புதிய நம்பிக்கைகளுக்கும் வாய்ப்பு வளங்களுக்குமான ஒரு சகாப்தத்தைத் தோற்றுவிக்க முடியும்'' (பக்கம் 145).

இந்தத் ''தத்துவத்திலிருந்து'' சமூக-தேசியவெறிக்கான நியாய விளக்கம் எப்படிப் பெறப்படுகிறது?

''தத்துவவாதியான'' ஒருவருக்கு அவ்வளவாக ஒவ்வாத விபரீத முறையில்தான், அதாவது பின்வரும் முறையில்தான் பெறப்படுகிறது:

ஏகாதிபத்தியமும் அது மூண்டெழச் செய்திடும் யுத்தங்களும் தற்செயலானவை அல்ல, நிதி மூலதனத்தின் ஆதிக்கத்தை ஏற்படச் செய்திருக்கும் முதலாளித்துவத்தின் தவிர்க்கவொண்ணுத விளைவுகளே ஆகும் என்று கூறுகிருர்கள், ஜெர்மனியிலுள்ள இடதுசாரி சமூக-ஜனநாயகவாதிகள். ஆகவே, ஒப்பளவில் அமைதி வழிப்பட்ட வளர்ச்சி முடிவுற்றுவிட்டதால், புரட்சிகர வெகுஜனப் போராட்டத்தின் பாதைக்கு மாறிச் செல்வது அவசியமாகிறது. ''வலதுசாரி'' சமூக-ஜனநாயகவாதிகள் வெட்கம் சிறிதுமின்றி துணிந்து கூறுகிருர்கள்: ஏகாதிபத்தியம் ''அவசியமாக'' இருப்பதால், நாமும் ஏகாதிபத்தியவாதிகளாகவே இருக்க வேண்டும் என்று. ''மையவாதியின்'' பாத்திரத்தை ஏற்றிருக்கும்

காவுத்ஸ்கி இந்த இரு கருத்தோட்டங்களையும் இணக்கு விக்க முயலுகிறார்.

''கடைகோடியான இடதுசாரியினர்'' தவிர்க்க முடியாத ஏகாதிபத்தியத்துக்கு ''நேரெதிர் நிலையாக'' சோஷலிசத்தை முன்வைக்க விரும்புகின்றனர் என்று தேசிய அரசும் ஏகாதிபத்திய அரசும் அரசுகளின் சங்கமும் (நூரென்பர்க், 1915) என்ற தமது பிரசுரத்தில் காவுத்ஸ்கி எழுதுகிறார். அதாவது, ''முதலாளித்துவ ஆதிக்கத்தின் எல்லா வடிவங்களுக்கும் நேரெதிராக அரை நூற்றாண்டுக் காலமாக நாம் நடத்தி வந்திருக்கும் சோஷலிசப் பிரசாரத்தை மட்டுமின்றி, சோஷலிசத்தை உடனடியாகவே கைகூடச் செய்தலையே முன்வைக்கின்றனர். இது மிகவும் தீவிரமானதாகவே தோன்றுகிறது, ஆனால் இது சோஷலிசத்தை உடனடியாகவே நடைமுறையில் கைகூடச் செய்வதில் நம்பிக்கை கொண்டிராதவர் எவரையும் ஏகாதிபத்தியத்தின் முகாமுக்கு விரட்டியடிக்கவே செய்யும்'' (பக்கம் 17, அழுத்தம் எம்முடையது).

சோஷலிசத்தை உடனடியாகக் கைகூடச் செய்தல் என்பதாகப் பேசுகையில் காவுத்ஸ்கி ஒரு தந்திரோபாயத்தைக் கையாளுகிறார்; ஜெர்மனியில், குறிப்பாக இராணுவத் தணிக்கை முறை ஏற்பாட்டின் கீழ், புரட்சிகரச் செயலைப் பற்றிப் பேச முடியாத நிலைமையினை அவர் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கிறார். புரட்சிகரச் செயலுக்கு ஆதரவாகவும், இச்செயலுக்குத் தயார் செய்யும் விதத்திலும் உடனடிப் பிரசாரம் வேண்டுமென்று கட்சியிடம் இடதுசாரியினர் கோரி வருகிறார்களே அன்றி, ''சோஷலிசத்தை உடனடியாகவே நடைமுறையில் கைகூடச் செய்ய வேண்டும்'' என்று கோரவில்லை.

ஏகாதிபத்தியத்தின் இன்றியமையாமையிலிருந்து (*necessity*) இடதுசாரியினர் புரட்சிகரச் செயலின் இன்றியமையாமையை உய்த்துணர்கிறார்கள். ஆனால் காவுத்ஸ்கிக்கு ''அதீத-ஏகாதிபத்தியமெனும் தத்துவம்'' சந்தர்ப்பவாதிகளுக்கு நியாய விளக்கம் கற்பிப்பதற்கான வழியாகவே பயன்படுகிறது; சந்தர்ப்பவாதிகள் முதலாளித்துவ வர்க்கத்தாரின் தரப்புக்குப் போய்விடவில்லை, சோஷலிசம் உடனடியாகக் கைவரப் பெற முடியுமென ''நம்பாதவர்களும்'', படைக்

கலக் குறைப்புக்கும் நிலையான சமாதானத்துக்குமான ஒரு புதிய ''சகாப்தத்தை'' வரச் ''செய்யலாமென'' எதிர்பார்க்கிறவர்களுமே ஆவர் என்பதான எண்ணத்தை ஏற்படுத்தும் விதத்தில் சூழ்நிலையை விவரிப்பதற்கான ஒரு வழியாகவே பயன்படுகிறது. இந்தத் ''தத்துவத்திலிருந்து'' பெறப்படுவது பின்வருவதே அன்றி வேறு எதுவும் அல்ல: சந்தர்ப்பவாதிகளும் அதிகாரபூர்வமான சமூக-ஜனநாயகக் கட்சிகளும் முதலாளித்துவ வர்க்கத்தாருடன் ஒட்டிக் கொண்டிருப்பதும், தற்போதைய கொந்தளிப்பான சகாப்தத்தில் இவர்கள் புரட்சிகரமான, அதாவது பாட்டாளி வர்க்கத்துக்குரியதான போர்த்தந்திரத்தை நிராகரிப்பதும் நியாயமே என்பதாக விளக்கம் தரும் பொருட்டு, முதலாளித்துவத்தின் ஒரு புதிய, சமாதான வழிப்பட்ட சகாப்தம் வரலாமென்ற நம்பிக்கையைக் காவுத்ஸ்கி தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கிறார். பாஸெல் தீர்மானத்தின் புனிதப் பிரகடனங்களை மீறி அவர் இவ்வாறு செய்கிறார்!

அதேபோது, இந்தப் புதிய கட்டம் குறிப்பிட்ட, திட்டவட்டமான சூழல்களிலிருந்தும் நிலைமைகளிலிருந்தும் எழுவதாகுமென்றும், தவிர்க்க முடியாதபடி எழுவதாகுமென்றும் காவுத்ஸ்கி கூறவில்லை. இதற்கு மாறாக, இந்தப் புதிய கட்டம் ''சாதிக்கப்படக் கூடியதா'', இல்லையா என்று தம்மால் இதற்குள் தீர்மானிக்கக்கூட முடியவில்லையென அவர் பட்டவர்த்தனமாகவே கூறுகின்றார். புதிய சகாப்தத்தைச் சுட்டுவனவாய்க் காவுத்ஸ்கி குறிப்பிட்டிருக்கும் ''போக்குகளைக்'' கவனியுங்கள். வியக்கத்தக்கதாக இருப்பது என்னவெனில், பொருளாதார உண்மைகளில் ''படைக்கலக் குறைப்பை நோக்கியமைந்த போக்கினையும்'' இவ்வாசிரியர் சேர்த்துக் கொள்கிறார்! சூதறியாப் பாமரத்தனமான பேச்சுக்கும் கனவுலகக் கற்பனைகளுக்கும் பின்னால், முரண்பாடுகள் சாந்தமடைவதாகக் கூறும் தத்துவத்துக்கு சிறிதும் ஒவ்வாதனவாய் இருக்கும் மறுக்க முடியாத உண்மைகளிலிருந்து காவுத்ஸ்கி ஓடி ஒளிந்துகொள்ள முயலுகிறார் என்பதுதான் இதற்கு அர்த்தம். காவுத்ஸ்கியின் ''அதீத-ஏகாதிபத்தியம்'' —இந்தப் பதம் இவ்வாசிரியர் சொல்ல விரும்புவதை ஓரளவுகூட வெளியிடுவதாக இல்லை என்பதை இடைக்குறிப்பாய் இங்கு கூறலாம்—முதலாளித்துவத்தின் முரண்பாடுகள்

வெகுவாய்ச் சாந்தமடைவதைக் குறிப்பதாகும். ''பிரிட்டனிலும் அமெரிக்காவிலும் காப்புவரிமுறை தணிந்து வருவதாக'' நம்மிடம் சொல்கிறார். ஆனால் புதிய சகாப்தத்தை நோக்கியமைந்த அற்பசொற்ப அளவிலான போக்காவது இருக்கிறதா எங்காவது? மிதமிஞ்சிய காப்புவரிமுறை தற்போது அமெரிக்காவில் தணிவுற்று வருகிறது, ஆனால் காப்புவரிமுறை தொடர்ந்து இருந்து கொண்டுதான் இருக்கிறது, அதே போல பிரிட்டனுக்குச் சாதகமான தனியுரிமைகளும் சலுகைச் சுங்கவரிகளும் அந்நாட்டின் காலனிகளில் தொடர்ந்து இருந்தே வந்துள்ளன. முதலாளித்துவத்தின் முந்தைய ''சமாதான வழிப்பட்ட'' காலக்கூறிலிருந்து தற்போதைய ஏகாதிபத்தியக் காலக்கூறுக்கு ஏற்பட்ட மாற்றம் எதை அடைப்படையாகக் கொண்டிருந்துள்ளது என்பதை நினைவு கூர்வோமாக: தடையில்லாப் போட்டி மறைந்து ஏகபோக முதலாளித்துவக் கூட்டுகளுக்கு இடமளித்துள்ளது; உலகம் பங்கிடப்பட்டுவிட்டது. இவ்விரு உண்மைகளும் (காரணக் கூறுகளும்) உலகளாவிய முக்கியத்துவம் வாய்ந்தவை என்பது தெளிவு. மூலதனம் தடை ஏதுமின்றி தனது காலனிகளைப் பெரிதாக்கிச் செல்லவும் ஆப்பிரிக்காவிலும் பிற இடங்களிலும் பிடிபடாத பரப்புகளைப் பிடித்துக்கொள்ளவும் முடியும்படியான நிலையில் இருந்த வரை, மூலதன ஒன்றுகுவிப்பு இன்னமும் பலவீனமாகவே இருந்து, ஏகபோகத் தொழில் நிறுவனங்கள்—அதாவது, தொழில் துறையின் ஒரு கிளை முழுவதிலும் ஆதிக்கம் புரிய வல்லதாகிவிடும்படி பெரும் பரிமாணமுள்ள தொழில் நிறுவனங்கள்—இல்லாதிருந்த வரை, தடையில்லா வாணிபமும் சமாதான வழியிலான போட்டியும் சாத்தியமாகவும் அவசியமாகவும் இருந்தன. இம்மாதிரியான ஏகபோகத் தொழில் நிறுவனங்களின் தோற்றமும் வளர்ச்சியும் (இந்த நிகழ்ச்சிப்போக்கு பிரிட்டினிலோ அமெரிக்காவிலோ நின்றுவிட்டது? யுத்தம் இதனை மேலும் வேகம் பெறச் செய்து கடுமையாக்கியுள்ளது என்பதை மறுக்கும் துணிவு காவுத்ஸ்கிக்குங்கூட இருக்காது) முற்காலத்துக்குரிய தடையில்லாப் போட்டியைச் சாத்தியமற்றதாக்கியுள்ளன; தடையில்லாப் போட்டியின் அடிநிலையை அவை அகற்றிவிட்டன. அதேபோது உலகம் பங்கிடப்பட்டுவிட்ட நிலைமையானது முதலாளிகளைச் சமதாான வழிப்பட்ட

விஸ்தரிப்பிலிருந்து காலனிகள், செல்வாக்கு மண்டலங்களின் மறுபங்கிட்டுக்கான ஆயுதமேந்திய போராட்டத்துக்கு மாறிச் செல்லும்படிக் கட்டாயப்படுத்துகிறது. இரண்டு நாடுகளில் காப்புவரிமுறை நனிவதானது இது சம்பந்தமாக எதையும் மாற்ற முடியுமென நினைப்பது நகைக்கத்தக்கதாகும்.

மேலும், ஒருசில ஆண்டுகளில் இரண்டு நாடுகளிலிருந்து மூலதன ஏற்றுமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சியையும் பரிசீலிப்போமாக. பிரான்சும் ஜெர்மனியுமான இவ்விரு நாடுகளும் ஹார்ம்ஸின் புள்ளிவிவரங்களின்படி *1912*ல் தலைக்கு சுமார் *3,500* கோடி மார்க் (சுமார் *1,700* கோடி ரூபிள்) வரை வெளிநாடுகளில் முதலீடுகளைப் பெற்றிருந்தன, அதே காலத்தில் பிரிட்டன் மட்டும் இத்தொகையைப் போல் இரு மடங்கானதைப் பெற்றிருந்தது.* மூலதன ஏற்றுமதிகளின் பெருக்கம் முதலாளித்துவத்தில் ஒருபோதும் சீராக ஏற்பட்டதில்லை, ஏற்பட்டிருக்கவும் முடியாது. மூலதனத் திரட்டல் குறைந்துவிட்டதாகவோ, உள்நாட்டுச் சந்தையின் கொள்திறனில் முக்கிய மாறுதல் எதுவும் ஏற்பட்டுவிட்டதாகவோ (உதாரணமாய், வெகுஜனங்களது நிலைமைகள் பெரிதும் மேம்பாடுற்றதன் விளைவாக இம்மாறுதல் ஏற்பட்டிருக்கலாம்) மறைமுகமாகக்கூட காவுத்ஸ்கியால் சுட்டிக்காட்ட முடியவில்லை. இந்த நிலைமைகளில் ஒருசில ஆண்டுகளில் இரண்டு நாடுகளின் மூலதன ஏற்றுமதிகளில் ஏற்பட்ட குறைவானது

---

* பார்க்கவும்: Bernhard Harms, *Probleme der Weltwirtschaft*, Jena, *1912* (பெர்ன்ஹார்டு ஹார்ம்ஸ், உலகப் பொருளாதாரத்தின் பிரச்சினைகள், இயேனா, *1912* — ப-ர்). *Journal of the Royal Statist. Soc.*, vol. LXXIV, 1910/11, p. 167, George Paish, *Great Britain's Capital Investments in Colonies etc.* (மன்னர் புள்ளிவிவரக் கழகத்தின் சஞ்சிகை, தொகுதி *74*, *1910/11*, பக்கம் *167*, ஜார்ஜ் பாயிஷ், காலனிகளிலும் பிறவற்றிலும் கிரேட் பிரிட்டனின் முதலீடுகள்—ப-ர்). *1915* ஆரம்பத்தில் லாயிட் ஜார்ஜ் தமது சொற்பொழிவு ஒன்றில், வெளிநாடுகளில் முதலீடு செய்யப்பட்டிருந்த பிரிட்டிஷ் மூலதனத்தை *400* கோடி பவுண்டு, அதாவது சுமார் *8,000* கோடி மார்க் என்பதாக மதிப்பிட்டார்.

ஒரு புதிய சகாப்தத்தின் உதயத்தைக் குறிப்பதாகிவிட முடியாது.

''நிதி மூலதனக் கோஷ்டிகளிடையே வளர்ந்து வரும் சர்வதேசப் பிணைவு'' மட்டும்தான் மெய்யாகவே பொதுவானதாகவும் சந்தேகத்துக்கு இடமில்லாததுமான போக்காகும்; கடந்த ஒருசில ஆண்டுகளில் மட்டுமோ இரண்டு நாடுகளில் மட்டுமோ இன்றி, முதலாளித்துவ உலகம் அனைத்துக்குமான போக்காகும். ஆனால் இந்தப் போக்கு இதுகாறும் செய்து வந்துள்ளதுபோல் படைக்கலப் பெருக்கத்தை ஊக்குவிப்பதற்குப் பதில், படைக்கலக் குறைப்புக்கான முயற்சியை ஏன் ஊக்குவிக்க வேண்டுமாம்? உலகப் பிரசித்தி பெற்ற பீரங்கி (மற்றும் படைக்கல) உற்பத்தியாளர்களில் ஒருவரை, உதாரணமாக ஆர்ம்ஸ்டிராங்கை, எடுத்துக் கொள்ளுங்கள். ஆர்ம்ஸ்டிராங் கம்பெனியின் இலாபங்கள் *1905/6ல் 6,06,000* பவுண்டாக (சுமார் *60,00,000* ரூபிள்) இருந்தது, *1913ல் 8,56,000* பவுண்டாகவும், *1914ல் 9,40,000* பவுண்டாகவும் (90,00,000 ரூபிள்) உயர்ந்துவிட்டதைக் காட்டும் புள்ளிவிவரங்களை பிரிட்டிஷ் பொருளியலாளர்[15] ஏடு (*1915* மே *1*) வெளியிட்டது. இங்கே நிதி மூலதனத்தின் பிணைவு மிகமிக முனைப்பாய் நடந்தேறுவதோடு, தொடர்ந்து அதிகரித்தும் செல்கிறது. ஜெர்மன் முதலாளிகள் பிரிட்டிஷ் கம்பெனிகளில் ''பங்குப் பிடிப்புகள்'' வைத்திருக்கிறார்கள்; பிரிட்டிஷ் கம்பெனிகள் ஆஸ்திரியாவுக்கு நீர்மூழ்கிக் கப்பல்கள் கட்டித் தருகின்றன; இப்படி இன்னும் பலவற்றைக் குறிப்பிடலாம். உலகு தழுவிய அளவில் பிணைவு கொண்டு மூலதனமானது படைக்கலங்களின் உற்பத்தியின் மூலமாகவும் யுத்தங்களின் மூலமாகவும் கொழுத்துப் பெருத்து வருகிறது. மூலதனம் தனிப்பட்ட நாடுகளில் ஒன்றுபடுவதாலும் சர்வதேச அளவில் பிணைவு பெறுவதாலும் தவிர்க்க முடியாதபடி படைக்கலக் குறைப்பை நோக்கியமைந்த பொருளாதாரப் போக்கு தோற்றுவிக்கப்பட்டாக வேண்டுமென நினைப்பதானது, வர்க்க முரண்பாடுகள் தணிந்துவிடுமென்ற நல்லெண்ணம் கொண்ட பாமரத்தனமான நப்பாசைகளை அந்த முரண்பாடுகள் கடுமையாகி வரும் மெய்ந்நடப்புக்குப் பதிலாகச் செயல்படச் செய்வதாகுமே அன்றி நடைமுறையில் வேறு எதுவுமன்று.

# 5

யுத்தத்தின் ''படிப்பினைகள்'' குறித்து காவுத்ஸ்கி முற்றி லும் குட்டிமுதலாளித்துவ அற்பவாத மனப்பான்மையிலே தான் பேசுகிறார். யுத்தத்தால் ஏற்படும் கொடுந்துன்பங்கள் குறித்து அறநெறி வயப்பட்ட அருவருப்பை வெளியிடும் முறையிலேதான் அவர் இந்தப் படிப்பினைகளை எடுத்துரைக் கிறார். எடுத்துக்காட்டாக, **தேசிய அரசு, ஏகாதிபத்திய அரசு, அரசுகளின் சங்கம்** என்னும் பிரசுரத்தில் அவர் பின் வருமாறு வாதிடுகிறார்:

''உலக சமாதானத்திலும் படைக்கலக் குறைப்பிலும் வெகுவாய் நாட்டம் கொண்டுள்ள மக்கட் பகுதியினர் இருக் கின்றனர் என்பது சந்தேகத்துக்கு இடமில்லாததாகும், கூறா மலே விளங்குவதாகும். குட்டிமுதலாளித்துவப் பிரிவினரும், சிறு விவசாயிகளும், ஏன் பல முதலாளிகளும் அறிவுத்துறை யினருங்கூட யுத்தத்தாலும் படைக்கலப் பெருக்கத்தாலும் இப்பகுதியோருக்கு ஏற்படும் இழப்பை மிஞ்சும்படியான முக்கியத்துவம் கொண்ட எந்நலன்களாலும் ஏகாதிபத்தியத் துடன் பிணைக்கப்பட்டிருக்கவில்லை'' (பக்கம் 21).

*1915 பிப்ரவரியில் எழுதப்பட்டது இது!* குட்டிமுதலா ளித்துவப் பிரிவோர், ''அறிவுத்துறையோர்'' வரையிலான சொத்துடைத்த வர்க்கங்கள் எல்லாமே ஒட்டுமொத்தமாய் ஏகாதிபத்தியவாதிகளுடன் சேர்ந்து கொண்டுவிட்டனர் என் பதை உண்மைகள் தெளிவுபடுத்துகின்றன. ஆனால் [சேக வின்] ''கூட்டில் அடைந்த மனிதனைப்''[16] போல் காவுத்ஸ்கி அளவுகடந்த சுயமனத் திருப்தியோடும், பசப்பு மொழிகளின் துணை கொண்டும் உண்மைகளை உதறித் தள்ளிவிடுகிறார். குட்டிமுதலாளித்துவப் பிரிவினரது நலன்களை இவர்களது நடத்தையைக் கொண்டு மதிப்பிடுவதற்குப் பதில், சிற்சில குட்டிமுதலாளித்துவ நபர்களின் சொற்களைக் கொண்டு— இச்சொற்கள் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் செயல்களால் நிராகரிக்கப்பட்ட போதிலும்—அவர் மதிப்பிடுகிறார். பொதுவாக முதலாளித்துவ வர்க்கத்தாரின் ''நலன்களை'' அவர்களது செயல்களைக் கொண்டு மதிப்பிடாமல், இன் றைய அமைப்பானது கிறிஸ்தவத்தின் இலட்சியங்களிலே

தோய்ந்ததாகுமென அறிவுறுத்தும் முதலாளித்துவப் பாதிரிமார்களது அருள் கனிந்த பேச்சுக்களைக் கொண்டு மதிப்பிடுவது போன்றதே ஆகும் இது. மார்க்சியத்தின் உள்ளடக்கம் அனைத்தையும் காலி செய்து ஒதுக்கித் தள்ளிவிடும்படியான முறையில், ''நலன்கள்'' என்னும் சபமந்திரச் சொல்லைத் தவிர வேறு எதுவும் எஞ்சாத முறையில் காவுத்ஸ்கி மார்க்சியத்தைக் கையாளுகிறார். எஞ்சியிருக்கும் இச்சொல் இயல் கடந்த மேலுலகத்துக்குரிய அர்த்தமுடையதாகிவிடுகிறது, ஏனெனில் மெய்யான பொருளாதாரத்தைக் குறிக்காமல் பொதுவான நலனிலாகிய ஆத்மார்த்திக விருப்பத்தைக் குறிப்பதாகிவிடுகிறது.

மார்க்சியமானது வர்க்கப் பகைமைகளுக்கும், அன்றாட வாழ்க்கையின் ஆயிரமாயிரம் உண்மைகளின் வாயிலாக வெளிப்படும் வர்க்கப் போராட்டத்துக்கும் ஏற்ப ''நலன்களை'' மதிப்பீடு செய்கிறது. குட்டிமுதலாளித்துவப் பிரிவினர் பகைமைகள் தணிந்து மறைவதாகப் பிதற்றுகிறார்கள், கனவு காண்கிறார்கள்; பகைமைகள் கடுமையாகுமாயின் ''தீய விளைவுகள்'' உண்டாகுமென அவர்கள் ''வாதம் புரிகிறார்கள்''. ஏகாதிபத்தியம் என்பது சொத்துடைத்த வர்க்கங்களின் எல்லா அடுக்குப் பிரிவுகளும் நிதி மூலதனத்துக்குக் கீழ்ப்படிதலையும், ஐந்து அல்லது ஆறு ''பெரிய'' அரசுகளிடையே—இவற்றில் மிகப் பலவும் இப்போது யுத்தத்தில் ஈடுபட்டிருப்பவை—உலகம் பங்கிடப்பட்டு விடுவதையும் குறிக்கிறது. பெரிய அரசுகளிடையே உலகம் பங்கிடப்பட்டு விடுவதன் அர்த்தம் என்னவெனில், இந்தப் பெரிய அரசுகளின் சொத்துடைத்த எல்லா வர்க்கங்களும் காலனிகளையும் செல்வாக்கு மண்டலங்களையும் பெற்றிருப்பதிலும், பிற தேசங்களை ஒடுக்குவதிலும், ''பெரிய'' அரசும் ஒடுக்கும் தேசமுமான ஒன்றைச் சேர்ந்தோராய் இருத்தலால் கைவரக் கூடிய அதிகமாகவோ குறைவாகவோ சொகுசான பதவிகளையும் தனியுரிமைகளையும் பெற்றுக் கொள்வதிலும் நாட்டமுடையவர்களாக இருக்கிறார்கள் என்பதுதான்.*

---

* அரசாங்க, நகராட்சிக் கடன் பத்திரங்கள், அடமானங்கள், வாணிப, தொழில் நிறுவனப் பங்குகள் முதலானவையும் அடங்கலாக 1915ல் அனைத்து உலகிலும் இருந்த

வாழ்க்கையானது பழைய வழியில் தடங்கலின்றி வளர்ச்சி பெற்றுப் படிப்படியாகப் புதிய நாடுகளுக்குப் பரவிச் செல்லும் ஒரு முதலாளித்துவத்துக்குரிய ஒப்பளவில் அமைதியான, பண்பாடு வாய்ந்த, சமாதான வழிப்பட்ட நிலைமைகளில் நடைபோட்டுக் கொண்டிருப்பது இனி முடியாது. ஒரு புதிய சகாப்தம் உதித்துவிட்டது. நிதி மூலதனமானது குறிப்பிட்ட ஒரு நாட்டைப் பேரரசுகளின் வரிசையிலிருந்து வெளியேற்றுகிறது; அறவே வெளியேற்றியும் விடும்; (பிரிட்டனுடன் யுத்தத்தில் இறங்கியுள்ள ஜெர்மனி செய்ய அச்சுறுத்துவது போல) அதன் காலனிகளையும் செல்வாக்கு மண்டலங்களையும் பறித்துக் கொண்டுவிடும்; குட்டிமுதலாளித்துவப் பிரிவோரிடமிருந்து அவர்களது ''ஆதிக்க-தேசத்'' தனியுரிமைகளையும் அதிகப்படி வருமானங்களையும் பறித்துக் கொண்டுவிடும். யுத்தத்தால் இது நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இது பகைமைகள் அப்படி முற்றித் தீவிரமடைவதன் விளைவாகும்; காவுத்ஸ்கியும் உட்பட (அவரது பிரசுரமான ஆட்சி

---

கடன் சீட்டுகளின் மொத்தப் பெறுமானம் 73,200 கோடி பிராங்க் இருக்குமென எ. ஷுல்த்ஸே கூறுகிறார். இந்தத் தொகையில் பிரிட்டனுக்கு உரிய பங்கு 13,000 கோடி பிராங்க், அமெரிக்க ஐக்கிய நாட்டினது 11,500 கோடி பிராங்க், பிரான்சினது 10,000 கோடி பிராங்க், ஜெர்மனியினது 7,500 கோடி பிராங்க். அதாவது, நான்கு பேரரசுகளுக்கு உரிய பங்கு 42,000 கோடி பிராங்க்; மொத்தத் தொகையில் இது பாதிக்கு மேற்பட்டதாகும். ஏனைய தேசங்களை முந்திக் கொண்டு சென்றுவிட்டவையும் இவற்றை ஒடுக்கியும் சூறையாடியும் வருகின்றவையுமாகிய இந்தத்தலைமையான பேரரசுகளுக்குக் கிடைக்கப் பெறும் அனுகூலங்களையும் தனியுரிமைகளையும் இதிலிருந்து உணர்ந்து கொள்ளலாம். (*Finanz-Archiv*, Berlin, 1915, Jahrg. 32, S. 127, Dr. Ernst Schultze, *Das Französische Kapital in Russland)* (நிதிப் பத்திரங்கள், பெர்லின், 1915, வெளியீட்டின் 32ஆம் ஆண்டு, பக்கம் 127, டாக்டர் எர்னஸ்டு ஷுல்த்ஸே, ருஷ்யாவில் பிரெஞ்சு மூலதனம்—ப-ர்). பேரரசிற்குத் ''தாயகப் பாதுகாப்பு'' என்பது வெளிநாடுகளைச் சூறையாடுவதில் பங்கு பெறுவதற்கான உரிமையைப் பாதுகாத்துக் கொள்வதைக் குறிப்பதாகும். ருஷ்யாவில் முதலாளித்துவ ஏகாதிபத்தியம் இராணுவ-பிரபுத்துவ ஏகாதிபத்தியத்தைக் காட்டிலும் பலவீனமாயிருப்பது தெரிந்ததே.

யதிகாரத்துக்குரிய பாதையில்) நெடுங் காலமாய் எல்லோ ராலும் ஒத்துக் கொள்ளப்பட்ட ஒன்ருகும்.

பேரரசின் தனிவுரிமைகளுக்கான ஆயுதப் போராட்டம் இப்போது எதார்த்த உண்மையாகிவிட்ட ஒரு நேரத்தில், முதலாளிகளேயும் குட்டிமுதலாளித்துவப் பிரிவோரையும் காவுத்ஸ்கி, யுத்தம் பயங்கரமானதென்றும் படைக்கலக் குறைப்பு நலம் பயக்கக் கூடியதென்றும் அறிவுறுத்த விரும்பு கிருர்—உபநியாசம் செய்யும் கிறிஸ்தவ சமயச் சபை பாதிரி யார், அவரவரும் தமது சகமனிதர்களே நேசிப்பது தேவ கட்டளேயும் ஆன்மாவின் அடங்காத ஏக்கமும் நாகரிகத்தின் அறநெறியுமாகுமென முதலாளிமார்களுக்கு அறிவுறுத்த விரும்புகிருரே, அதே போலவும், அதே விளேவுகளோடும். ''அதித-ஏகாதிபத்தியத்தை'' நோக்கியமைந்த ஒரு பொரு ளாதாரப் போக்கு என்பதாகக் காவுத்ஸ்கி குறிப்பிடுவது, தீயவற்றைச் செய்யாதிருக்குமாறு நிதியாதிக்கத்தினரிடம் கூறப்படும் குட்டிமுதலாளித்துவ அறிவுறுத்தலே அன்றி வேறு எதுவுமல்ல.

மூலதன ஏற்றுமதியா? ஆனல் காலனிகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதைக் காட்டிலும் அதிகமான மூலதனம் அமெ ரிக்க ஐக்கிய நாடு போன்ற சுயேச்சை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. காலனிகள் கைப்பற்றப்படுதலா? ஆனல் அவை யாவும் கைப்பற்றப்பட்டு விட்டன, அனேகமாய் அவை யாவுமே விடுதலே பெற முனேகின்றன. ''இந்தியாவா னது பிரிட்டிஷ் உடைமையாக இருப்பது முடிவுற்றுவிடலாம், ஆனல் இணேந்து ஒருமித்த சாம்ராஜ்யமாக ஒருபோதும் அது வேறொரு அந்நிய அரசதிகாரத்தின் கீழ் இருத்தப்பட முடி யாது'' (மேற்கூறிய பிரசுரத்தில் பக்கம் 49). ''எந்தத் தொழில் துறை முதலாளித்துவ அரசும் மூலப் பொருட்கள் சம்பந்தமாக வெளிநாடுகளேச் சார்ந்திருக்க வேண்டியில்லாத படி போதுமான அளவுக்குத் தனக்கு ஒரு காலனி சாம்ராஜ் யத்தைப் பெற்றுக் கொள்ளவதற்காக எடுக்கக் கூடிய எந்த முயற்சியும் ஏனைய எல்லா முதலாளித்துவ அரசுகளேயும் அதற்கு எதிராக ஒன்றுபடச் செய்து அதைப் பலமெலாம் இழக்கச் செய்யும்படியான முடிவில்லாத யுத்தங்களில் சிக்க வைக்குமே அல்லாது அதன் இலக்கை எவ்விதத்திலும் நெருங்கிச் செல்ல வைக்காது. இம்மாதிரியான ஒரு

கொள்கையானது அந்த அரசின் பொருளாதார வாழ்வு அனைத்துமே நொடித்துப் போவதற்கு நிச்சயமான வழி யாகிவிடும்'' (பக்கங்கள் 72-73).

நிதியாதிக்கத்தினருக்கு அறிவுரை கூறி அவர்களை ஏகாதி பத்தியத்தைக் கைவிடுமாறு இணங்க வைப்பதற்குரிய ஒரு முயற்சியே அல்லாமல் வேறு என்ன இது? நொடித்துப் போக நேருமென்று சொல்லி முதலாளிகளைப் பயமுறுத்துவதற்கான எந்த முயற்சியும், பங்கு மாற்றுச் சந்தையில் ஊகவாணிபம் செய்ய வேண்டாம், ஏனெனில் ''இப்படிச் செய்து பலரும் செல்வமிழந்து நொடித்திருக்கிறார்கள்'' என்று புத்திமதி கூறு வதற்கே ஒப்பானதாகும். போட்டி முதலாளியோ, போட்டி தேசமோ நொடித்துப் போவதால் மூலதனம் ஆதாயமே அடைகிறது, எப்படியெனில் இவ்வழியில் மூலதனம் மேலும் ஒன்றுகுவிந்து செல்கிறது. பொருளாதாரப் போட்டியானது, அதாவது போட்டியாளர் நொடித்துவிடும்படியான நிலைக்கு அவரைப் பொருளாதார வழியில் தள்ளிச் செல்வதானது, எவ்வளவுக்கு எவ்வளவு கூர்மையும் ''நெருக்கமும்'' மிக்க தாகிறதோ, போட்டியாளரை அத்திசையிலே விரட்டித் தள்ளும் பொருட்டு அவ்வளவுக்கு அவ்வளவு அதிகமாய் இராணுவ நிர்ப்பந்தத்தையும் முதலாளிகள் சேர்த்துக் கொள்ள எத்தனிக்கிறார்கள். மூலதனத்தைக் காலனிகளுக் கோ, துருக்கியைப் போன்ற சார்பு நிலை அரசுகளுக்கோ ஏற்றுமதி செய்வதிலுள்ள அதே அளவு அனுகூலம் கிடைக்கும் படி—இத்தகைய சந்தர்ப்பங்களில் நிதியாதிக்கத்தினர் அமெரிக்க ஐக்கிய நாட்டுக்கு நடைபெறும் மூலதன ஏற்று மதிகள் அளிக்கக் கூடியதைப் போல் மும்மடங்கான இலாபம் பெறுகின்றனர்—இனியும் தொடர்ந்து மூலதனத்தை ஏற்று மதி செய்வதற்குரிய நாடுகளின் எண்ணிக்கை குறையக் குறைய, துருக்கி, சீனா போன்ற நாடுகளைக் கீழ்ப்படியச் செய் வதற்கும் பங்கு போட்டுக் கொள்வதற்குமான போராட்டம் மேலும் மேலும் மூர்க்கமாகிச் செல்கிறது. நிதி மூலதனத் துக்கும் ஏகாதிபத்தியத்துக்குமாகிய காலகட்டத்தைப் பற்றிய பொருளாதாரத் தத்துவம் இதைத்தான் புலப்படுத்துகிறது. எதார்த்த உண்மைகள் புலப்படுத்துவதும் இதுவேதான். ஆனால் காவுத்ஸ்கி யாவற்றையும் மாமூலான குட்டிமுதலா ளித்துவ ''நீதியுரையாக'' மாற்றிவிடுகிறார்: துருக்கியைப்

பங்கிட்டுக் கொள்ள வேண்டுமென்றோ, இந்தியாவைக் கைப் பற்ற வேண்டுமென்றோ ஆவேசம் கொள்வது நல்லதல்ல, இதற்காக யுத்தத்தில் இறங்குவது நிச்சயமாக நல்லதல்ல, ஏனெனில் ''எப்படியும் இவற்றை அதிக காலத்துக்குப் பிடித்து வைத்திருக்க முடியாது'', இது மட்டுமன்றி முதலாளித்துவத்தைச் சமாதான வழியில் வளர்த்துச் செல்வது தான் நல்லது.... முதலாளித்துவத்தை வளர்த்தும் கூலி விகிதங்களை உயர்த்தி உள்நாட்டுச் சந்தையை விரிவாக்கியும் செல்வது இன்னுங்கூட நல்லதாகத்தான் இருக்கும்; இதெல்லாம் முற்றிலும் சாத்தியமென ''நினைக்கக் கூடியதே''; நிதியாதிக்கத்தினருக்குச் சமயச் சபை பாதிரியார் உபந்யாசம் புரிவதற்கு இது மிக்கப் பொருத்தமான பேச்சுப் பொருள் தான்.... காலனிகள் விரைவில் எப்படியும் விடுதலை பெற்றுக் கொண்டுவிடப் போவதால் காலனிகளுக்காக பிரிட்டனை எதிர்த்து யுத்தம் புரிவது நல்லதல்ல என்று ஜெர்மன் நிதியாதிக்கத்தினருக்கு உணர்த்துவதில் நல்ல மனம் கொண்டவரான காவுத்ஸ்கி அனேகமாய் வெற்றி பெற்றுவிட்டார்!...

1872க்கும் 1912க்கும் இடையில் எகிப்துக்குப் பிரிட்டனின் ஏற்றுமதிகளும் அங்கிருந்து பிரிட்டனின் இறக்குமதிகளும் பிரிட்டனின் ஏற்றுமதியிலும் இறக்குமதியிலும் ஏற்பட்ட மொத்த அதிகரிப்புக்கு இணையாக இருக்கவில்லை; இதிலிருந்து ''மார்க்சியவாதி'' காவுத்ஸ்கி பின்வரும் நீதியினை வடித்தெடுக்கிறார்: ''இராணுவத்தைக் கொண்டு பிடித்துக்கொள்ளாமல் வெறும் பொருளாதாரக் காரணிகள் மட்டும் செயல்பட்டிருக்குமாயின் எகிப்துடன் பிரிட்டிஷ் வாணிபம் குறைந்த அளவே வளர்ந்திருக்குமெனக் கொள்வதற்குக் காரணம் ஏதும் இல்லை'' (பக்கம் 72). ''விரிந்து பெருக மூலதனத்துக்குள்ள முனைப்பினை... ஊக்குவிப்பதற்குரிய சிறந்த வழி சமாதான வழிப்பட்ட ஜனநாயகமே அன்றி ஏகாதிபத்தியத்தின் வன்முறைகள் அல்ல'' (பக்கம் 70).

எவ்வளவு உன்னதமான, கருத்தாழம் வாய்ந்த, விஞ்ஞான வழிப்பட்ட, ''மார்க்சியப்'' பகுத்தாய்வு! ஆய்வறிவுக்கு ஒவ்வாத முறையில் சென்றுவிட்ட வரலாற்றினைக் காவுத்ஸ்கி அதியற்புதமாய் ''ஒழுங்கு செய்துள்ளார்''. பிரெஞ்சுக்காரர்களிடமிருந்து பிரிட்டிஷ்காரர்கள் எகிப்தைக் கைப்பற்றியிருக்கத் தேவையில்லை என்றும், எகிப்திலிருந்து

பிரிட்டிஷ்காரர்களை விரட்டுவதற்காக ஜெர்மன் நிதியாதிக்கத்தினர் யுத்தத்தை ஆரம்பித்ததும் துருக்கியின் மீது படை இயக்கத்துக்கு ஏற்பாடு செய்ததும் பிற நடவடிக்கைகளை எடுத்ததும் தேவையில்லாத வீண் வேலையே என்றும் அவர் ''நிரூபித்துவிட்டார்''! இவை யாவும், நிலைமையைப் புரிந்து கொள்ளாததால் நேர்ந்தவையே—பிரிட்டிஷ்காரர்கள் எகிப்தில் பலாத்கார முறைகளைக் கைவிட்டு ''சமாதான வழிப்பட்ட ஜனநாயகத்தைக்'' கைக்கொள்வதுதான் (காவுத்ஸ்கி கூறும் வழியில் மூலதன ஏற்றுமதிகளை அதிகரிக்கச் செய்யும் பொருட்டு), தமக்குச் ''சிறந்த பயனளிப்பதாகும்'' என்பதை இன்னும் உணர்ந்து கொள்ளவில்லை....

''தடையில்லா வாணிபமானது முதலாளித்துவத்தால் உண்டாக்கப்படும் பொருளாதார முரண்பாடுகளை அறவே அகற்றிவிடுமென முதலாளித்துவத் தடையில்லா-வாணிபவாதிகள் நினைத்தது அவர்களது பிரமையே அன்றி வேறல்ல. இம்முரண்பாடுகளைத் தடையில்லா வாணிபத்தாலும் அகற்ற முடியாது, ஜனநாயகத்தாலும் அகற்ற முடியாது. பெருந்திரள் மக்களின் மீது குறைந்த அளவு இன்னலையும் தியாகத்தையும் சுமத்தும்படியான வடிவங்களில் நடந்தேறும் ஒரு போராட்டத்தின் மூலம் இந்த முரண்பாடுகளை அகற்றுவதில் நாம் எல்லா விதத்திலும் அக்கறை கொண்டுள்ளோம்'' (பக்கம் 73).

ஆண்டவன் துணை புரிவாராக! கருணை காட்டுவாராக! ''அற்பன் என்பான் எவன்?'' என்று கேட்டு, பெயர் பெற்ற கவிஞனின் சொற்களை எடுத்தாண்டு லஸ்ஸால் பதிலளிப்பது வழக்கம்: ''அச்சத்தையும் கடவுள் கருணை புரிவார் என்ற நம்பிக்கையையும் தவிர ஏனைய யாவும் அகற்றப்பட்டுவிட்ட பதரே அற்பன் என்பான்''[17].

காவுத்ஸ்கி இணையற்ற முறையில் மார்க்சியத்தைச் சிரழித்து இழிவுபடுத்தியுள்ளார், சரியான சமயச் சபை பாதிரியாராக மாறியுள்ளார். முதலாளிகளை சமாதான வழிப்பட்ட ஜனநாயகத்தைக் கைக்கொள்ளும்படிச் செய்ய முயலுகிறார் அவர்—இதை இயக்கவியல் என்பதாக அழைக்கிறார்: முதலில் தடையில்லா வாணிபம் இருந்து பிறகு ஏகபோகங்களும் ஏகாதிபத்தியமும் வந்தன என்றால், அதித-ஏகாதிபத்தியமும் அதன் பிறகு மீண்டும் தடையில்லா வாணிபமும் ஏன் வரக்

கூடாது? இந்த ''அதீத-ஏகாதிபத்தியம்'' ''சாதிக்கப்படக்'' கூடியதுதான என்று சொல்வதற்கு வேண்டிய துணிவுகூட அவரிடம் இல்லை என்றாலும், சமயச் சபைப் பாதிரியாரான அவர் இந்த ''அதீத-ஏகாதிபத்தியத்தால்'' கிடைக்கப் போகும் பாக்கியங்களைச் சித்திரித்துக் காட்டி, ஒடுக்கப்பட்ட வெகுஜனங்களுக்கு ஆறுதல் அளிக்கின்றார்! மனத்துக்கு ஆறுதல் அளிக்கிறது என்று சொல்லி மதத்தை ஆதரித்தவர்களுக்குப் பதிலளிக்கையில் ஃபாயர்பாக், இந்த மன ஆறுதலின் பிற்போக்குவாத உட்பொருளைச் சுட்டிக்காட்டியது முற்றிலும் சரியானதே: அடிமை நிலையை எதிர்த்துக் கிளம்பும்படி அடிமையை உசுப்பி விடுவதற்குப் பதில், அவனுக்கு மன ஆறுதல் அளிப்பவர் எவரும் அடிமையுடைமையாளருக்கு உதவுகிறவரே ஆவார் என்றார் அவர்.

எல்லா ஒடுக்கும் வர்க்கங்களுக்கும் அவற்றின் ஆதிக்கத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்கு இரு வகைச் சமூகப் பணிகள் தேவைப்படுகின்றன: ஒன்று தூக்கிலிடுவோனின் பணி, மற்றொன்று பாதிரியாரின் பணி. ஒடுக்கப்படுவோரின் கண்டனத்தையும் ஆத்திரத்தையும் அடக்குவதற்காகத் தூக்கிலிடுவோன் தேவைப்படுகிறான். பாதிரியார் தேவைப்படுவது, ஒடுக்கப்படுவோருக்கு ஆறுதல் அளிப்பதற்காக; வர்க்க ஆட்சி பாதுகாக்கப்படும் அதே நேரத்தில் ஒடுக்கப்படுவோரின் துன்பதுயரங்களும் இழப்புகளும் குறைக்கப்படுவதற்கான வாய்ப்புகளை அவர்களுக்குச் சித்திரித்துக் காட்டி (இந்த வாய்ப்புகள் ''கைகூடுமென'' உத்தரவாதம் அளிக்காமலே இதைச் செய்வது மிகவும் சுலபம்தான்...), இவ்வழியில் அவர்களை வர்க்க ஆட்சிக்கு இணங்கிவிடும்படிச் செய்து, புரட்சிகரச் செயல்களிலிருந்து அவர்களைத் திருப்பிவிட்டு, அவர்களது புரட்சிகர மனப்பாங்கிற்குக் குழி பறித்து, அவர்களது புரட்சிகர வைராக்கியத்தை ஒழித்துக் கட்டுவதற்காக. மார்க்சியத்தைக் காவுத்ஸ்கி மிகமிக அருவருப்பான, அசட்டுத்தனமான எதிர்ப்புரட்சித் தத்துவமாக, படுமோசமான சமயச் சித்தாந்த வகைப்பட்டதாக மாற்றுகின்றார்.

முதலாளித்துவத்தில் பகைமைகள் தீவிரமடைகின்றன, யுத்தங்களுக்கும் புரட்சிகளுக்குமான காலகட்டம், புதிய ''புரட்சிகரக் காலகட்டம்'' நெருங்கி வருகிறது என்ற இந்த மறுக்கப்படாத, மறுக்க முடியாத உண்மையை 1909ல்

அவர் தமது ஆட்சியதிகாரத்துக்கான பாதையில் ஏற்றுக் கொண்டார். ''காலத்துக்கு முன்னதான'' புரட்சி என்பதாய் எதுவும் இருக்க முடியாது என்றார்; போரிடத் தொடங்குமுன் தோல்வியின் சாத்தியப்பாட்டை மறுப்பதற்கில்லை என்றாலுங் கூட, எழுச்சி ஒன்றில் வெற்றியின் சாத்தியப்பாட்டினை நம்ப மறுப்பதானது ''நமது இலட்சியத்துக்கு நேரடியாகவே துரோகம் இழைப்பதாகும்'' என்று சாடினார்.

யுத்தம் வந்தபின், பகைமைகள் இன்னும் அதிக அளவுக்கு உக்கிரமடைந்திருக்கின்றன. மக்கட் பெருந் திரளினரின் துன்பதுயரங்கள் பிரம்மாண்டப் பரிமாணங்களுடையனவாய் வளர்ந்துவிட்டன. யுத்தத்தின் முடிவு இன்னும் கண்ணுக்குத் தெரிவதாயில்லை, போர் அரங்கங்கள் மேலும் மேலும் விஸ்தரித்துச் செல்கின்றன. காவுத்ஸ்கி பிரசுரத்துக்கு மேல் பிரசுரம் எழுதி வருகிறார். தணிக்கையாளர்களது ஆணைகளுக்குப் பணிவுடன் கீழ்ப்படிந்து, நிலங்கள் சூறையாடப்படுதல், யுத்தத்தின் பயங்கரங்கள், யுத்தக் கண்டிராக்டர்கள் அடித்து வரும் இலாபக் கொள்ளை, வாழ்க்கைச் செலவின் ஏற்றம், ஆயுத உற்பத்தித் தொழில்களில் திரட்டப்பட்டிருக்கும் தொழிலாளர்களது மெய்யான அடிமை நிலை ஆகியவை பற்றிய உண்மைகளை எடுத்துரைக்காமல் மௌனம் சாதிக்கிறார். இதற்குப் பதில் பாட்டாளி வர்க்கத்துக்குத் தொடர்ந்து அவர் ஆறுதல் கூறி வருகிறார். முதலாளித்துவ வர்க்கத்தினர் புரட்சிகரமாகவும் முற்போக்காகவும் இருந்த யுத்தங்களை, இந்த அல்லது அந்த முதலாளித்துவ வர்க்கத்தின் வெற்றியை ''மார்க்சுங்கூட'' விரும்பிய அந் யுத்தங்களை உதாரணமாகக் காட்டி அவர் இப்படி ஆறுதல் கூறி வருகிறார். காலனிகள் இல்லாத, ஏனையோரைச் சூறையாடாத, யுத்தங்களும் படைக்கலங்களும் இல்லாத முதலாளித்துவம் ''சாத்தியமே'' என்றும், ''சமாதான வழிப்பட்ட ஜனநாயகம்'' விரும்பத்தக்கதே என்றும் நிரூபிப்பதற்காக வரிசை வரிசையாகவும் பத்தி பத்தியாகவும் அவர் புள்ளி விவரங்களை எடுத்துரைத்துப் பாட்டாளி வர்க்கத்துக்கு ஆறுதல் கூறுகின்றார். மக்கட் பெருந்திரளினரின் துன்பதுயரங்கள் மேன்மேலும் கடுமையாகி வருவதையும் நம் கண் எதிரே புரட்சிகரச் சூழ்நிலை தோன்றி வருவதையும் மறுக்கும் துணிவின்றி (இவை குறித்து யாரும் பேசக் கூடாது, ஏனெனில்

தணிக்கையாளர்கள் இதற்கு அனுமதிக்கவில்லை!), முதலாளித்துவ வர்க்கத்தாருக்கும் சந்தர்ப்பவாதிகளுக்கும் தண்டனிட்டு வரும் காவுத்ஸ்கி, ''குறைந்த அளவிலான துன்ப துயரமும் இழப்பும்'' உண்டாக்கும் ஒரு புதிய கட்டத்துக்குரிய போராட்ட வடிவங்களுக்கான ''சாத்தியப்பாட்டைச்'' சித்திரிக்கிறார் (இந்தப் புதிய கட்டம் ''சாதிக்கப்படு''மென அவர் உத்தரவாதம் அளிக்கவில்லை).... பிரான்ஸ் மேரிங்கும் ரோசா லுக்சம்பர்கும் இதே காரணத்தைக் குறிப்பிட்டுக் காவுத்ஸ்கியைத் தெருவில் அலையும் விபசாரி (Mädchen für alle) என்று கூறியது முற்றிலும் பொருத்தமானதுதான்.

* * *

1905 ஆகஸ்டில் ருஷ்யாவில் புரட்சிகரச் சூழ்நிலை இருந்து வந்தது. கொந்தளிப்படைந்து வந்த மக்கட் பொருந்திரளினருக்கு ''ஆறுதல் அளிக்கும்'' பொருட்டு ஜார் மன்னர் புலீகின் டுமாவைக் கூட்டுவதாக வாக்குறுதி தந்தார்[18]. நிதியாதிக்கத்தினர் படைக்கலங்களை விட்டொழிப்பதும், ''நிலையான சமாதானத்துக்கு'' அவர்கள் உடன்படுவதும் ''அதித-ஏகாதிபத்திய''மென அழைக்கப்படலாம் எனில், ஆலோசனை கூறும் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்துக்குரிய புலீகின் ஆட்சியானது ''அதித-ஏதேச்சாதிகார''மெனக் குறிக்கப்படலாம். உலகின் மிகப் பெரிய நூறு நிதியாதிக்கத்தினர், நூற்றுக் கணக்கான பிரம்மாண்டத் தொழில் நிறுவனங்களில் ''பிணைந்திருக்கும்'' இவர்கள், யுத்தத்துக்குப் பிற்பாடு படைக்கலக் குறைப்புக்காகப் பாடுபடுவதாக உலக மக்களுக்கு வாக்குறுதி தருவதாகக் கணப்பொழுதுக்கு வைத்துக் கொள்வோம் (காவுத்ஸ்கியின் அசட்டுத் தனமான துக்கடாத் தத்துவத்திலிருந்து அரசியல் முடிவுகளை வந்தடையும் பொருட்டு கணப்பொழுத்துக்கு மட்டும் இப்படி அனுமானித்துக் கொள்வோம்). இப்படி நடைபெற்றாலுங்கூட, புரட்சிகரச் செயல் மேற்கொள்ளாதிருக்கும்படி அறிவுறுத்திப் பாட்டாளி வர்க்கத்தை இணங்கச் செய்வதானது இவ்வர்க்கத்துக்கு இழைக்கப்படும் அப்பட்டமான துரோகமே ஆகும்; பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரச் செயல் இல்லையேல் எல்லா வாக்

குறுதிகளும் சிறப்பான எல்லா வாய்ப்புகளும் வெறும் கானல் நீரே அன்றி வேறல்ல.

முதலாளித்துவ வர்க்கத்துக்கு யுத்தமானது பெரிய அளவிலான இலாபங்களையும், புதிய கொள்ளைக்கான அற்புத வாய்ப்புகளையும் (துருக்கி, சீனு, இன்ன பிற), ஆயிரங் கோடிக்கணக்கிலான புதிய கான்டிராக்டுகளையும், கூடுதலான வட்டி விகிதங்கள் கிடைக்கும் புதிய கடன்களுக்கான வாய்ப்புகளையும் கிடைக்கச் செய்துள்ளது என்பது மட்டுமல்ல; பாட்டாளி வர்க்கத்தைப் பிளவுபடச் செய்துள்ளதன் மூலமும், சீரழியச் செய்ததன் மூலமும் முதலாளித்துவ வர்க்கத்துக்கு அது மேலும் பெரிய அரசியல் அனுகூலங்களையும் கிடைக்கச் செய்திருக்கிறது. இந்தச் சீரழிவுக்குக் காவுத்ஸ்கி தூண்டுதல் அளித்து வருகிறுர்; போர்க் குணம் கொண்ட பாட்டாளி வர்க்கத்தினரிடையிலான இந்தச் சர்வதேசப் பிளவினை அவர்களது ''சொந்த'' தேசங்களைச் சேர்ந்த சந்தர்ப்பவாதிகளுடனுன, ஸூடெக்கும்களுடனுன ஒற்றுமையின் பெயரில் புனிதமாக்குகிறுர்! ஆயினும் பழைய கட்சிகளின் ஒற்றுமைக் கோஷமானது, குறிப்பிட்ட ஒரு தேசத்தின் பாட்டாளி வர்க்கம் அத்தேசத்தின் முதலாளித்துவ வர்க்கத்துடன் ''ஒன்றுபடுவதையும்'', வெவ்வேறு தேசங்களது பாட்டாளி வர்க்கத்திடையிலான பிளவையுமே குறிக்கிறதென்பதைப் புரிந்து கொள்ளத் தவறுவோர் பலரும் இருந்து வருகிறுர்கள்....

## 6

மேற்கண்ட வரிகள் ஏற்கெனவே எழுதப்பட்டுவிட்டன, அப்போது ''சமூக-ஜனநாயகத்தின் தகர்வு'' பற்றிய காவுத்ஸ்கியின் வாதங்களது முடிவுரைகள் (குனேவுக்கு அவர் அளித்த பதிலின் 7ஆம் பிரிவு) அடங்கிய மே 28ஆம் தேதிய *Die Neue Zeit* (இதழ் 9) வெளிவந்தது. சமூக-தேசியவெறிக்கு ஆதரவான அவரது பழைய குதர்க்கவாதங்களை எல்லாம் தொகுத்துரைப்பதுடன் புதியதொன்றையும் அவர் பின்வருமாறு எடுத்துரைக்கிறுர்:

''யுத்தமானது கலப்பற்ற ஏகாதிபத்திய யுத்தமே ஆகுமென்றும், யுத்தம் வெடித்தெழுந்ததும் ஏகாதிபத்தியம்

அல்லது சோஷலிசம் இந்த இரண்டில் ஒன்றே வழி என்றாயிற்று என்றும், ஜெர்மனியிலும் பிரான்சிலும் பல விதத்திலும் பிரிட்டனிலுங்கூட சோஷலிஸ்டுக் கட்சிகளும் பாட்டாளி வர்க்கப் பெருந்திரளினரும் கொஞ்சமும் சிந்திக் காமலே நாடாளுமன்றத்தினர் ஒருசிலரது அறைகூவலை மட்டும் கேட்டு அப்படியே தம்மை ஏகாதிபத்தியத்தின் கரங்களில் ஒப்படைத்துக் கொண்டு சோஷலிசத்துக்குத் துரோகமிழைத்தனர் என்றும், இவ்விதம் வரலாறு கண்டிராத தகர்வினை உண்டாக்கினர் என்றும் கூறுவது உண்மையல்ல என்பது தெளிவு.''

ஒரு புதிய குதர்க்கவாதம், தொழிலாளர்கள் மீதான ஒரு புதிய ஏமாற்று: யுத்தமானது ''கலப்பற்ற'' ஏகாதிபத்திய யுத்தம் அல்லவாம்!

தற்போதைய யுத்தத்தின் தன்மையையும் முக்கியத் துவத்தையும் பற்றிய பிரச்சினையில் காவுத்ஸ்கி விந்தையான முறையில் ஊசலாடுகிறார். திருடன் தான் திருட்டு நடத்திய இடத்திலிருந்து தூரச் செல்வது போல, இந்தக் கட்சித் தலைவர் பாஸெல், ஹெம்னித்ஸ் காங்கிரசுகளின் துல்லிய மான, முறையான பிரகடனங்களை வேண்டுமென்றே தட்டிக் கழித்துவிட்டுத் தூரச் செல்கிறார். 1915 பிப்ரவரியில் எழுதப்பட்ட **தேசிய அரசும் ஏகாதிபத்திய அரசும் அரசுகளின் சங்கமும்** என்ற தமது பிரசுரத்தில் ''இருப்பினும் முடிவாகப் பார்க்குமிடத்து'' இந்த யுத்தம் ''ஏகாதிபத்திய யுத்தமே ஆகு''மென (பக்கம் 64) காவுத்ஸ்கி வலியுறுத்தினார். இப் போது ஒரு புதிய வரையறை புகுத்தப்படுகிறது: அது கலப் பற்ற ஏகாதிபத்திய யுத்தம் அல்ல. பிறகு வேறு என்ன வாம்?

இது ஒரு தேசிய யுத்தமும் ஆகுமாம்! பின்வரும் ''பிளெஹானவிய'' போலி-இயக்கவியலின் மூலம் காவுத்ஸ்கி இந்த அபாண்ட முடிவுக்கு வருகின்றார்:

''தற்போதைய யுத்தம் ஏகாதிபத்தியத்தின் மகவு மட்டு மல்ல, ருஷ்யப் புரட்சியின் மகவுமாகும்.'' 1904லேயே அவர்—அதாவது காவுத்ஸ்கி—முன்னறிந்து கூறியிருந்தா ராம், ருஷ்யப் புரட்சியானது அனைத்து-ஸ்லாவியத்தை[19] ஒரு புதிய வடிவில் உயிர் பெற்றெழச் செய்யுமென்று, ''ஜனநாயக ருஷ்யா தவிர்க்க முடியாதவாறு ஆஸ்திரிய, துருக்கிய ஸ்லாவ்களின் தேச சுதந்திரத் தாகத்தை வெகு

வாய் உசுப்பி விடும்.... பிறகு போலிஷ் பிரச்சினையும் கடுமையாகிவிடும்.... ஆஸ்திரியா தகர்ந்து துண்டு துண்டாகி விடும், ஏனெனில் ஜாரிசத்தின் தகர்வைத் தொடர்ந்து மையம் விட்டோடும் கூறுகளைத் தற்போது சேர்த்து வைத்திருக்கும் இரும்புக் கட்டு அழிக்கப்பட்டுவிடும்'' என்று (தமது 1904ஆம் ஆண்டுக் கட்டுரையிலிருந்து காவுத்ஸ்கி இந்தக் கடைசித் தொடரை எடுத்தாளுகிறார்).... ''ருஷ்யப் புரட்சியானது... கிழக்குலகின் தேசிய விருப்பங்களுக்குச் சக்தி வாய்ந்த புதிய ஊக்கமளித்து, ஐரோப்பாவின் பிரச்சினைகளுடன் ஆசியாவின் பிரச்சினைகளையும் சேர்த்திட்டது. தற்போதைய யுத்தத்தில் இந்தப் பிரச்சினைகள் எல்லாம் மிக வலுவாகத் தமது முத்திரையைப் பதிக்கின்றன, பாட்டாளி வர்க்கப் பெருந்திரளினரும் அடங்கலாய்ப் பெருந்திரள் மக்களின் மனப்பாங்கு குறித்துத் தீர்மானமான முக்கியத்துவம் பெற்று வருகின்றன; அதேபோது ஆளும் வர்க்கங்களிடத்தே ஏகாதிபத்தியப் போக்குகள் தலைமையானவையாக இருக்கின்றன'' (பக்கம் 273, அழுத்தம் எம்முடையது).

மார்க்சியம் சீரழிக்கப்பட்டு இழிவு செய்யப்படுவதற்கு இது இன்னுமோர் எடுத்துக்காட்டு! ''ஜனநாயக ருஷ்யா'' கிழக்கு ஐரோப்பிய தேசங்களிடத்தே சுதந்திரத் தாகத்தை வளர்த்திடும் என்பதால் (இது மறுக்க முடியாததே), எந்தவொரு தேசத்தையும் விடுவிக்கப் போகாத தற்போதைய யுத்தம், எப்படி முடிவதாயினும் பல தேசங்களை அடிமைப்படுத்தவே போகிற இந்த யுத்தம், ''கலப்பற்ற'' ஏகாதிபத்திய யுத்தமாக இருக்கவில்லை. ''ஜாரிசத்தின் தகர்வானது'' ஆஸ்திரியாவின் சிதைவைக் குறிக்கும் என்பதால் (ஜனநாயகத்துக்கு ஒவ்வாத அதன் தேசியக் கட்டமைப்பின் காரணமாக), தற்காலிகமாய் வலுவூட்டப் பெற்ற எதிர்ப்புரட்சித் தன்மையதான ஜாரிசம், ஆஸ்திரியாவைச் சூறையாடியும் ஆஸ்திரியாவில் வாழும் தேசங்களை மேலும் கூடுதலான ஒடுக்குமுறைக்கு உட்படுத்தியும் வரும் இந்த ஜாரிசம், ''தற்போதைய யுத்தத்தைக்'' கலப்பற்ற ஏகாதிபத்தியத் தன்மையல்ல, ஓரளவுக்கு தேசியத் தன்மை பெறச் செய்துள்ளது. ''ஆளும் வர்க்கங்கள்'' ஏகாதிபத்திய யுத்தத்தின் தேசியக் குறிக்கோள்கள் என்பதாகக் கட்டுக்கதைகள் கூறி அசட்டுக் குட்டிமுதலாளித்துவப் பிரிவோரையும் மிதித்துத் துவைக்கப்படும் விவசாயிகளையும் ஏமாற்றி வருகின்றன என்பதால், விஞ்ஞான வித்தகரும் ''மார்க்சியத்தில்'' பெரிய

மேதாவியும் இரண்டாவது அகிலத்தின் பிரதிநிதியுமாகிய ஒருவர், ஆளும் வர்க்கங்கள் ஏகாதிபத்தியப் போக்குகளை வெளியிட்டு வர, ''மக்களும்'' பாட்டாளி வர்க்கப் பெருந் திரளினரும் ''தேசிய'' விருப்பங்களை வெளியிடுவதாகக் கூறிக் கொள்ளும் ஒரு ''சூத்திரத்தை'' முன்வைத்து, மக்கட் பெருந்திரளினரை இந்த ஏமாற்றுக்கு இணங்கிவிடும்படிச் செய்ய உரிமையுடையவராகி விடுகிறார்.

இயக்கவியல் படுமட்டமான, மிக இழிவான குதர்க்க வாதமாக மாற்றப்பட்டு விடுகிறது!

தற்போதைய யுத்தத்தில் தேசியக் கூறு பிரதிநிதித்து வம் செய்யப்படுவது ஆஸ்திரியாவை எதிர்த்து நடைபெறும் செர்பியாவின் யுத்தத்தால் மட்டுமேதான் (நமது கட்சியின் பெர்ன் மாநாட்டுத்[20] தீர்மானத்தில் இது குறிக்கப்பட்டிருப் பதை இடையில் இங்கு கூறலாம்). செர்பியாவில் மட்டும் தான், செர்புகளிடையே மட்டும்தான் நீண்ட காலமாய் நடைபெறும் தேச-விடுதலை இயக்கம் இருக்கக் காண முடியும். இது லட்சோப லட்சக் கணக்கானோரை, ''மக்கட் பெருந் திரளினரைத்'' தன்னுள் கொண்ட இயக்கமாகும்; இந்த இயக்கத்தைத் ''தொடர்ந்து நடத்திச் செல்வதாக'' அமைந் ததுதான் ஆஸ்திரியாவை எதிர்த்து நடைபெறும் செர்பியா வின் தற்போதைய யுத்தம். இந்த யுத்தம் தனித்து ஒதுங்கிய ஒன்றாய் இருந்திருக்குமாயின், அதாவது பிரிட்டன், ருஷ்யா இன்ன பிறவற்றின் கொள்ளைக்கார, தன்னலக் குறிக்கோள் களைக் கொண்ட பொது ஐரோப்பிய யுத்தத்துடன் இணைப்பு பெறாத ஒன்றாக இருந்திருக்குமாயின், செர்பிய முதலாளித் துவ வர்க்கத்தாரின் வெற்றியை நாடுவது எல்லா சோஷலிஸ்டு களுக்குமுரிய கடமையாக இருந்திருக்கும் — இதுவேதான் தற்போதைய யுத்தத்திலுள்ள தேசியக் கூறிலிருந்து பெறப் படக் கூடிய பிழையற்ற, தவிர்க்கவே முடியாத ஒரேயொரு முடிவு. இந்த முடிவைத்தான் குதர்க்கவாதியான காவுத்ஸ்கி, இப்போது ஆஸ்திரிய முதலாளித்துவ வர்க்கத்தார், சமயச் சபையினர், இராணுவ வாதிகளது பணியாளராக இருந்து வரும் இவர், வந்தடையத் தவறிவிட்டார்.

தவிரவும், விஞ்ஞான வழிப்பட்ட பரிணாம வளர்ச்சி முறையின் முடிந்த முடிபாகிய மார்க்சிய இயக்கவியலானது, எப்பொருளையும் தனிமைப்படுத்திப் பரிசீலனை செய்வதற்கு,

அதாவது ஒருதலைப்பட்சமாகவும் பயங்கர அளவுக்கு உருத் திரித்தும் பரிசிலனை செய்வதற்கு இடமளியாதது. செர்பிய-ஆஸ்திரிய யுத்தத்திலுள்ள தேசியக் கூறுனது, பொது ஐரோப்பிய யுத்தத்தில் எவ்விதத்திலும் கருத்துக்குரிய முக்கியத்துவம் பெறவில்லை, பெறவும் முடியாது. ஜெர்மனி வெற்றி பெறுமாயின் அது பெல்ஜியத்தையும், போலந்தில் மேலும் ஒரு பகுதியையும், ஒருக்கால் பிரான்சில் ஒரு பகுதியையும், பிறவற்றையும் நசுக்கி ஒடுக்கும். ருஷ்யா வெற்றி பெறுமானல், அது கலீஷியாவையும், போலந்தில் மேலும் ஒரு பகுதியையும், ஆர்மீனியாவையும் பிறவற்றையும் நசுக்கி ஒடுக்கும். யுத்தம் ''வெற்றி தோல்வியின்றி'' முடிவுறுமாயின், பழைய தேசிய ஒடுக்குமுறை தொடர்ந்து நீடிக்கும். செர்பியாவுக்கு, அதாவது தற்போதைய யுத்தத்தில் பங்கு கொள்வோரில் சுமார் ஒரு சதவீதமெனக் கொள்ளத் தக்கோருக்கு, இந்த யுத்தம் முதலாளித்துவ-விடுதலை இயக்கத்தின் ''அரசியலைத் தொடர்ந்து நடத்திச் செல்வதாக'' அமைகிறது. ஏனைய தொண்ணூற்று ஒன்பது சதவீதமானேருக்கு இந்த யுத்தம் ஏகாதிபத்தியத்தின் அரசியலை, அதாவது தேசங்களை விடுவிப்பதற்கல்ல, பலவந்தம் செய்ய மட்டுமே கூடியதான கிழடு தட்டிய முதலாளித்துவ வர்க்கத்தின் அரசியலைத் தொடர்ந்து நடத்திச் செல்வதாக அமைகிறது. செர்பியாவை ''விடுவித்து வரும்'' மூவர் உடன்பாடு செர்பிய சுதந்திரத்தின் நலன்களை இத்தாலிய ஏகாதிபத்தியத்துக்கு விற்பனை செய்து, அதற்குப் பதிலாக ஆஸ்திரியாவைக் கொள்ளையடிக்க இத்தாலிய ஏகாதிபத்தியத்தின் உதவியைப் பெற்றுக் கொள்கிறது.

இவை யாவும் உலகம் அறிந்தவையே, ஆனல் சந்தர்ப்பவாதிகளின் நிலைக்கு நியாயம் கூறும் பொருட்டு காவுத்ஸ்கி கொஞ்சங்கூட கூச்சப்படாமல் இவ்வுண்மைகளைத் திரித்துப் புரட்டுகிருர். இயற்கையிலும் சரி, சமுதாயத்திலும் சரி, ''கலப்பற்ற தூய்மையான'' நிகழ்வுகள் எவையும் இல்லை, இருக்கவும் முடியாது—மார்க்சிய இயக்கவியல் இதைத்தான் நமக்குப் போதிக்கிறது. தூய்மையெனும் கருத்துருவே ஒரு பொருளை அதன் முழுமொத்தத்திலும் அதன் அனைத்துச் சிக்கலிலும் அப்படியே தழுவியணைத்துக் கொண்டுவிட முடியாத மனிதப் புலனுணர்வின் குறிப்பிட்ட குறுகிய தன்மை

யை, ஒருசார்பினைக் குறிப்பதாகும் என்பதை இயக்கவியல் தெளிவுபடுத்துகிறது. உலகில் ''கலப்பற்ற தாய'' முதலாளித்துவம் என்பதாக எதுவும் இல்லை, இருக்கவும் முடியாது; பிரபுத்துவம், குட்டிமுதலாளித்துவம் அல்லது வேறொன்றின் கலப்புடன்தான் எப்போதுமே இது இருக்கக் காண்கிறோம். ஆகவே ஒளிவுமறைவின்றிக் கொள்ளையிடுவதே நோக்கமென்பதை ''தேசியச்'' சொல்வீச்சுகளைக் கொண்டு வெளியே தெரியாதபடி வேண்டுமென்றே மூடி ஏகாதிபத்தியவாதிகள் மக்கட் பெருந்திரளினரை அப்பட்டமாக ஏமாற்றி வருவது குறித்து நாம் விவாதிக்கையில், யுத்தமானது ''கலப்பற்ற'' ஏகாதிபத்திய யுத்தமாக இல்லை என்பதை எவரும் நினைவு படுத்துவாராயின், அவர் அளவுகடந்த அசட்டுப் புலமை வாய்ந்தவராகவோ, அல்லது சொற்புரட்டராகவும் எத்தராகவுமோதான் இருக்க வேண்டும். விவகாரம் என்னவெனில், ''பாட்டாளி வர்க்கப் பெருந்திரளினரும் அடங்கலாய் மக்கட் பெருந்திரளினருக்குத்'' தேசிய பிரச்சினைகள் ''தீர்மானகரமான முக்கியத்துவம்'' வாய்ந்தவையாக இருக்க, அதேபோது ஆளும் வர்க்கங்களுக்கு ''ஏகாதிபத்தியப் போக்குகளே'' தீர்மானகரமான காரணக் கூறுகளாக இருந்தன என்றும் (பக்கம் 273) வலியுறுத்துவதன் மூலமும், இயக்கவியலைச் சுட்டுவதாகக் காட்டிக் கொண்டு ''எதார்த்தத்தின் அளவுகடந்த வகை வேறுபாட்டைக்'' குறிப்பிட்டு (பக்கம் 274) இந்த வாதத்துக்கு ''வலுவூட்டுவதன்'' மூலமும் காவுத்ஸ்கி, ஏகாதிபத்தியவாதிகளால் மக்கள் ஏமாற்றப்படுவதற்குத் துணை புரிகின்றார். எதார்த்தமானது அளவுகடந்து வகை வேறுபாடுடையதுதான். இது முற்றிலும் உண்மையே! ஆனால் இந்த அளவுகடந்த வகை வேறுபாட்டுக்கிடையே இரண்டு பிரதான அடிப்படை போக்குகள் இருக்கின்றன என்பதும் இதே அளவுக்கு சந்தேகத்துக்கு இடமில்லாததாகும்: யுத்தத்தின் புறநிலை உள்ளடக்கம் ஏகாதிபத்தியத்தினுடைய ''அரசியலைத் தொடர்ந்து நடத்திச் செல்வதாக'' இருக்க, அதாவது ''பேரரசுகளின்'' கிழடு தட்டிய முதலாளித்துவ வர்க்கத்தாரும் (அவர்களது அரசாங்கங்களும்) பிற தேசங்களைச் சூறையாடி வர, அதேபோது நடப்பில் ஆதிக்கம் புரியும் ''அகநிலைச்'' சித்தாந்தமானது வெகுஜனங்களை

ஏமாற்றுவதற்காகப் பரப்பப்பட்டு வரும் ''தேசியக்'' சொல் வீச்சுகளைக் கொண்டாக இருக்கிறது.

''யுத்தம் வெடித்தெழுந்ததும்'' ஏகாதிபத்தியம் அல்லது சோஷலிசம் இந்த இரண்டில் ஒன்றே வழி என்றமைவதாக இடதுசாரியினர் சூழ்நிலையைக் கருதினரெனச் சொல்லி திரும்பத் திரும்ப காவுத்ஸ்கி வலியுறுத்தி வரும் அந்தப் பழைய குதர்க்கவாதம் ஏற்கெனவே பரிசீலிக்கப்பட்டிருக்கிறது. வெட்கக் கேடான தகடுதித்தமே ஆகும் இது. ஏனெனில் இடதுசாரியினர் இரண்டில் ஒரு வழியாக முன்வைத்தது இது வல்ல, வேறொன்று என்பதை, அதாவது கட்சியானது ஏகாதிபத்தியக் கொள்ளையிலும் ஏமாற்றிலும் சேர்ந்து கொள்வது, இல்லையேல் புரட்சிகரச் செயலுக்கான பிரசாரத்தையும் தயாரிப்பையும் மேற்கொள்வது என்பதைக் காவுத்ஸ்கி நன்கு அறிவார். ஸுடெக்கும்களுக்கு அடிவருடியாக அவர் செயல்படுவதால் இந்த அசட்டுக் கட்டுக்கதையை அவர் பரப்ப வேண்டியிருக்கிறது, ஜெர்மனியில் ''இடதுசாரியினர்'' அவரது இந்தக் கட்டுக்கதையை அம்பலம் செய்ய முடியாதபடி தடுப்பது வேறு எதுவுமல்ல, அங்குள்ள தணிக்கை முறை மட்டுமேதான் என்பதையும் காவுத்ஸ்கி நன்கு அறிவார்.

''பாட்டாளி வர்க்கப் பெருந்திரளினருக்கும்'' ''ஒருசில நாடாளுமன்றத்தினருக்கும்'' இடையிலுள்ள உறவுநிலையைப் பொறுத்த வரை, காவுத்ஸ்கி அறவே உதவாக்கரையான ஆட்சேபத்தை எழுப்புகிறார்:

''நமக்கு நாமே வாதுரைக்க நேராதிருக்கும் பொருட்டு ஜெர்மானியர்களை இங்கு நாம் கருதாமல் விட்டுவிடலாம்; ஆனால் வையான், கெட்டு, ஹைண்டுமன், பிளெஹானவ் போன்றவர்கள் திடுதிப்பென ஒரே நாளில் ஏகாதிபத்தியவாதிகளாகி, சோஷலிசத்துக்குத் துரோகமிழைத்துவிட்டதாகப் பொறுப்புணர்ச்சியுள்ளவர் எவரும் கூறுவாரா? நாடாளுமன்றத்தினரையும் 'தலைமை உறுப்புகளையும்' நாம் கருதாமல் விட்டுவிடலாம்....'' [ரோசா லுக்சம்பர்கும் பிரான்ஸ் மேரிங்கும் வெளியிட்டு வரும் அகிலம் எனும் சஞ்சிகையையே காவுத்ஸ்கி இங்கு சூசகமாய்க் குறிப்பிடுகிறார் என்பது தெரிகிறது; இந்த சஞ்சிகையில் தலைமை உறுப்புகள் அனுசரித்து வரும் கொள்கையானது, அதாவது ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சியின் அதிகாரபூர்வமான அமைப்புகளாகிய அதன் செயற் குழு, (''ஃபார்ஷ்தாண்டு''), இக்கட்சியின்

நாடாளுமன்றக் குழு முதலானவை அனுசரித்து வரும் கொள்கையானது, முற்றிலும் பொருத்தமாகவே நிந்தனை செய்யப்படுகிறது] ''...ஆனால் ஒருசில நாடாளுமன்றத்தினர் அளித்த கட்டளையானது வர்க்க உணர்வு படைத்த நாற்பது லட்சம் ஜெர்மன் பாட்டாளிகளை இதுகாறும் அவர்கள் கொண்டிருந்த நோக்கங்களுக்கு நேர் விரோதமான ஒரு திசையில் இருபத்து நான்கு மணி நேரத்துக்குள் வெடுக்கெனத் திரும்பி நடைபோடச் செய்வதற்குப் போதுமானதாக இருந்ததென யாராலும் துணிந்து கூற முடியுமா? உண்மையில் அப்படி நடந்திருக்குமாயின், நிச்சயம் அது நமது கட்சி மட்டுமன்றி, மக்கட் பெருந்திரளினருங்கூட பயங்கரமாய்த் தகர்ந்துவிட்டதற்கான சான்றாகிவிடுமே. [அழுத்தம் காவுத்ஸ்கியினுடையது.] மக்கட் பெருந்திரளினர் இப்படி நெஞ்சுறுதி சிறிதும் இல்லாத ஆட்டு மந்தையாக இருப்பார்களாயின் நமக்கு நாமே சவ அடக்கம் செய்து கொள்வதே உத்தமம்'' (பக்கம் 274).

மெத்தப் பெரியவராகிய கார்ல் காவுத்ஸ்கி, தமது நடத்தை மூலமாகவும் பரிதாபத்துக்குரிய முறையில் தட்டிக் கழித்துத் தப்பியோடும் தமது சூழ்ச்சியின் மூலமாகவும் நெடுங் காலத்துக்கு முன்பே அரசியல் வழியிலும் விஞ்ஞான வழியிலும் தமக்குத் தாமே சவ அடக்கம் செய்து கொண்டு விட்டார். இதைப் புரிந்து கொள்ளத் தவறுகிறவர், அல்லது குறைந்தது உணர்ந்து கொள்வதற்குக்கூட தவறுகிறவர், சோஷலிசத்தைப் பொறுத்த வரை நம்பிக்கைக்கு இடமின்றி உதவாக்கரைகளே ஆவர். எனவே, மேரிங்கும் ரோசா லுக்சம்பர்கும் இவர்களைச் சேர்ந்தவர்களும் அகிலம் சஞ்சிகையில் காவுத்ஸ்கியையும் அவரது கும்பலையும் இழிவிலும் இழிவான ஈனப் பிறவிகளாகக் கொண்டு இவர்களைப் பற்றி ஏளனம் தொனிக்க எழுதுவது இந்நிலைமைகளில் பிழையற்றதே ஆகும்.

சிந்தித்துப் பாருங்கள்: யுத்தம் குறித்துத் தமது போக்கினை ஓரளவுக்குத் தங்குதடையின்றி (அதாவது, உடனே பிடிக்கப்பட்டு இராணுவக் கொட்டடிகளுக்கு இழுத்துச் செல்லப்படாமல், அல்லது சுட்டுக் கொல்லப்படும் உடனடியான அபாயத்துக்கு உள்ளாகாமல்) வெளியிடக் கூடிய நிலையில் இருந்தவர்கள் ''ஒருசில நாடாளுமன்றத்தினரும்'' (இவர்கள் வாக்கு அளிக்கச் சுதந்திரமும் இதற்கான உரிமையும் பெற்றிருந்தவர்கள்; இவர்களால் எதிர்த்து வாக்கு அளிக்க

முடிந்தது, இதற்காக ருஷ்யாவிலுங்கூட யாரும் அடித்து நொறுக்கப்படவில்லை, கைது செய்யப்படவுங்கூட இல்லை), ஒருசில அதிகாரிகளும் பத்திரிகையாளர்களும் இவர்களைப் போன்ற வேறு சிலரும் மட்டுமேதான். சமுதாயத்தின் இந்த அடுக்கினருக்குச் சந்தர்ப்பவாதத்தின் போர்த்தந்திரத்துடனும் சித்தாந்தத்துடனும் இருந்து வரும் பிணைப்புகளைப் பற்றி முன்பு காவுத்ஸ்கியே மிகப் பல ஆண்டுகளாக மிகப் பல தரம் எழுதியிருக்கிறார், ஆனால் இப்போது அவர் இந்தச் சமூக அடுக்கினரது துரோகத்துக்காகவும் கோழைத்தனத்துக்காகவும் இதே காவுத்ஸ்கி மக்கட் பெருந்திரளினரைக் குறை கூறுகிறார்! பொதுவாக விஞ்ஞான ஆராய்ச்சிக்கும், குறிப்பாக மார்க்சிய இயக்கவியலுக்குமான முதலாவதும் மிகவும் அடிப்படையானதுமாகிய தேவை என்னவெனில், சோஷலிஸ்டு இயக்கத்திலுள்ள போக்குகளுக்கு இடையில் தற்போது நடைபெறும் போராட்டத்துக்கும்—துரோகம் குறித்துப் பேசியும் கூக்குரல் எழுப்பியும் அமளி செய்தும் வரும் போக்குக்கும், துரோகம் எதுவும் நிகழ்ந்ததாக நினைக்காத போக்குக்கும் இடையிலான போராட்டத்துக்கும்—இதற்கு முன்பு பல பத்தாண்டுகளாய் நடைபெற்று வந்த போராட்டத்துக்கும் இடையிலுள்ள பிணைப்பை எழுத்தாளராய் இருப்பவர் பரிசீலிக்க வேண்டும் என்பதுதான். ஆனால் காவுத்ஸ்கி இதைப் பற்றி ஒரு வார்த்தைகூட கூறவில்லை; இயக்கங்களையும் போக்குகளையும் பற்றிய பிரச்சினையை எழுப்ப வேண்டுமென்ற விருப்பம்கூட அவருக்கு இல்லை. இதுவரை போக்குகள் இருந்து வந்தன, ஆனால் இப்போது அப்படி எவையும் இல்லை! இன்று இருப்பவை எல்லாம் ''மெத்தப் பெரியவர்களது'' தடபுடலான பெயர்கள் மட்டும்தான். அடிமைப் புத்தி கொண்ட ஆத்மாக்கள் இப்பெயர்களை எப்போதுமே தமது துருப்புச் சீட்டுகளாய் எடுத்து வீசுகின்றன. ''நீ எனக்கு ஆதாரம், நான் உனக்கு ஆதாரம்'' என்ற விதிக்கு ஏற்ப நேசபாவத்துடன் ஒருவரையொருவர் குறிப்பிட்டுக் கொள்வதும், ஒருவர் மற்றவரது ''வண்டவாளங்களை'' மூடி மறைப்பதும் இந்தச் சந்தர்ப்பத்தில் மிகமிக வசதியான ஏற்பாடுதான். ''இதைப் போய்ச் சந்தர்ப்பவாதமெனச் சொல்லலாமா'' என்று வியந்து கூவினார் மார்த்தவ், பெர்ன் நகரில் நிகழ்த்திய ஒரு பிரசங்கத்தில் (சோத்சியால்-டெமக்ராத்,

இதழ் 36ஐப் பார்க்கவும்), ''கெட்டு, பிளெஹானவ், காவுத்ஸ்கி ஆகியோர் எல்லாம்...!'' ''கெட்டு போன்ருேரை நாம் எளிதில் சந்தர்ப்பவாதியெனக் குற்றம் சாட்டக் கூடாது'' என்று எழுதிஞர் அக்செல்ரோது (கோலஸ், இதழ்கள் 86,87). ''எனக்காக நான் வாதாடப் போவதில்லை'' என்ருர் காவுத்ஸ்கி பெர்லினில், ''ஆனல் வையான், கெட்டு, ஹைண்டுமன், பிளெஹானவ் ஆகியோரைப் போய்...!'' பரஸ்பரம் மெச்சிப் புகழ்ந்து கொள்வோரது மன்றமே அன்றி வேறென்ன இது?

ஹைண்டுமனுக்குங்கூட கூழைக் கும்பிடு போட்டுப் பல்லைக் காட்டும் அளவுக்குச் செல்கிருர் காவுத்ஸ்கி; ஏதோ நேற்றுதான் இந்த ஹைண்டுமன் கடமையைத் துறந்து ஏகாதிபத்தியத்தின் தரப்புக்கு ஓடிவிட்டாற்போல் தோன்றும் படிச் செய்யும் அளவுக்குச் செல்கிருர்—அடிவருடித்தனத்தில் தமக்குள்ள மோகத்தை அந்த அளவுக்குக் காவுத்ஸ்கி தமது எழுத்துகளில் வெளிப்படுத்திக் காட்டுகின்ருர். இதே *Die Neue Zeit* ஏடும், உலகெங்குமுள்ள எத்தனையோ பல சமூக-ஜனநாயக ஏடுகளும் ஹைண்டுமனின் ஏகாதிபத்தியம் குறித்து பல ஆண்டுகளாகவே எழுதி வந்திருக்கின்றன. காவுத்ஸ்கி தாம் குறிப்பிடும் ஆட்களின் அரசியல் வாழ்க்கை வரலாற்றைத் தீர்க்கமாய் ஆராய்ந்திருப்பாராயின், இவர்கள் துரோகம் புரிந்து ஏகாதிபத்தியத்தின் தரப்புக்கு ஓடுவதற்கான பாதையை, திடுதிப்பென ஒரே நாளில் அல்ல, பல பத்தாண்டுகளின் காலப் போக்கில், செப்பனிட்டு வந்த குணதிசயங்களும் நிகழ்ச்சிகளும் இவர்களது வாழ்க்கை வரலாற்றில் அடங்கியிருந்தனவா, இல்லையா என்பது அவர் நினைவுக்கு வந்திருக்கும்; ஜொரேசிஸ்டுகளால்[21] வையானும், மென்ஷிவிக்குகளாலும்[22] கட்சிக் கலைப்புவாதிகளாலும் பிளெஹானவும் கைது செய்யப்பட்டு இருத்தப்படவில்லையா என்பதும், எந்த முக்கிய பிரச்சினையிலும் சுயேச்சையான நிலையை ஏற்கத் திராணியற்றதும், உயிரற்ற உப்புசப்பற்ற ஏடுகளுக்கு முன்மாதிரியானதுமாகிய கெட்டிஸ்டு சஞ்சிகையான சோஷலிசம்[23] சஞ்சிகையில் கெட்டிஸ்டுப் போக்கு[24] எல்லார் கண்ணுக்கு முன்னல் நசித்து வரவில்லையா என்பதும், காவுத்ஸ்கியுங்கூட (ஹைண்டுமனுக்கும் பிளெஹானவுக்கும் பக்கத்தில் மிகவும் பொருத்தமாகவே அவரை அமர்த்து

கிருர்களே, அவர்களுக்காக இதைக் குறிப்பிடுகிருேம்) பெர்ன்ஷ்டைனியத்தை[25] எதிர்த்து நடைபெற்ற போராட்டத்தின் ஆரம்பக் கட்டத்தில் மில்லரானியத்தைப்[26] பற்றிய பிரச்சினையில் மனவுறுதியில்லாதவராக இருக்கவில்லையா என்பதும் இன்ன பிறவும் நினைவுக்கு வந்திருக்கும்.

ஆனால் காவுத்ஸ்கி இந்தத் தலைவர்களுடைய வாழ்க்கை வரலாற்றை விஞ்ஞான வழியில் ஆராய்வதில் கிஞ்சிற்றும் அக்கறை காட்டவில்லை. இந்தத் தலைவர்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக வாதிடுகிருர்களே, அது தமது சொந்த வாதங்களைக் கொண்டா, அல்லது சந்தர்ப்பவாதிகள், முதலாளித்துவ வர்க்கத்தினரின் வாதங்களை அப்படியே திருப்பிக் கூறியா என்பதைத் தெரிந்து கொள்ள அவர் முயலவே இல்லை. இந்தத் தலைவர்களின் செயல்கள் பெரிய அரசியல் முக்கியத்துவம் பெற்றிருப்பதற்குக் காரணம் அவர்களது அளவுகடந்த சொந்த செல்வாக்கா, அல்லது இராணுவ அமைப்பால் ஆதரிக்கப்படும் மெய்யாகவே ''செல்வாக்கு மிகுந்த'' வேருெரு போக்குடன், அதாவது முதலாளித்துவப் போக்குடன், அவர்கள் சேர்ந்து கொண்டு விட்டதா என்பதைத் தெரிந்து கொள்ளவும் அவர் முயலவே இல்லை. இந்தப் பிரச்சினை குறித்துப் பரிசீலனை செய்யக் காவுத்ஸ்கி முற்படவே இல்லை, அவருடைய கவலை எல்லாம் மக்கட் பெருந்திரளினரின் கண்களில் மண்ணைத் தூவுவதும், மெத்தப் பெரியவர்களது பெயர்களைச் சொல்லி அவர்களைத் திகைக்க வைப்பதும், தெளிவாகப் பிரச்சினையை எழுப்பி எல்லாப் பக்கங்களிலுமிருந்து அதைப் அவர்கள் பரிசீலிக்க முடியாதபடித் தடுப்பதும்தான்.*

---

* வையானையும் கெட்டையும், ஹைன்டுமனையும் பிளெஹானவையும் பற்றி காவுத்ஸ்கியின் சுட்டுரைகள் இன்னெரு விதத்திலும் குறிப்பிடத்தக்கவை. லெஞ்ச், ஹேனிஷ் ரகத்தைச் சேர்ந்த பட்டவர்த்தனமான ஏகாதிபத்தியவாதிகள் (சந்தர்ப்பவாதிகளைப் பற்றிக் கூறவே வேண்டியதில்லை) தமது சொந்தக் கொள்கை நியாயமே என்று வாதாடுவதற்காக ஹைன்டுமனையும் பிளெஹானவையும் குறிப்பிடுகிருர்கள், இதற்கு அவர்களுக்கு உரிமை உண்டுதான். இரண்டும் ஒரே கொள்கைதான் என்று அவர்கள் சொல்வது முற்றிலும் உண்மையேதான். ஆனல் காவுத்ஸ்கி, ஏகாதிபத்தியத்தின் பக்கத்துக்கு மாறி சென்று விட்ட தீவிரவாதிகளாகிய லெஞ்சை

''...ஒருசில நாடாளுமன்றத்தினர் அளித்த கட்டளையா னது நாற்பது லட்சம் பாட்டாளிகளை... வெடுக்கென திரும்பி நடைபோடச் செய்வதற்குப் போதுமானதாக இருந்தது....''

இங்கு கூறப்படும் ஒவ்வொரு சொல்லும் முழுக்க முழுக்க பொய்யானது. ஜெர்மன் கட்சி நிறுவனத்தின் உறுப்பினர் தொகை பத்து லட்சமே அன்றி நாற்பது லட்சமல்ல. எந்த நிறுவனத்திலும் நடைபெறுவது போலவே இந்த வெகுஜன நிறுவனத்தின் ஒன்றுபட்ட சித்தமானது, சோஷலிசத்துக்குத் துரோகமிழைத்துவிட்ட ''ஒருசிலர்'' அடங்கிய அதன் ஒன்று பட்ட அரசியல் மையத்தின் வாயிலாக மட்டுமே வெளியா யிற்று. இந்த ஒருசிலரேதான், தமது அபிப்பிராயத்தைக் கூறுமாறு கேட்கப்பட்டவர்கள்; இந்த ஒருசிலர்தான் ஓட்டு போடும்படி அழைக்கப்பட்டவர்கள்; இவர்கள்தான் ஓட்டு போடும்படியான நிலையில் இருந்தவர்கள்; இவர்கள்தான் கட்டுரைகளும் பிறவும் எழுதும்படியான நிலையில் இருந்த வர்கள். மக்கட் பெருந்திரளினர் தமது அபிப்பிராயத்தைக் கூறுமாறு கேட்கப்படவில்லை. அவர்கள் ஓட்டு போட அனு மதிக்கப்படவில்லை என்பது மட்டுமல்ல, அவர்கள் பிளவு படுத்தப்பட்டு, ஒருசில நாடாளுமன்றத்தினரிடமிருந்து அல்ல, இராணுவ அதிகாரத்திடமிருந்து வந்த ''கட்டளைகள் மூலம்'' வலுக்கட்டாயம் செய்யப்பட்டனர். இராணுவ நிறுவனம் ஒன்று இருந்து வந்தது; இந்த நிறுவனத்தின் தலைவர்களிட மிருந்து எவ்விதமான துரோகமும் எழவில்லை. இந்த நிறு வனம் ''மக்கட் பெருந்திரளினரை'' ஒவ்வொருவராக

---

யும் ஹேனிஷையும் பற்றி இகழ்ச்சியுடன்தான் பேசுகிறார். தாம் இத்தகைய பாவிகளைப் போன்றவரல்ல, இவர்களுடன் தாம் கருத்து வேறுபாடு கொண்டவராவார், தொடர்ந்து புரட்சியாளராகவே இருந்து வந்துள்ளவராவார் (வேடிக் கையில்லை!) என்று சொல்லிக் கடவுளுக்குத் தமது நன்றி யைத் தெரிவித்துக் கொள்கிறார். ஆனால் உண்மை என்ன வெனில் காவுத்ஸ்கியின் நிலையும் அவர்களுடைய நிலையும் ஒன்றேதான். இனிக்கப் பேசும் தந்திரக்கார தேசியவெறிய ராக இருக்கும் காவுத்ஸ்கி, வெகுளியான அசட்டுத் தேசிய வெறியர்களாக இருக்கும் டவிதையும் ஹைனேயையும் லெஞ்சையும் ஹேனிஷையும் காட்டிலும் அருவருக்கத்தக்க வர் ஆவார்.

அழைத்து, தனிப்பட்ட ஒவ்வொருவருக்கும் இறுதி எச்சரிக்கை அளித்தது: உங்கள் தலைவர்கள் உங்களுக்கு அளித்திடும் ஆலோசனையை ஏற்று சேனையில் சேருங்கள், இல்லையேல் சுடப்படுவீர்கள் என்றது அது. மக்கட் பெருந்திரளினர் நிறுவன ஒழுங்கமைப்பு கொண்ட முறையில் செயல்பட முடியவில்லை, ஏனென்றால் ஏற்கெனவே அவர்கள் அமைத்திருந்த நிறுவனம், ''ஒருசில'' லேகின்கள், காவுத்ஸ்கிகள், ஷெய்டமன்கள் ஆகியோரால் உருவகம் செய்யப்பட்டிருந்த இந்த நிறுவனம், அவர்களுக்குத் துரோகமிழைத்துவிட்டது. புதிய நிறுவனம் ஒன்றை அமைக்க அவகாசம் தேவைப்படுகிறது, அதோடு உளுத்துப் போய்க் காலங் கழிந்ததாகிவிட்ட பழைய நிறுவனத்தைக் குப்பைக் குழியிலே எறிவதற்கு வைராக்கியம் தேவைப்படுகிறது.

''மக்கட் பெருந்திரளினர்'' யுத்தத்துக்கு ''எதிர் நடவடிக்கையாக'' ''இருபத்து நான்கு மணி நேரத்துக்குள்'' புரட்சி செய்து, ஏகாதிபத்தியத்துக்கு நேர் எதிரான ''சோஷலிசத்தை'' நிறுவிக் கொண்டுவிட வேண்டும், இல்லையேல் ''மக்கட் பெருந்திரளினர்'' ''உறுதியின்மையும் துரோகத்தனமும்'' வெளிப்படுத்துவோரே ஆவரென்ற அசட்டுக் கருத்தினைக் காவுத்ஸ்கி தமது எதிராளிகளாகிய இடதுசாரியினர் கூறுவதாகச் சொல்லி அவர்களைத் தோற்கடிக்க முயலுகிறார். ஆனால் இது முற்றிலும் அபத்தமே ஆகும்; கல்வி வாசனை அறியாத முதலாளித்துவ, போலீஸ் பிரசுரங்களின் தயாரிப்பாளர்கள் புரட்சியாளர்களைத் ''தோற்கடிப்பதற்காக'' இதுகாறும் உபயோகித்து வந்த இதை இப்போது காவுத்ஸ்கி ஆடம்பரமாய் எடுத்துரைக்கிறார். புரட்சி ''செய்யப்படக்'' கூடியதல்ல, எதார்த்த வழியில் (அதாவது, கட்சிகள், வர்க்கங்களின் சித்தத்தைச் சார்ந்திராத வழியில்) முதிர்ச்சியுற்ற நெருக்கடிகளிலிருந்தும், வரலாற்றின் திருப்பங்களிலிருந்தும் வளர்வதாகும், நிறுவன ஒழுங்கமைப்பு இல்லையேல் பெருந்திரளினர் சித்த ஒற்றுமை பெற முடியாது, மத்தியத்துவ அரசின் சக்தி வாய்ந்த பயங்கரவாத இராணுவ ஒழுங்கமைப்பை எதிர்த்துப் போராடுவது கடினமான, நீண்ட நெடிய காரியமாகும் என்பதெல்லாம் காவுத்ஸ்கியின் இடதுசாரி எதிராளிகள் நன்கு அறிந்தவையே. மக்கட் பெருந்திரளினர் அவர்களது தலைவர்கள் புரிந்த துரோகத்

தின் விளைவாய், தீர்மானகரமான தருணத்தில் ஏதும் செய்ய முடியாமற் போய்விட்டது. ஆனல் ''ஒருசிலராகிய'' இந்தத் தலைவர்கள் பலவும் செய்ய முடியும்படியான சிறந்த நிலையில் இருந்தார்கள் என்பதோடு இவற்றைச் செய்யக் கடமைப் பட்டவர்களாகவும் இருந்தார்கள்: யுத்தக் கடன்களை எதிர்த்து ஓட்டுப் போடுதல், ''வர்க்க அமைதியையும்'' யுத்தத்துக்கு நியாயம் கற்பிப்பதையும் எதிர்த்து நிற்றல், தமது சொந்த அரசாங்கங்களது தோல்விக்கு ஆதரவாக மொழிதல், போர் முனை அகழ்வரிகளில் சோதரத்துவ உணர்வு பரவுவதற்குரிய பிரசாரத்தை நடத்துவதற்கான சர்வதேச ஏற்பாடு ஒன்றை அமைத்திடல், புரட்சிகரச் செயற்பாடுகள் துவக்கப்படு வதன் அவசியத்தை வற்புறுத்தும் சட்டவிரோத வெளியீடு கள்* வெளிவருவதற்கு ஏற்பாடு செய்தல் முதலான பலவும் செய்யக் கடமைப்பட்டிருந்தார்கள்.

இந்தச் செயல்களைத்தான், அல்லது இவற்றை ஒத்த செயல்களைத்தான் ஜெர்மன் ''இடதுசாரிகள்'' மனதிற் கொண்டுள்ளனர் என்பதையும், இரா ணுவத் தணிக்கை

---

* வர்க்கப் பகையுணர்வும் வர்க்கப் போராட்டமுங் குறித்து எழுதுவதற்கு அரசாங்கம் விதித்துள்ள தடையை முன்னிட்டு, சமூக-ஜனநாயகப் பத்திரிகைகள் யாவற்றையும் மூட வேண்டிய அவசியம் ஏற்பட்டே இராதென்பதை இடையில் இங்கு குறிப்பிடலாம். இவை குறித்து எழுதுவ தில்லை என்று *Vorwärts* ஏடு[27] செய்தது போல் ஒத்துக்கொள் வது இழிவான, கோழைத்தனமான செயலே ஆகும். இதைச் செய்த போது *Vorwärts* அரசியல் வழியில் மடிந்து போயிற்று, மார்த்தவ் இவ்வாறு கூறியது சரியே. ஆனல், சட்டபூர்வமான பத்திரிகைகளைக் கட்சியைச் சார்ந்தவை அல்ல, சமூக-ஜன நாயகத்தைச் சார்ந்தவை அல்ல, தொழிலாளர்களில் ஒரு பகுதியோரின் தொழில்நுட்பத் தேவைகளைப் பூர்த்தி செய் கிறவை என்பதாக, அதாவது அரசியல் சார்பில்லாப் பத்திரி கைகள் என்பதாக அறிவித்து அவற்றை மூடாமல் தொ டர்ந்து நடத்திச் செல்வது சாத்தியமாகவே இருந்தது. ஒரு புறம் யுத்தத்தைப் பற்றி மதிப்பிடு செய்யும் தலைமறைவான சமூக-ஜனநாயக வெளியீடுகள், மறு புறம் இப்படிப்பட்ட மதிப்பீடு செய்யாமல், சட்டப்படி வெளிவரும் தொழிலாளி வர்க்க வெளியீடுகள், அதாவது உண்மையல்லாத ஒன்றைச் சொல்லாமல் உண்மை குறித்து மௌனமாயிருக்கும் வெளி யீடுகள்—இது சாத்தியமற்றதாக வேண்டியதில்லை அல்லவா?

முறை காரணமாய் இவை எல்லாம் குறித்து அவர்கள் நேரடியாக, பகிரங்கமாகப் பேச முடியாது என்பதையும் காவுத்ஸ்கி மிக நன்ருகவே அறிவார். எப்பாடு பட்டேனும் சந்தர்ப்பவாதிகளைப் பாதுகாத்து வாதாட வேண்டுமென்ற ஆவலால் உந்தப்பட்டு காவுத்ஸ்கி முன்பின் கண்டிராத இழி செயலில் இறங்குகிருர்: இராணுவத் தணிக்கையாளர்களின் பின்ஞல் மறைந்து கொண்டு, தான் அம்பலம் செய்யப்பட்டு விடாமல் இத்தணிக்கையாளர்கள் தன்னைக் காப்பாற்றுவர் என்ற திட நம்பிக்கையுடன் அப்பட்டமான அபத்தங்களை இடதுசாரியினர் கூறுவதாக அவர்கள் மீது சுமத்துகின்ருர்.

## 7

காவுத்ஸ்கி எல்லா விதமான தந்திரங்களையும் கையாண்டு முக்கியமான விஞ்ஞான, அரசியல் கேள்வியை வேண்டுமென்றே தட்டிக்கழித்து, அதன்மூலம் சந்தர்ப்பவாதிகளுக்கு மட்டிலா மகிழ்ச்சி அளிக்கின்ருர். அந்தக் கேள்வி என்னவெனில்: இரண்டாவது அகிலத்தின் முதன்மையான பிரதிநிதிகளால் சோஷலிசத்துக்குத் துரோகமிழைக்க முடிந்தது எப்படி?

இந்தக் கேள்வியைத் தனிப்பட்ட தலைவர்களது வாழ்க்கை வரலாறுகளின் கண்ணோட்டத்திலிருந்து பரிசிலிக்கலாகாது. வருங்காலத்தில் இவர்களது வாழ்க்கை வரலாறுகளை எழுதுவோர் இந்தக் கோணத்திலிருந்தும் இப்பிரச்சினையைப் பகுத்தாராய வேண்டியிருக்கும்; ஆனல் இன்று சோஷலிஸ்டு இயக்கத்தின் கருத்துக்குரியதாக இருப்பது இதுவல்ல, சமூக-தேசியவெறிப் போக்கின் வரலாற்றுப் தோற்றுவாய்களையும் நிலைமைகளையும் முக்கியத்துவத்தையும் வலிமையையும் பற்றிய ஆராய்ச்சியேதான். (1) சமூக-தேசியவெறி உதித்தெழுந்தது எங்கிருந்து? (2) அதைப் பலம்பெறச் செய்தது எது? (3) எப்படி அதை எதிர்த்துப் போராடியாக வேண்டும்? பிரச்சினையை இவ்விதம் அணுகுவதுதான் காரிய மனப்பான்மை வாய்ந்ததாக இருக்க முடியும், ''தனியாள் முறையில்'' அணுகுவது நடைமுறையில் தட்டிக் கழிப்பதே ஆகும், குதர்க்கவாதத் தந்திரமே ஆகும்.

முதலாவது கேள்விக்குப் பதிலளிக்கும் பொருட்டு நாம், முதற்கண் சமூக-தேசியவெறியின் சித்தாந்த, அரசியல் உள்ளடக்கம் சோஷலிசத்தில் அதற்கு முன்பிருந்த போக்கு எதனுடனுவது இணைப்பு கொண்டுள்ளதா என்று பார்க்க வேண்டும்; இரண்டாவதாக—எதார்த்த அரசியல் பிரிவினைகளின் நோக்கு நிலையிலிருந்து—சமூக-தேசியவெறியை எதிர்ப்பவர்கள், ஆதரிப்பவர்க்ள் என்பதாக சோஷலிஸ்டுகளிடையே தற்போதுள்ள பிரிவினை வரலாற்று வழியில் அதற்கு முன்பிருந்த பிரிவினைகளுடன் கொண்டுள்ள உறவு என்னவென்று பார்க்க வேண்டும்.

சமூக-தேசியவெறி என்பது தற்போதைய ஏகாதிபத்திய யுத்தத்தில் தாயகப் பாதுகாப்பெனும் கருத்தினை ஏற்றுக் கொள்வதையும், இந்த யுத்தத்தில் சோஷலிஸ்டுகளுக்கும் முதலாளித்துவ வர்க்கத்தாருக்கும் அவர்களது ''சொந்த'' நாடுகளின் அரசாங்கங்களுக்கும் இடையிலான கூட்டணி நியாயமானதே என்று கருதுவதையும், தமது ''சொந்த'' முதலாளித்துவ வர்க்கத்தாருக்கு எதிரான பாட்டாளி வர்க்கப் புரட்சிகரச் செயலுக்காகப் பிரசாரம் செய்யவும் இச் செயலை ஆதரிக்கவும் மறுப்பதையும், இன்ன பிறவற்றையும் குறிப்பதாகும். சமூக-தேசியவெறியின் அடிநிலை சித்தாந்த, அரசியல் உள்ளடக்கமானது சந்தர்ப்பவாதத்தின் அடிப்படைகளுடன் முழு அளவுக்கு ஒருங்கிணைவது தெட்டத் தெளிவாகத் தெரிகிறது. இரண்டும் ஒரே போக்கே ஆகும். 1914-15ஆம் ஆண்டு யுத்த நிலைமைகளில் சந்தர்ப்பவாதமானது சமூக-தேசியவெறிக்கு இட்டுச் செல்கிறது. வர்க்க ஒத்துழைப்புக் கருத்துதான் சந்தர்ப்பவாதத்தின் பிரதான இயல்பாகும். யுத்தமானது இக்கருத்தினைத் தர்க்கவழியில் அதன் இறுதி முடிவுக்குக் கொண்டு வந்து, அதன் வழக்கமான காரணிகளுடனும் தூண்டுதல்களுடனும் விசேஷமான பலவற்றையும் சேர்த்துக் கூட்டியுள்ளது. தனிவகை அச்சுறுத்தல்களையும் நிர்ப்பந்தங்களையும் செயல்பட வைத்து அது குட்டிமுதலாளித்துவத் தன்மையதான பிளவுபட்ட திரளினரை முதலாளித்துவ வர்க்கத்துடன் ஒத்துழைக்கும்படி பலவந்தம் செய்துள்ளது. இந்தச் சூழ்நிலைமையானது சந்தர்ப்பவாதத்தைப் பின்பற்றுவோரைப் பெருகச் செய்துள்ளது;

நேற்றைய தீவிரவாதிகள் பலரும் கடமை துறந்து அந்த முகாமுக்கு ஏன் ஓடினர் என்பதற்கு முழு அளவில் விளக்கம் தருகிறது.

சந்தர்ப்பவாதமானது மிகப் பெருந்திரளினரது அடிப்படை நலன்களைத் தொழிலாளர்களில் மிகச் சொற்பமான சிறுபான்மையோரது தற்காலிக நலன்களுக்காகக் காவு கொடுத்தலைக் குறிக்கிறது; வேறு விதமாகக் கூறினல், பாட்டாளி வர்க்கப் பெருந்திரளினருக்கு எதிராகத் தொழிலாளர்களில் ஒரு பிரிவினருக்கும் முதலாளித்துவ வர்க்கத்தாருக்குமிடையே ஏற்படும் கூட்டணியைக் குறிக்கிறது. யுத்தம் இம்மாதிரியான ஒரு கூட்டணியைக் குறிப்பிடத்தக்கவாறு முனைப்பு மிக்கதும் தவிர்க்கவொண்ணுததும் ஆக்கியுள்ளது. முதலாளித்துவ வளர்ச்சியின் காலத்தில் தொழிலாளர்களில் தனியுரிமை பெற்ற ஓர் அடுக்கினரது ஒப்பளவில் அமைதி வாய்ந்த, கலாசாரத் தரமுடைத்த வாழ்வானது இவ்வடுக்கினரை ''முதலாளித்துவ மயமாக்கியும்'', இவர்களது தேசிய முதலாளிகளது விருந்து மேஜையிலிருந்து இவர்களுக்குச் சில துண்டுகளை விழச் செய்தும், ஏழ்மையுற்று வதைபடும் பெருந்திரளினரின் துன்பதுயரங்களிலிருந்தும் புரட்சிகர மனப்பாங்கிலிருந்தும் இவர்களைத் தனிமை செய்தும் வந்த இந்த விசேஷ இயல்புகளினல் பல பத்தாண்டுகளின் போக்கில் சந்தர்ப்பவாதம் தோற்றுவிக்கப்பட்டது. ஏகாதிபத்திய யுத்தம் இந்த நிலைவரங்களின் நேரடியான தொடர்ச்சியும் இறுதி முடிவுமே ஆகும், ஏனெனில் இந்த யுத்தம் பேரரசு அந்தஸ்து பெற்ற தேசங்களுக்குரிய தனியுரிமைகளுக்கும், இவற்றினிடையே காலனிகளின் மறுபங்கீட்டுக்கும், பிற தேசங்கள் மீது இவை ஆதிக்கம் பெறுவதற்குமான ஒரு யுத்தமாகும். தொழிலாளி வர்க்கத்தின் குட்டிமுதலாளித்துவ ''மேல் அடுக்கினராய்'', அல்லது பிரபுக்குலத்தவராய் (மற்றும் அதிகாரவர்க்கத்தினராய்) தமக்குள்ள தனியுரிமை நிலையைப் பாதுகாத்துக் கொண்டு மேலும் பலப்படுத்திக் கொள்ளுதல்—இதுவேதான் குட்டிமுதலாளித்துவச் சந்தர்ப்பவாத நாட்டங்களின் இயற்கையான யுத்தகாலத் தொடர்ச்சியும் இதற்கிசைவான போர்த்தந்திரமும் ஆகும், இதுவேதான் இன்றைய சமூக-ஏகாதிபத்தியத்தின் பொருளாதார

அடித்தளமாகும்.* மற்றும் பழக்கத்துக்குள்ள பிடிப்பு, ஒப்பளவில் ''அமைதியான'' பரிணமத்தின் மாற்றமில்லா நெறி, தேசியத் தப்பெண்ணங்கள், கடுந் திருப்பங்கள் குறித்து நிலவும் அச்சம், இவற்றிலுள்ள அவநம்பிக்கை ஆகிய இவை

---

* தொழிலாளர்களைப் பிளவுபடுத்துவதற்கும் சோஷலிசத்திலிருந்து அவர்களைத் திசை திருப்பி விடுவதற்குமான ஒரு வழியாக, ''பேரரசு'', தேசியத் தனியுரிமைகளுக்குள்ள முக்கியத்துவத்தை ஏகாதிபத்தியவாதிகளும் முதலாளித்துவ வர்க்கத்தாரும் எவ்வளவு உயர்வாக மதித்துப் போற்றுகிறார்கள் என்பதைக் காட்ட இதோ சில உதாரணங்கள். **ரோமானிய பேரரசும் பிரிட்டிஷ் பேரரசும்** (ஆக்ஸ்போர்டு, 1912) என்ற தலைப்புள்ள புத்தகத்தில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதி லூகாஸ் தற்போதுள்ள பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் நிற மக்களுக்குச் சட்டப்படி தகுதிக்குறைவுகள் நிலவுவதை ஏற்றுக் கொள்கிறார் (பக்கங்கள் 96—97). ''நமது சாம்ராஜ்யத்திலும் வெள்ளைத் தொழிலாளர்களும் நிறத் தொழிலாளர்களும் அருகருகே இருந்து வரும் இடங்களில்... இவர்கள் ஒரே நிலையில் வேலை செய்யவில்லை, வெள்ளையன் ஓரளவுக்கு... நிறத்தவனின் மேலாளனாக இருக்கிறான்'' என்று அவர் கூறுகிறார்'' (பக்கம் 98). **யுத்தத்துக்குப் பிற்பாடு சமூக-ஜனநாயகம்** (1915) என்ற பிரசுரத்தில், சமூக-ஜனநாயகவாதிகளுக்கு எதிரான மாமன்னக் கூட்டணியின் முன்னாள் செயலாளராகிய எர்வின் பெல்கர் சமூக-ஜனநாயகவாதிகளது நடத்தையைப் போற்றுகின்றார், இவர்கள் ''சர்வதேசியவாத, கற்பனவாத'', ''புரட்சிகரக்'' கருத்துக்கள் இல்லாத (பக்கம் 44), ''சுத்தமான தொழிலாளர் கட்சியாக'' (பக்கம் 43), ஒரு ''தேசிய'', ''ஜெர்மன் தொழிலாளர் கட்சியாக'' (பக்கம் 45) வேண்டும் என்கிறார். வெளிநாடுகளில் செய்யப்பட்ட முதலீடுகளைப் பற்றிய ஒரு புத்தகத்தில் (1907), ஜெர்மன் ஏகாதிபத்தியவாதி சர்ட்டோரியுஸ் வான் வால்டர்ஸ்ஹாவுசன்[28] ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதிகள் ''தேசிய நலவுரிமையை'' (பக்கம் 438)—காலனிகளைக் கைப்பற்றுவதில் இது அடங்கியிருக்கிறது—உதாசீனம் செய்வதாகக் குறை கூறுகின்றார்; பிரிட்டிஷ் தொழிலாளர்களது ''எதார்த்த வாதத்தை'', உதாரணமாக, வெளியிலிருந்து வந்து குடியேறுவோருக்கு எதிரான அவர்களது போராட்டத்தைப் போற்றிப் புகழ்கிறார். **உலக அரசியலின் கோட்பாடுகளைப் பற்றிய** புத்தகம் ஒன்றில் ஜெர்மன் அரசுதந்திரி ரூதர்ஃபெர்[29], மூலதனம் சர்வதேசியமயமாவதால் தேசிய முதலாளிகள் அதிகாரத்துக்காகவும் செல்வாக்குக்காகவும் நடத்தும் கடுமையான போராட்டம், ''பெரும்பான்மைப்

யாவும் துணை நிலைமைகளாகச் சேர்ந்து, சந்தர்ப்பவாதத்தையும், சந்தர்ப்பவாதத்துடனான வஞ்சகமும் அடிவருடித்தனமும் வாய்ந்த இணக்க மனோபாவத்தையும்—சிறிது காலத்துக்கு மட்டுமேதான் என்றும், சில அசாதாரண காரணங்களையும் நோக்கங்களையும் முன்னிட்டுதான் என்றும் பாவனை செய்து கொண்டு — வளர்த்துச் சென்றன. பல பத்தாண்டுகளாய் ஊக்குவிக்கப்பட்டு வந்த இந்தச் சந்தர்ப்பவாதத்தை யுத்தம் மாற்றமுறச் செய்து, மேலும் உயர்ந்த ஒரு கட்டத்துக்கு உயர்ந்து செல்ல வைத்தது; அதன் சாயல்களது எண்ணிக்கையையும் வகைகளையும் அதிகமாக்கியது; அதை ஆதரிப்போரது அணிவரிசைகளைக் கூடுதலாக்கியது; ஏராளமான புதிய குதர்க்கவாதங்களைச் சேர்த்து அவர்களது வாதங்களை வளமுறச் செய்தது; பல புதிய அருவிகளையும் ஓடைகளையும் சந்தர்ப்பவாதத்தின் பிரதான பெருக்குடன் வந்து கலந்து சங்கமிக்கச் செய்தது. ஆயினும் இந்தப் பிரதான பெருக்கு மறைந்துவிடவில்லை. இதற்கு நேர்மாறானதே உண்மை.

---

பங்குடைமைக்கான'' (பக்கம் 161) இந்தப் போராட்டம் எவ்விதத்திலும் அகற்றப்பட்டுவிடவில்லை என்ற உலகறிந்த உண்மையை வலியுறுத்துகின்றார். கடுமையாகிவிடும் இந்தப் போராட்டத்தில் தொழிலாளர்களும் கலந்து கொள்கிறார்கள் என்று (பக்கம் 175) இவ்வாசிரியர் குறிப்பிடுகிறார். 1913 அக்டோபர் தேதியிட்ட புத்தகமான இதில், ''மூலதனத்தின் நலன்களே'' (பக்கம் 157) நவீன கால யுத்தங்களுக்கான காரணமாகுமென இவ்வாசிரியர் தெட்டத் தெளிவாகவே கூறுகின்றார்.''தேசியப் போக்கு'' சோஷலிசத்தின் ''அச்சாணியாகி'' விடுகிறதென்றும் (பக்கம் 176), சமூக-ஜனநாயகவாதிகளது சர்வதேசிய அறிக்கைகள் குறித்து அரசாங்கங்கள் அஞ்சத் தேவையில்லையென்றும் (பக்கம் 177), உண்மையில் சமூக-ஜனநாயகவாதிகள் மேலும் மேலும் தேசிய மனப்பாங்குடையோராக மாறி வருகிறார்களென்றும் (பக்கங்கள் 103, 110, 176) கூறுகிறார். சர்வதேச சோஷலிசமானது தொழிலாளர்களைத் தேசியச் செல்வாக்கிலிருந்து விடுபட்டு வெளியே வரச் செய்யுமாயின் அது வெற்றி பெற்றுவிடும், ஏனெனில் வன்முறையை மட்டும் கொண்டு எதையும் சாதித்துவிட முடியாது; ஆனால் தேசிய உணர்ச்சிகள் மேல் நிலை பெறுமாயின் சர்வதேச சோஷலிசம் தோல்வியுற்றுவிடும் என்கிறார் (பக்கங்கள் 173—174).

இந்த முதலாளித்துவச் சிமிழ்க்கட்டி சோஷலிஸ்டுக் கட்சிகளினுள் இனியும் தொடர்ந்து இருப்பது சாத்தியமற்றதாகி விடும்படி அந்த அளவுக்கு முதிர்ச்சியடைந்துவிடும் சந்தர்ப்பவாதமே சமூக-தேசியவெறி.

சமூக-தேசியவெறிக்கும் சந்தர்ப்பவாதத்துக்குமுள்ள இந்த மிக நெருங்கிய, முறித்திட முடியாத இணைப்பினைக் காண மறுப்பவர்கள் தனிப்பட்ட சில உதாரணங்களைக் கெட்டியாகப் பற்றிக் கொண்டுவிடுகிறார்கள்—இந்த அல்லது அந்த சந்தர்ப்பவாதி சர்வதேசியவாதியாக மாறிவிட்டார், இந்த அல்லது அந்தத் தீவிரவாதி தேசியவெறியராக மாறி விட்டார் என்கிறார்கள். ஆனால் போக்குகளின் வளர்ச்சியைப் பொறுத்தவரை இப்படிப்பட்ட வாதம் செல்லத்தக்கதல்ல. முதலாவதாக, தொழிலாளர் இயக்கத்தில் நிலவும் தேசிய வெறிக்கும் சந்தர்ப்பவாதத்துக்கும் பொருளாதார அடித் தளம் ஒன்றேதான்: பாட்டாளி வர்க்கப் பெருந்திரளினருக்கு எதிராய், பொதுவாக உழைப்பாளரும் ஒடுக்கப்படுவோருமான பெருந்திரளினருக்கு எதிராய், பாட்டாளி வர்க்கத்தின் எண்ணிக்கையில் சொற்பமான மேலடுக்கினருக்கும் குட்டி முதலாளித்துவப் பிரிவோருக்குமிடையே—தமது ''சொந்த'' தேசிய மூலதனத்தின் தனியுரிமைகளில் சில கவளங்களை மட்டும் பெற்றுக் கொள்ளும் இவர்களிடையே—ஏற்படும் கூட்டணியே இந்த அடித்தளம். இரண்டாவதாக, இந்த இரண்டு போக்குகளும் ஒரே சித்தாந்த, அரசியல் உள்ளடக்கம் கொண்டவை ஆகும். மூன்றாவதாக, சோஷலிஸ்டுகளிடையே இரண்டாவது அகிலத்தின் காலத்துக்குரிய (1889—1914) குணுதிசயமாக சந்தர்ப்பவாதப் போக்கென்றும் புரட்சிகரப் போக்கென்றும் நிலவி வந்த அந்தப் பழைய பிரிவினை, தேசியவெறியர்கள், சர்வதேசியவாதிகள் என்ற புதிய பிரிவினைக்கு மொத்தத்தில் ஒத்திசைவாக இருக்கிறது.

பின்கூறப்பட்ட வாசகம் பிழையற்றதென்பதை உணர வேண்டுமாயின், சமூக விஞ்ஞானமானது (பொதுவாய் விஞ்ஞானத்தைப் போன்றே) சாதாரணமாகப் பெருந்திரள் அளவிலான நிகழ்வுகளைப் பற்றிதாகுமே அன்றி தனிப்பட்ட உதாரணங்களைப் பற்றியதல்ல என்பதை நினைவில் கொண்டாகவேண்டும். பத்து ஐரோப்பிய நாடுகளை எடுத்துக் கொள்வோம்: ஜெர்மனி, பிரிட்டன், ருஷ்யா, இத்தாலி, ஹாலந்து,

ஸ்வீடன், பல்கேரியா, ஸ்விட்சர்லாந்து, பிரான்சு, பெல்ஜியம். முதலாவது எட்டு நாடுகளில் சோஷலிஸ்டுகளிடையிலான (சர்வதேசியம் குறித்ததாகிய) புதிய பிரிவினையானது (சந்தர்ப்பவாதம் குறித்ததாகிய) பழைய பிரிவினைக்கு ஒத்திசைவாய் இருக்கிறது. ஜெர்மனியில் சந்தர்ப்பவாதத்தின் கோட்டையாக விளங்கிய சோஷலிச மாதப் பத்திரிகை (*Sozialistische Monatshefte*)[30] பத்திரிகை தேசியவெறியின் கோட்டையாகியுள்ளது. சர்வதேசியத்தின் கருத்துகளுக்குக் கடைகோடியான இடதுசாரியினரின் ஆதரவு கிடைத்து வருகிறது. பிரிட்டனில் பிரிட்டிஷ் சோஷலிஸ்டுக் கட்சியில்[31] சுமார் ஏழில் மூன்று பகுதியினர் சர்வதேசியவாதிகளாவர் (கடைசியாக நடைபெற்ற வாக்கெடுப்பின்படி, ஒரு சர்வதேசியத் தீர்மானத்துக்கு ஆதரவாக 66 வாக்குகளும், எதிராக 84 வாக்குகளும் கிடைத்தன); அதேபோது சந்தர்ப்பவாதக் கூட்டில் (தொழிற் கட்சியும்[32] ஃபேபியன்களும்[33] சுயேச்சைத் தொழிற் கட்சியும்[34]) ஏழில் ஒரு பகுதியோருக்கும் குறைவானவர்களே சர்வதேசியவாதிகளாவர்*. ருஷ்யாவில் சந்தர்ப்பவாதத்தின் பிரதான தூணாகிய கட்சிக்கலைப்புவாத நாஷா ஸாரியா[37] தேசியவெறியின் பிரதான தூணாகியுள்ளது. பிளெஹானவும் அலெக்சீன்ஸ்கியும் அதிக அளவில் சப்தம் போடுகிறார்கள், ஆனால் ருஷ்யாவில் மக்கட் பெருந்திரளினரிடையே இவர்கள் முறையான பிரசாரம் நடத்தத் திறனற்றவர்கள் என்பதை ஐந்து ஆண்டுகளின் (1910-14) அனுபவத்தின் வாயிலாக நாம் நன்கறிவோம். ருஷ்யாவில் சர்வதேசியவாதிகளது மையக்கருவாய் விளங்குவது ''பிராவ்தாவியர்களா''லும்[38]; 1912 ஜனவரியில் கட்சியை மீட்டமைத்த முன்னேறிய தொழிலாளர்களது பிரதிநிதிகளாய்

---

* சுயேச்சைத் தொழிற் கட்சியை மட்டும் பிரிட்டிஷ் சோஷலிஸ்டுக் கட்சியுடன் ஒப்பிட்டுப்பார்ப்பதுதான் வழக்கமாக இருந்து வருகிறது. இது சரியல்ல. அத்தியாவசியக் கூறுகளைக் கருத வேண்டுமே அல்லாது நிறுவன ஒழுங்கமைப்பு வடிவங்களை அல்ல, நாளேடுகளை எடுத்துக் கொள்ளுங்கள்: இரண்டு நாளேடுகள் இருந்தன—ஒன்று, பிரிட்டிஷ் சோஷலிஸ்டுக் கட்சியின் குரலாகிய *Daily Herald*[35]; மற்றொன்று, சந்தர்ப்பவாதக் கூட்டின் குரலான *Daily Citizen*[36]. நாளேடுகள்தான் பிரசாரம், கிளர்ச்சி, நிறுவன ஒழுங்கமைப்பு ஆகியவற்றுக்கான நடைமுறை வேலைகளைச் செய்கிறவை.

டுமாவிலிருந்த ருஷ்ய சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சிக் குழுவாலும் ஆனதாகும்[39].

இத்தாலியில் முழுக்க முழுக்க சந்தர்ப்பவாதக் கட்சியாகிய பிஸ்ஸலட்டி கோஷ்டியாரின் கட்சியானது தேசிய வெறிக் கட்சியாகியுள்ளது. தொழிலாளர்களது கட்சி சர்வ தேசியத்தைப் பிரதிநிதித்துவம் செய்கிறது. பெருந்திரளினரான தொழிலாளர்கள் இக்கட்சியை ஆதரிக்கிறார்கள். சந்தர்ப்பவாதிகளும் நாடாளுமன்றத்தினரும் குட்டிமுதலாளித்துவப் பிரிவினரும் தேசியவெறியை ஆதரிக்கிறார்கள். சில மாதங்களுக்குள் இத்தாலியில் தடையின்றி சுதந்திரமாய்த் தேர்வு செய்ய முடிந்தது, அவ்வாறே செய்யவும் பட்டது—தற்செயலாய் அல்ல, பெருந்திரளினராகிய பாட்டாளிகளும் குட்டிமுதலாளித்துவக் கோஷ்டிகளும் ஏற்கும் வர்க்க நிலைகளுக்கு இடையிலான வேறுபாட்டுக்கு இணங்கத் தேர்வு செய்யப்பட்டது.

ஹாலந்தில் திருல்ஸ்திராவின் சந்தர்ப்பவாதக் கட்சி பொதுவில் தேசியவெறிக்குத் தன்னை இணக்குவித்துக் கொண்டுவிட்டது (ஹாலந்தில் குட்டிமுதலாளித்துவப் பிரிவினர், யாவரிலும் சுலபமாகத் தாம் ஜெர்மனியால் ''விழுங்கப்பட்டு'' விடலாம் என்பதால், பெரு முதலாளித்துவ வர்க்கத்தினரைப் போலவே ஜெர்மனியின்பால் குறிப்பிடத்தக்க வெறுப்பு கொண்டுள்ளதைக் கண்டு யாரும் ஏமாந்துவிடக் கூடாது). கோர்ட்டரும் பெனெக்குக்கும் தலைமை தாங்கும் மார்க்சியக் கட்சிதான் முரணற்ற, முழுமனதான, ஆர்வமிக்க, திடமான சர்வதேசியவாதிகளை உருவாக்கியுள்ளது. ஸ்வீடனில் சந்தர்ப்பவாதத் தலைவராகிய பிரான்டிங் ஜெர்மன் சோஷலிஸ்டுகள் துரோகிகளெனக் குற்றம் சாட்டப்படுவது குறித்து ஆத்திரப்படுகிறார்; ஆனால் இடதுசாரியினரது தலைவராகிய ஹோக்லுந்து இதுவேதான் தம்மைச் சேர்ந்தோரது கருத்தாருமென்று அறிவித்துள்ளார் (பார்க்கவும்: சோத்சியால்-டெமக்ராத், இதழ் 36). பல்கேரியாவில் சந்தர்ப்பவாதத்தை எதிர்ப்பவர்களாகிய ''தெஸ்னியாக்குகள்''[40] அவர்களது பத்திரிகையில் (நோவொ வ்ரேமே[41]) ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதிகள் ''கேடுகெட்ட செயல் புரிந்ததாகக்'' குற்றம் சாட்டினர். ஸ்விட்சர்லாந்தில் சந்தர்ப்பவாத கிரேய்லிக்கைச் சேர்ந்தவர்கள் ஜெர்மன் சமூக-ஜன

நாயகவாதிகளுக்கு நியாயம் கற்பிப்பதில் நாட்டமுடையவர்களாக இருக்கிறார்கள் (பார்க்கவும்: அவர்களது ஏடாகிய ஸூரிச் மக்கள் உரிமை[42]); ஆனால் பன்மடங்கு தீவிரவாதம் கொண்டவராகிய ஆர். கிரிம்மை ஆதரிப்போர் பெர்ன் ஏடான *Berner Tagwacht* ஐ[43] ஜெர்மன் இடதுசாரிகளது பத்திரிகையாக மாற்றிக் கொண்டுவிட்டனர். பத்து நாடுகளில் இரண்டே இரண்டு மட்டும்தான்—பிரான்சும் பெல்ஜியமும்—விதிவிலக்காய் இருக்கின்றன; ஆனால் இங்குங்கூட, கறாராய்ச் சொல்வதெனில், சர்வதேசியவாதிகள் இல்லாமற் போய்விடவில்லை, அளவுகடந்து இவர்கள் பலவீனமடைந்து சோர்வுற்றிருப்பதையே காண்கிறோம் (பகுதியளவுக்கு இதற்குரிய காரணங்கள் எளிதில் புரிந்துகொள்ளக் கூடியவையே). சர்வதேசியத் தன்மை கொண்ட கடிதங்களைத் தம் வாசகர்களிடமிருந்து பெற்றுள்ளதாக வையானே *L'Humanité*[44] ஏட்டில் ஒத்துக் கொள்கிறார், ஆனால் இந்தக் கடிதங்களை அவர் முழுமையாய் வெளியிடவில்லை, ஒன்றே ஒன்றையுங்கூட வெளியிடவில்லை!

மொத்தத்தில், இயக்கங்களையும் போக்குகளையும் எடுத்துக் கொண்டோமாயின், ஐரோப்பிய சோஷலிசத்தின் சந்தர்ப்பவாத சாரியினர்தான் சோஷலிசத்துக்குத் துரோகம் புரிந்து தேசியவெறியின் பக்கத்துக்கு ஓடியவர்கள் என்பதை ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும். அதிகார பூர்வமான கட்சிகளினுள் தேசியவெறிக்கு இருக்கும் இந்த வலுவுக்கும் வெளிப்பார்வைக்கு அது எல்லாம் வல்ல ஆற்றலுடையதாகத் தெரிவதற்கும் ஆதாரமாக இருப்பது எது? வரலாறு பற்றிய கேள்விகளை எழுப்புவதில் காவுத்ஸ்கி கைதேர்ந்தவர், குறிப்பாக பண்டைக் காலத்திய ரோமாபுரி பற்றியோ, நாம் வாழும் இக்காலத்திய பிரச்சினைகளுடன் நேரடித் தொடர்பு கொண்டிராத இதையொத்த பிற விவகாரங்கள் பற்றியோ கேள்விகள் எழுப்புவதில் கைதேர்ந்தவர். ஆனால் இப்போது அவரே சம்பந்தப்பட்டிருப்பதால், தமக்கு ஏதும் விளங்காதது போல பாசாங்கு நடிப்பு நடிக்கிறார். ஆனால் யாவும் தெட்டத் தெளிவாகவே விளங்குகின்றன. சந்தர்ப்பவாதிகளுக்கும் தேசியவெறியர்களுக்குமுள்ள அபார வலிமை முதலாளித்துவ வர்க்கத்தாருடனும் அரசாங்கங்களுடனும் இராணுவத் தலைமை அலுவலர்களுடனும் அவர்களுக்

குள்ள கூட்டணியிலிருந்து உதிப்பதாகும். ருஷ்யாவில் இது அடிக்கடி கவனியாது ஒதுக்கப்படுகிறது. சந்தர்ப்பவாதிகள் சோஷலிஸ்டுக் கட்சிகளைச் சேர்ந்த ஒரு பிரிவினராகக் கொள்ளப்படுகிறார்கள், இந்தக் கட்சிகளில் கடைகோடியான இரு சாரார் எப்போதும் இருந்துள்ளனர், இனியும் இருப்பார்கள் என்பதாகவும், ''கடைகோடி நிலைகளைத்'' தவிர்த்தாக வேண்டும் என்பதாகவும், இன்ன பலவாறாகவும் சொல்லப்படுகிறது—பாமரத்தனமான இதையொத்த பாட வாசகங்களுக்கு அளவில்லை.

உண்மை என்னவெனில், சந்தர்ப்பவாதிகள் தொழிலாளர் கட்சிகளில் பெயரளவில் உறுப்பினர்கள் என்பதால், எதார்த்தத்தில் அவர்கள் முதலாளித்துவ வர்க்கத்தின் அரசியல் படைப்பிரிவாகவும், இவ்வர்க்கத்தின் செல்வாக்கைப் பரவச் செய்வோராகவும், தொழிலாளர் இயக்கத்தில் முதலாளித்துவ வர்க்கத்தின் கையாட்களாகவும் இருப்பவர்கள் என்பது பொய்ப்பிக்கப்பட்டுவிடவில்லை. சந்தர்ப்பவாதியாகிய ஸுடெக்கும்—இவரது கீர்த்தி ஹெரஸ்திராத்தஸின்[45] கீர்த்தியைப் போன்றதே ஆகும்—இந்தச் சமூக, வர்க்க உண்மையை சந்தேகத்துக்கு இடமின்றி திடமான முறையில் தெளிவுபடுத்திக் காட்டிய போது நல்லவர்கள் பலரும் திகைத்துப் போய்விட்டனர். பிரெஞ்சு சோஷலிஸ்டுகளும் பிளெஹானவும் ஸுடெக்குமை இகழ்ச்சியுடன் சுட்டிக் காட்டி ஏளனம் புரிந்தனர்—ஆயினும் வண்டர்வேல்டேயோ, சம்பாவோ, பிளெஹானவோ கண்ணாடியில் தம்மைப் பார்த்திருப்பார்களாயின் தேசிய இயல்புகளில் கொஞ்சம் மாறுபடும் ஒரு ஸுடெக்குமையே அன்றி வேறு யாரையும் கண்டிருக்க மாட்டார்கள். ஜெர்மன் செயற்குழுவின் (''ஃபார்ஷ்டாண்டு'') உறுப்பினர்கள்—இப்போது இவர்கள் காவுத்ஸ்கியைப் போற்றிப் புகழுகிறார்கள், காவுத்ஸ்கியும் இவர்களைப் போற்றிப் புகழுகின்றார் — அவசரப்பட்டுக் கொண்டு (ஸுடெக்குமைப் பெயர் சொல்லிக் குறிப்பிடாமலே) ஜாக்கிரதையாகவும் பணிவாகவும் மரியாதையாகவும் அறிவித்தனர், ஸுடெக்குமினது கொள்கை வழி தமக்கு ''உடன்பாடானதல்ல'' என்று.

இது நகைக்கத்தக்கதாகும், ஏனெனில் தீர்மானகரமான ஒரு தருணத்தில் ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சியின்

கொள்கைகளை நிர்ணயிப்பதில் நூறு ஹாயாஸேகளையும் காவுத்ஸ்கிகளையும் விட ஸுடெக்கும் ஒருவரே மெய்யான நடப்பில் வலிமை வாய்ந்தவராக இருந்தார் (எப்படி நாஷா ஸாரியா அதனிடமிருந்து முறித்துக் கொண்டு செல்ல அஞ்சிய புரூசெல்ஸ் கூட்டைச்[46] சேர்ந்த எல்லாப் போக்கு களையும் விட வலிமை வாய்ந்ததாக இருந்ததே அதே போல).

இதற்குக் காரணம் என்ன? காரணம் என்னவென்றால், ஸுடெக்குமுக்குப் பின்னால் ஒரு பேரரசின் முதலாளித்துவ வர்க்கத்தினரும் அரசாங்கமும் இராணுவத் தலைமை அலு வலர்களும் இருந்தனர். இவர்கள் ஸுடெக்குமினது கொள் கைக்கு ஆயிரம் வழிகளில் ஆதரவு அளிக்கின்றனர், ஆனால் அவரது எதிராளிகளது கொள்கை சிறைக்கூடமும் சுட்டுக் கொல்லும் துப்பாக்கிக் குழுவும் அடங்கலாக எல்லா வழி களிலும் தகர்த்துக் குலைக்கப்படுகிறது. ஸுடெக்குமினது குரல் முதலாளித்துவ ஏடுகளது பத்துலட்சக் கணக்கான பிரதிகளின் மூலம் பொது மக்களை வந்தடைகிறது (வண்டர் வேல்டே, சம்பா, பிளெஹானவ் இவர்களது குரல்களும் இதே போல்தான் வந்தடைகிறது), ஆனால் இராணுவத் தணிக்கை முறை இருப்பதால் ஸுடெக்குமினது எதிராளி களது குரல்கள் சட்டபூர்வமான பத்திரிகைகள் மூலம் ஒலித் திட முடியாது!

சந்தர்ப்பவாதம் தற்செயலாய் நிகழ்ந்துவிடும் ஒன்றல்ல, தனியாட்கள் புரிந்துவிடும் பாவச் செயலோ பிழையோ துரோகமோ அல்ல, வரலாற்றின் ஒரு காலகட்டம் முழுமை யிலிருந்தும் உதித்தெழும் சமூக விளைவாகும் என்பது பொதுவாக ஒத்துக் கொள்ளப்படுகிறது. இந்த உண்மையின் மெய்ப்பொருளில் போதிய அளவுக்கு எப்போதும் சிந்தனை செலுத்தப்படுவதாகக் கூறுவதற்கில்லை. சந்தர்ப்பவாத மானது சட்டபூர்வமான நிலைமையால் ஊட்டமளித்து வளர்க் கப்பட்டுள்ளது. 1889க்கும் 1914க்கும் இடைப்பட்ட காலத் தில் தொழிலாளர் கட்சிகள் முதலாளித்துவச் சட்ட முறை மையைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டியிருந்தது. பிறகு நெருக்கடி நிலைமை வந்ததும் இக்கட்சிகள் சட்டவிரோத வேலை முறைகளை ஏற்றிருக்க வேண்டும் (அபாரச் செயல் மும்முரமும் வைராக்கியமும் வெளிப்படுத்தி, மற்றும் இத னுடன்கூட போராட்டத் தந்திர முறைகளை பலவற்றையும்

கையாண்டே அல்லாது வேறு எவ்வழியிலும் இதைச் செய்ய முடியாது). சட்டவிரோத முறைகள் ஏற்கப்படுவதைத் தடுப்பதற்கு ஒரேயொரு ஸுடெக்குமே போதுமானவராக இருந்தார். ஏனெனில் வரலாற்று-தத்துவவியல் அர்த்தத்தில் பேசுகையில் ''பழைய உலகு'' அனைத்தையும் அவர் தமக்கு ஆதரவாகக் கொண்டிருந்தார்; நடைமுறை அரசியல் அர்த்தத்தில் பேசுகையில் ஸுடெக்குமாகிய அவர் முதலாளித்துவ வர்க்கத்துக்கு அதன் வர்க்கப் பகைவனது போர்த் திட்டங்கள் யாவற்றையும் காட்டிக் கொடுப்பவராகவே எப்போதும் இருந்துள்ளார், இனியும் இருக்கப் போகிறுர்.

ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சி அனைத்துமே (பிரெஞ்சுக் கட்சிக்கும் பிற கட்சிகளுக்கும் இது பொருந்தும்) ஸுடெக்குமுக்குப் பிடித்தமானவற்றை மட்டுமே அல்லது அவரால் சகித்துக் கொண்டிருக்கக் கூடியவற்றை மட்டுமே செய்து வருகிறது என்பதுதான் உண்மை. வேறு எதையும் சட்டபூர்வமான முறையில் செய்ய முடியாது. ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சியில் நடைபெறும் நேர்மையான, மெய்யாகவே சோஷலிஸ்டுத் தன்மையதான எந்தக் காரியமும் கட்சியின் மைய உறுப்புகளுக்கு எதிராகவும், கட்சியின் மத்திய குழுவையும் மத்தியப் பத்திரிகையையும் சுற்றிவளைத்துச் சென்றும், நிறுவன ஒழுங்குக் கட்டுப்பாட்டை மீறிச் சென்றும், ஒரு புதிய கட்சியின் அறிவிக்கப்படாத புதிய மைய அமைப்புகளின் சார்பில், உட்குழுவுக்குரிய முறையில்தான் நடந்தேறுகிறது. உதாரணமாக ஜெர்மன் ''இடதுசாரியினரது'' அறிக்கை[47] இவ்வாறுதான் *Berner Tagwacht* ஏட்டில் இவ்வாண்டு மே 31ல் வெளியிடப்படலாயிற்று. உண்மை என்னவெனில், ஒரு புதிய கட்சி வளர்ந்து வலிமை பெற்று வருகிறது, ஒழுங்கமைக்கப்பட்டு வருகிறது; லேகினையும் ஸுடெக்குமையும் காவுத்ஸ்கியையும் ஹாயாஸேயையும் ஷெய்டமனையும் இவர்களது கூட்டத்தோரையும் சேர்ந்த சீரழிந்து போன பழைய தேசிய-மிதவாதக் கட்சியைப் போலல்லாது, இது மெய்யான தொழிலாளர் கட்சியாக, மெய்யாகவே புரட்சிகரமான சமூக-ஜனநாயகக் கட்சியாக இருக்கிறது.*

* வரலாற்று முக்கியத்துவம் பெற்ற ஆகஸ்டு 4ஆம் நாள் வாக்கெடுப்புக்கு [யுத்தக் கடன்களுக்கான வாக்கெடுப்பு]

ஆகவே சந்தர்ப்பவாதி Monitor பிற்போக்குவாதப் பிரஷ்ய ஆண்டு புத்தகம் என்பதில்[48] ஆலோசனையின்றி அப்பட்டமாய்க் கூறியது ஆழ்ந்த வரலாற்று உண்மையாகும் —இன்றைய சமூக-ஜனநாயகமானது வலதுசாரி நிலைக்குச் செல்லுமாயின் அதனால் சந்தர்ப்பவாதிகளுக்கு (அதாவது முதலாளித்துவ வர்க்கத்துக்கு) கெடுதலே ஏற்படும்— ஏனென்றால் அப்போது தொழிலாளர்கள் அதை விட்டு ஓடி விடுவார்கள் என்று கூறினார். சந்தர்ப்பவாதிகளுக்கு (மற்றும் முதலாளித்துவ வர்க்கத்துக்கு) இக்கட்சி இன்றுள்ள அதே நிலையில் இருப்பது, வலதுசாரியும் இடதுசாரியும் சேர்ந்த கட்சியாகவும் அதிகாரபூர்வமாகக் காவுத்ஸ்கியால் பிரதிநிதித்தும் செய்யப்படும் கட்சியாகவும் இருப்பது தேவைப்படுகின்றது. காவுத்ஸ்கி இதமான, ''முற்றிலும் மார்க்சியத்'' தொடர்களைக் கொண்டு உலகிலுள்ளவை எவற்றுக்கு

---

முன்பு நடைபெற்றது மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். அதிகாரபூர்வமான கட்சி அதிகாரவர்க்க வஞ்சகம் புரிந்து இந்த நிகழ்ச்சியினை மூடுதிரையிட்டு மறைத்து, பெரும் பான்மையினர் தீர்மானித்ததாகவும் எல்லாரும் ஒருமனதாக ஆதரித்து ஓட்டு போட்டதாகவும் கூறியது. ஆனால் *Die Internationale* ஏட்டில் ஷ்துரேபெல் உண்மையை எடுத்துரைத்து இந்த வஞ்சகத்தை அம்பலப்படுத்தினார். ரைஹ்ஸ்டாகின் சமூக-ஜனநாயக உறுப்பினர்கள் இரு கோஷ்டிகளாகப் பிளவுண்டு, ஒவ்வொரு கோஷ்டியும் ஒரு இறுதி எச்சரிக்கையை, அதாவது உட்குழுவாத, பிளவுவாதத் தீர்மானத்தை ஏற்றுக் கொண்டது. ஒரு கோஷ்டி, சுமார் முப்பதுபேர் அடங்கிய சந்தர்ப்பவாதக் கோஷ்டி, எந்த நிலைமையிலும் ஆதரவாகவே ஓட்டு போடுவதென்று தீர்மானித்தது. மற்றொரு கோஷ்டியான சுமார் பதினைந்து பேர் அடங்கிய இடதுசாரியினரது கோஷ்டி எதிர்த்து ஓட்டு போடுவதென—அவ்வளவாக வைராக்கியமில்லாத முறையில்—தீர்மானித்தனர். உறுதியான நிலையை ஒருபோதும் ஏற்காதவர்களாகிய ''மையவாதிகள்''—அல்லது ''சதுப்புப் பிரிவோர்''—சந்தர்ப்பவாதிகளுடன் சேர்ந்து ஓட்டு போட்டதும் இடதுசாரியினர் படுதோல்வியுற்று—கீழ்ப்படிந்துவிட்டனர்! ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதிகளது ''ஒற்றுமை'' குறித்துப் பேசப்படும் பேச்சு அப்பட்டமான ஏமாற்றே ஆகும், உண்மையில் சந்தர்ப்பவாதிகளது இறுதி எச்சரிக்கைகளுக்கு இடதுசாரியினர் தவிர்க்க முடியாதபடி கீழ்ப்படிந்துவிட்டதை மூடிமறைப்பதற்கான பேச்சே ஆகும்.

இடையிலும் இணக்கம் உண்டாக்கக் கூடியவர். சொல்லில் மக்களுக்கு, பெருந்திரளினருக்கு, தொழிலாளர்களுக்கு சோஷலிசமும் புரட்சி மனோபாவமும்; செயலில் ஸூடெக்கு மியம், கடுமையான எந்த நெருக்கடியின் போதும் முதலாளித்துவ வர்க்கத்துடன் ஒட்டிக் கொண்டுவிடுதல். எந்த நெருக்கடியின் போதும் என்று கூறுகிறோம், ஏனெனில் யுத்த காலத்தில் மட்டுமல்ல, கடுமையான எந்த அரசியல் வேலை நிறுத்தத்திலும் ''பிரபுத்துவ'' ஜெர்மனியும் சரி, ''சுதந்திரமான நாடாளுமன்ற'' பிரிட்டன் அல்லது பிரான்சு சரி உடனே ஏதேனும் ஒரு பெயரில் இராணுவச் சட்டத்தைப் பிரகடனம் செய்து புகுத்திவிடும். நல்லபடி சிந்திப்பதற்கும் சீர்தூக்கிப் பார்த்து தீர்ப்பளிப்பதற்கும் திறனுள்ள எவருக்கும் இது குறித்து எந்த சந்தேகமும் இருக்க முடியாது.

எனவே, சமூக-தேசியவெறியை எதிர்த்துப் போராடுவது எப்படி என்று மேலே நாம் எழுப்பிய கேள்விக்குரிய பதில் தர்க்கவாத முறையில் இதிலிருந்து பெறப்பட்டுவிடுகிறது. சமூக-தேசியவெறி என்பது சந்தர்ப்பவாதமே ஆகும்; சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சிகளுக்கு உள்ளே இத்தகைய ஒரு போக்கு இருப்பதற்கு இனி இடமளிக்க முடியாதபடி, ஒப்பளவில் ''அமைதியான'' முதலாளித்துவத்தின் நீண்ட நெடிய காலகட்டத்தில் அந்த அளவுக்கு முதிர்ச்சியுற்று, அந்த அளவுக்கு வலுவும் திமிரும் மிக்கதாகி, அதன் அரசியல் சித்தாந்தத்தில் அவ்வளவு திட்டவட்டமானதாகி, முதலாளித்துவ வர்க்கத்தோடும் அரசாங்கங்களோடும் அவ்வளவு நெருங்கிய பிணைப்பு கொண்டுவிடும் சந்தர்ப்பவாதமே ஆகும். மெல்லடிப் பாதணிகள் சிற்றூரின் நன்கு தளமிடப்பட்ட வீதிகளிலே நடப்பதற்குப் போதுமானதாக இருக்கலாம், ஆனால் மலை ஏறுவதற்குப் பெருந்தலை ஆணிகள் அடித்த கனத்த பூட்சுகள் அவசியமாகும். ஐரோப்பாவில் சோஷலிசமானது குறுகிய தேசிய வரம்புகளுக்கு உட்பட்ட ஒப்பளவில் அமைதியான கட்டத்தைக் கடந்து வெளியே வந்துவிட்டது. 1914-15ஆம் ஆண்டு யுத்தம் ஆரம்பமானதும் அது புரட்சிகரச் செயலுக்குரிய கட்டத்தினுள் நுழைந்துவிட்டது. சந்தர்ப்பவாதத்திலிருந்து அறவே முறித்துக் கொள்வதற்கான, தொழிலாளர் கட்சிகளிலிருந்து அதை

விலக்கி வெளியேற்றுவதற்கான காலம் வந்துவிட்டது என்பது குறித்து ஐயப்பாட்டுக்கு இடமில்லை.

சர்வதேச வளர்ச்சியின் புதிய சகாப்தம் சோஷலிசத்தின் முன்னால் எழச் செய்யும் பணிகளைப்பற்றிய இந்த வரையறுப்பு, தொழிலாளர்களது புரட்சிகர சமூக-ஜனநாயகக் கட்சிகள் குட்டிமுதலாளித்துவச் சந்தர்ப்பவாதக் கட்சிகளிடமிருந்து பிரிந்திடும் நிகழ்ச்சிப்போக்கு பல்வேறு நாடுகளிலும் எவ்வளவு துரிதமாகவும், திட்டவட்டமாய் எந்த வடிவங்களிலும் நடந்தேறும் என்பதை உடனடியாகப் புலப்படுத்தாதது மெய்தான். ஆனால் இம்மாதிரியான ஒரு பிரிவினை தவிர்க்க வொண்ணாதது என்பதையும், தொழிலாளர் கட்சிகளது கொள்கை அனைத்தும் இந்த நோக்குநிலையிலிருந்தே வழி நடத்தப்பட வேண்டும் என்பதையும் உணர்வதன் அவசியத்தை இது தெளிவுபடுத்துகிறது. சந்தர்ப்பவாதத்தின் பால் அனுசரிக்கப்படும் போக்கு முன்பு இருந்தது போல் அப்படியே இருக்க முடியாது, 1914-15ஆம் ஆண்டு யுத்தம் வரலாற்றிலே அவ்வளவு பெரிய ஒரு திருப்பமாக அமைகிறது. நடைபெற்றுள்ளதைத் துடைத்து அகற்றிவிட முடியாது. நெருக்கடியான ஒரு தருணத்தில் தொழிலாளர் கட்சிகளினுள் சந்தர்ப்பவாதிகள் துரோகம் புரிந்து முதலாளித்துவ வர்க்கத்தின் தரப்புக்கு ஓடிய கூறுகளின் கருவாக அமைந்திருந்தார்கள் என்ற உண்மையினை தொழிலாளர்களது மனத்திலிருந்தோ, முதலாளித்துவ வர்க்கத்தின் அனுபவத்திலிருந்தோ, பொதுவாக நமது சகாப்தத்தின் அரசியல் படிப்பினைகளிலிருந்தோ துடைத்து அகற்றிவிட முடியாது. சந்தர்ப்பவாதமானது யுத்தத்துக்கு முன்பு—ஐரோப்பிய அளவில் பேசுவோமாயின்—அதன் இளம் பருவத்தில் இருந்தது எனலாம். யுத்தம் வெடித்தபின் அது வயதுவந்த முழு ஆளாக வளர்ந்து விட்டது, அதன் ''அறியாப் பருவத்தையும்'' இளைமையையும் திரும்பிவரச் செய்வது முடியாத காரியம். சமுதாயத்தில் ஒரு முழு அடுக்கு, நாடாளுமன்றத்தினரும் பத்திரிகையாளர்களும் தொழிலாளர் துறை அதிகாரிகளும் தனியுரிமை பெற்ற அலுவலக சிப்பந்திகளும் பாட்டாளி வர்க்கத்தில் குறிப்பிட்ட சில பகுதியினருமாகிய ஒரு முழு அடுக்கு உதித்தெழுந்து, அதன் சொந்த தேசிய முதலாளித்துவ வர்க்கத்துடன் ஒன்றுகலந்துவிட்டது. இந்த அடுக்கினை மதித்துப்

பாராட்டுவதற்கும், இதைத் ''தகவமைத்துக்'' கொள்வதற்கு மான முழுத் திறனும் தனக்கு உண்டென்பதை முதலாளித் துவ வர்க்கம் நிரூபித்துக் கட்டியுள்ளது. வரலாற்றின் நடையைத் திருப்பிவிடவோ, தடுத்து நிறுத்தவோ முடியாது —அச்சமின்றி நாம் முன்னேக்கிச் செல்ல முடியும், செல்லவும் வேண்டும். சந்தர்ப்பவாதத்தின் பிடியிலுள்ள தயாரிப்பு நிலையிலான சட்டபூர்வத் தொழிலாளி வர்க்க நிறுவனங் களிலிருந்து, சட்டபூர்வ நிலைக்குள் தம்மைக் கட்டுப்படுத்தி இருத்திக் கொண்டுவிடக் கூடாதென்பதை அறிந்தவையும் சந்தர்ப்பவாதத்தின் துரோகத்திலிருந்து தம்மைப் பாது காத்துக் கொள்ளும் வல்லமை வாய்ந்தவையுமாகிய புரட்சி கர நிறுவனங்களுக்கு, ''ஆட்சியதிகாரத்துக்கான போராட் டத்தை'', முதலாளித்துவ வர்க்கத்தை வீழ்த்துவதற்கான போராட்டத்தை ஆரம்பித்து வரும் ஒரு பாட்டாளி வர்க்கத் துக்கு உரித்தான நிறுவனங்களுக்கு நாம் முன்னேக்கிச் செல்ல முடியும், செல்லவும் வேண்டும்.

கெட்டு, பிளெஹானவ், காவுத்ஸ்கி முதலானேரைப் போன்ற இரண்டாவது அகிலத்தின் மகோன்னத மேலவர் களை என்ன செய்வதென்ற பிரச்சினையைக் கொண்டு தமது சிந்தனையை மட்டுமின்றி, தொழிலாளர்களது சிந்தனையை யும் குழப்புகிறவர்களது கருத்தோட்டங்கள் எவ்வளவு தவ ருனவை என்பதை இடையில் இங்கு குறிப்பிடலாம். உண்மை யில் இம்மாதிரியான பிரச்சினை எதுவும் எழவில்லை. இந்த ஆட்கள் புதிய கடமைகளைப் புரிந்து கொள்ளத் தவறினல், இவர்கள் ஒதுங்கிச் சென்றாக வேண்டும், அல்லது தற்போது இவர்கள் இருப்பது போல் சந்தர்ப்பவாதிகளது கைதிகளாக வே தொடர்ந்து இருந்துவர வேண்டும். இந்த ஆட்கள் ''கைதி நிலையிலிருந்து'' தம்மை விடுவித்துக் கொள்வார்களா யின், புரட்சியாளர்களது முகாமுக்கு இவர்கள் திரும்பி வந்து சேர்வதற்குத் தடங்கலான அரசியல் முட்டுக்கட்டை கள் இருக்கப் போவதில்லை. எப்படியும் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் போக்குகளுக்கு இடையிலான போராட்டத்தை யும், புதிய காலகட்டத்தையும் பற்றிய பிரச்சினைக்குப் பதி லாய் தனியாட்களது பாத்திரத்தைப் பற்றிய பிரச்சினையை எழுப்பிக் கொண்டிருப்பது அபத்தமே அன்றி வேறல்ல.

இரண்டாவது அகிலத்தின் காலத்தில் சட்டபூர்வமான தொழிலாளி வர்க்க வெகுஜன நிறுவனங்கள் சோஷலிஸ்டுக் கட்சிகளுக்குரிய மிக முக்கிய இயல்பாய் இருந்தன எனலாம். ஜெர்மன் கட்சியில் அவை மிகவும் வலுமிக்கனவாக இருந் தன. இக்கட்சியில்தான் 1914-15ஆம் ஆண்டு யுத்தம் மிகக் கடுமையான மாற்றத்தை உண்டாக்கி, பிரச்சினையை மிகவும் அவசர அவசியமான ஒன்ருக்கியது. புரட்சிகரச் செயற்பாடு கள் துவக்கப்பட்டிருந்தால், சட்டபூர்வமான இந்த நிறு வனங்கள் போலீசால் கலைக்கப்படுவதில்தான் போய் முடிந் திருக்கும் என்பது தெளிவு; பழைய கட்சி—லேகினிலிருந்து காவுத்ஸ்கி அடங்கலாய்—தற்போதுள்ள சட்டபூர்வமான நிறுவனங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரக் குறிக்கோள்களைக் காவு கொடுத்தது. இதனை மறுக்க எவ்வளவுதான் முயற்சி செய்யப் பட்ட போதிலும், இதுவேதான் உண்மை. புரட்சி செய் வதற்குப் பாட்டாளி வர்க்கத்துக்குள்ள உரிமையானது அற்ப சுகத்துக்காக — தற்போதுள்ள போலிஸ் சட்டத்தால் அனுமதிக்கப்படும் நிறுவனங்களுக்காக—விற்கப்பட்டது.

ஜெர்மன் சமூக-ஜனநாயகத் தொழிற் சங்கங்களின் தலைவர் கார்ல் லேகின் எழுதிய **உட்கட்சி வாழ்வில் தொழிற் சங்க அலுவலர்கள் அதிக செயல் முனைப்பான பங்கு ஏன் எடுத்துக் கொள்ள வேண்டும்** (பெர்லின், 1915) என்ற பிரசு ரத்தை எடுத்துக் கொள்ளுங்கள். 1915 ஜனவரி 27ல் நடை பெற்ற தொழிற்சங்க அலுவலர்களது கூட்டத்தில் இவ்வாசி ரியர் நிகழ்த்திய உரையாகும் இது. மிகவும் சுவையான ஓர் ஆவணத்தை லேகின் இந்த உரையின் போது வசித்துக் காட்டினர், அவரது பிரசுரத்திலும் இதை வெளியிட்டுள் ளார்; வேறு எவ்விதத்திலும் இது வெளிவருவதற்கு இராணு வத் தணிக்கை முறை அனுமதித்திருக்காது. (பெர்லின் சுற்று வட்டாரப் பகுதிகளில் ஒன்ருகிய **நிதர்பார்னிம் வட்டாரத்தில் பேச்சாளர்களுக்கான குறிப்புகள்** என்பதான இந்த ஆவணம் ஜெர்மன் இடதுசாரி சமூக-ஜனநாயகவாதிகளது கருத் தோட்டங்களையும் கட்சியைப் பற்றிய அவர்களது கண்டனத் தையும் எடுத்துரைக்கின்றது. புரட்சிகர சமூக-ஜனநாயக

வாதிகள் ஓர் அம்சத்தை எதிர்பார்க்கவில்லை, எதிர்பார்க்க முடியவும் இல்லை என்று இந்த ஆவணம் கூறுகிறது, அது என்னவெனில்:

''ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சி, தொழிற் சங்கங்கள் இவற்றின் ஒழுங்கமைந்த செயல் பலம் அனைத்தும் யுத்த அரசாங்கத்தின் தரப்புக்குச் சென்றுவிடும் என்பதும், மக்கட் பெருந்திரளினரது புரட்சிகர ஆற்றலை நசுக்குவதற்காக இந்தச் செயல் பலம் அனைத்தும் பயன்படுத்தப்படும் என்பதும்'' (லேகினது பிரசுரத்தில் பக்கம் 34).

முற்றும் உண்மையே இது. இதே ஆவணத்தில் அடங்கியுள்ள பின்வரும் வாசகமும் உண்மையே:

''ரைஹ்ஸ்டாகில் ஆகஸ்டு 4ல் சமூக-ஜனநாயகக் குழு ஒட்டு அளித்ததானது, வேறு விதமான ஒரு போக்கு, மக்கட் பெருந்திரளினரிடையே அது ஆழமாய் வேர் விட்டிருந்தாலுங்கூட, புடமிடப்பட்ட ஒரு கட்சியின் தலைமையில் தன்னை நிலைநிறுத்திக் கொண்டிருக்க முடியாது என்பதை நிரூபித்துக் காட்டிற்று. தலைமையான கட்சி உறுப்புகளது சித்தத்தை எதிர்த்து நின்றுதான், கட்சியும் தொழிற் சங்கங்களும் காட்டிய எதிர்ப்பினைச் சமாளித்துதான் அது தன்னை நிலைநிறுத்திக் கொண்டிருக்க முடியும்'' (அதே பிரசுரம்).

முற்றும் உண்மையே இது.

''ஆகஸ்டு 4ல் ரைஹ்ஸ்டாகில் சமூக-ஜனநாயகக் குழு தனது கடமையைச் செய்திருந்தால், நிறுவன ஒழுங்கமைப்பின் புற வடிவம் அழிக்கப்பட்டிருக்கலாம், ஆனால் அதன் ஆன்மா, சோஷலிஸ்டுகளுக்கு எதிரான விசேஷச் சட்டத்தின்[49] போது கட்சிக்கு உயிரளித்து எல்லா இடர்களையும் அது மீறிச் செல்வதற்குத் துணை புரிந்த அந்த ஆன்மா அழியாது நிலைத்திருந்திருக்கும்'' (அதே பிரசுரம்).

லேகினது உரையைக் கேட்பதற்காகக் கூடியிருந்த ''தலைவர்கள்'', தம்மைத் தலைமையான தொழிற்சங்க அலுவலர்கள் என்பதாய்க் கூறிக் கொண்ட அவர்கள், இதைக் கேட்டதும் சிரித்தார்கள் என லேகினது பிரசுரத்தில் கூறப்படுகிறது. நெருக்கடியான ஒரு தருணத்தில், சட்டவிரோதமான

புரட்சிகர நிறுவனங்களை அமைத்துக் கொள்வது (சோஷலிஸ்டுகளுக்கு எதிரான விசேஷச் சட்டத்தின்போது செய்யப்பட்டது போல) சாத்தியமும் அவசியமும் ஆகுமென்ற கருத்து அவர்களுக்கு நகைக்கத்தக்கதாகத் தோன்றியது. முதலாளித்துவ வர்க்கத்தின் மிகமிக விசுவாசமான காவல்நாயாகிய லேகின் மார்ப்பைத் துருத்திக் கொண்டு அடித்துக் கூறினார்:

''தெளிவாகவே இது ஓர் அராஜகக் கருத்து: மக்கட் பெருந்திரளினரால் பிரச்சினைக்குத் தீர்வு உண்டாக்கப்படும் பொருட்டு நிறுவனத்தை குலையச் செய்வதென்ற இக்கருத்து. இது ஓர் அராஜகக் கருத்தே ஆகும், என் மனத்துள் ஐயம் ஏதும் இல்லை!''

''சபாஷ்! நன்ருய்ச் சொன்னீர்கள்!'' என்று ஏகமாகப் பாராட்டுக் குரல்கள் எழுந்தன (அதே பிரசுரம், பக்கம் 37)—தொழிலாளி வர்க்கத்தின் சமூக-ஜனநாயக நிறுவனங்களது தலைவர்களாகத் தம்மைக் கூறிக் கொண்ட அந்த முதலாளித்துவ வர்க்கக் கையாட்களிடமிருந்து.

கண்ணைத் திறந்து விடும்படியான ஒரு காட்சி. புரட்சிப் போராட்டத்துக்கு வழி காட்டுவதற்காக வேருெரு வகை நிறுவனங்கள், சட்டவிரோத நிறுவனங்கள், அவசியம் என்பதை நினைத்துப் பார்ப்பதற்குக்கூட முடியாத அளவுக்கு முதலாளித்துவச் சட்டமுறையினல் ஆட்கள் சீரழிந்து வீணுகி விடுகிருர்கள். போலீஸ் அனுமதியுடன் இருந்து வரும் சட்டபூர்வமான சங்கங்களே இறுதி எல்லை — கடக்க முடியாத எல்லை—என்பதாகக் கற்பனை செய்துகொள்ளும் அளவுக்கு—இம்மாதிரியான சங்கங்களை நெருக்கடிக் காலத்தில் தலைமை தாங்கும் உறுப்புகளாக இருக்கும்படிப் பாதுகாப்பது நினைக்கக்கூட சாத்தியமென்பது போல அந்த அளவுக்கு—இவர்கள் கெட்டழிந்துவிடுகிருர்கள்! சந்தர்ப்பவாதத்தின் உயிருள்ள இயக்கவியலை இங்கே காண முடிகிறது: சட்டபூர்வமான சங்கங்கள் பல்கிப் பெருகும் இந்த நிகழ்ச்சியே, அசட்டுத்தனமான, ஆனல் கடமையுணர்வுள்ள அற்பர்கள் கணக்கெழுதி வைக்கும் பணிக்குள் தம்மைக் கட்டுப்படுத்திக் கொண்டுவிடும் இந்தப் பழக்கமே, நெருக்கடி காலத்தில் இந்தக் கடமையுணர்வுள்ள அற்பர்கள் துரோகிகளாகவும்

காட்டிக் கொடுக்கும் வஞ்சகர்களாகவும் மக்கட் பெருந் திரளினரது புரட்சிகர ஆற்றலை வெளிப்படாதபடி அடக்கி யொடுக்குவோராகவும் மாறும்படியான சூழ்நிலையை உண் டாக்கிவிடுகின்றன. இது அகஸ்மாத்தான நிகழ்வல்ல. புரட்சி கர நிறுவனத்தைக் கட்டியமைக்கும் பணியைத் துவக்கி யாக வேண்டும்—புதிய வரலாற்று நிலைமையாலும் பாட் டாளி வர்க்கப் புரட்சிகரச் செயலுக்கான சகாப்தத்தாலும் இது கோரப்படுகிறது—ஆனால் புரட்சிகர ஆற்றலை அடக்கி யொடுக்கும் பழைய தலைவர்களது தலைக்கு மேல்தான் இந்தப் பணியைத் துவக்க முடியும்; பழைய கட்சியின் தலைக்கு மேல் தான், அதை ஒழித்துக் கட்டுவதன் மூலம்தான் இப்பணி யைத் துவக்க முடியும்.

எதிர்ப்புரட்சியாளர்களாகிய அற்பவாதிகள் ''அராஜக வாதம்!'' என்றுதான் கூச்சலிடுவார்கள், சந்தர்ப்பவாதி யான எடுவார்டு டவீத் முன்பு கார்ல் லீப்க்னெஹ்டைத் தூற்றிய போது ''அராஜகவாதம்'' என்று கத்தினரே அதே போலத்தான் கூச்சலிடுவார்கள். ஜெர்மனியில் சந்தர்ப்ப வாதிகளால் அராஜகவாதிகளென நிந்தனை செய்யப்பட்ட தலைவர்கள் மட்டும்தான் நேர்மையான சோஷலிஸ்டுகளாக இருந்து வருதாகத் தெரிகிறது....

இன்றைய சேனையை எடுத்துக் கொள்ளுங்கள். நிறுவன ஒழுங்கமைப்புக்கு இது ஒரு நல்ல எடுத்துக்காட்டு. இந்த நிறுவன ஒழுங்கமைப்பு நெகிழ்வுடையதாக இருப்பதாலும், அதேபோது லட்சோப லட்சக் கணக்கான மக்களுக்கு ஒரு மித்த ஒரே சித்தத்தை அளிக்க வல்லதாகவும் இருப்பதால் தான் இது சிறப்புக்குரியதாக இருக்கிறது. இந்த லட்சக் கணக் கானோர் இன்று நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் அவர்களது இல்லங்களிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். நாளைக்குப் படை திரட்டு உத்தரவு வெளியிடப்படுகிறது, உடனே இவர்கள் இராணுவப் பணிக்கு ஆஜராகிறார்கள். இன்று இவர்கள் அகழ்வரிகளில் படுத்துக் கிடக்கிறார்கள், இது மாதக் கணக்கில் நீடிக்கக் கூடும். நாளைக்கு வேறொரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, தாக்குதல் நடத்துவதற்காக இவர்கள் அழைத்துச் செல்லப்படுகிறார்கள். இன்று துப்பாக்கிக் குண்டு களிலிருந்தும் தெறிகுண்டுச் சிம்புகளிலிருந்தும் பதுங்கித் தப்பியோடுவதில் இவர்கள் அதிசயங்கள் புரிகிறார்கள்.

நாளைக்கு நேரடிக் கைகலப்புப் போரில் விந்தைகள் புரிகிறார் கள். இன்று இவர்களது முன்னணிப் பிரிவுகள் நிலவெடிகள் புதைத்துச் செல்கின்றன, நாளைக்குத் தலைக்கு மேல் பறக்கும் விமானிகளால் வழிகாட்டப் பெற்று மைல் கணக்கில் முன் னேறிச் செல்கிறார்கள். ஒரே குறிக்கோளை அடையும் பொருட்டு ஒரே சித்தத்தால் இயக்குவிக்கப்பட்டு லட்சோப லட்சக் கணக்கானோர் தமது உறவுகளின் வடிவங்களையும் தமது நடத்தையையும் தமது செயற்பாடுகளுக்கான இடத் தையும் செயற்பாட்டு முறைகளையும் மாற்றிச்செல்கிறார்கள், மாறும் நிலைமைகளுக்கும் போராட்டத்தின் தேவைகளுக் கும் ஏற்ப, தமது கருவிகளையும் போர் ஆயுதங்களையும் மாற்றிக் கொள்கிறார்கள்—இவை யாவும்தான் மெய்யான நிறுவன ஒழுங்கமைப்பு.

முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிராய் நடைபெறும் தொழிலாளி வர்க்கப் போராட்டத்துக்கும் இது பொருந்துவ தாகும். இன்று புரட்சிகரச் சூழ்நிலை இருக்கவில்லை, மக்கள் பெருந்திரளினரிடையே அமைதியின்மையை உண்டாக்கும், அல்லது அவர்களுடைய செயற்பாடுகளைத் தீவிரப்படுத்தும் நிலைமைகள் இருக்கவில்லை. இன்று உங்களிடம் ஓட்டுச் சீட்டு தரப்படுகிறது—அதை வாங்கிக் கொள்ளுங்கள், அதை உங்கள் பகைவர்களுக்கு எதிரான ஆயுதமாகப் பயன்படுத்தும் பொ ருட்டு—சிறைக்குச் செல்லப் பயந்து தமது நாடாளுமன்ற இருக்கைகளில் ஒட்டிக் கொள்ளும் ஆட்களுக்குச் சொகுசான சட்டமன்ற வேலைகள் கிடைப்பதற்கான சாதனமாகப் பயன் படுத்தும் பொருட்டல்ல—ஒழுங்கமைப்பு செய்யக் கற்றுக் கொள்ளுங்கள். நாளைக்கு உங்களது ஓட்டுச் சீட்டு உங்களிட மிருந்து பிடுங்கப்பட்டு, துப்பாக்கியோ மிக நவீன தொழில் நுணுக்கத்தின் சாதனையாகிய அதிவேகப் பீரங்கியோ உங் களிடம் தரப்படுகிறது—சாவையும் அழிவையும் பொழியும் இந்த ஆயுதத்தை வாங்கிக் கொள்ளுங்கள், யுத்தத்தைக் கண்டு அஞ்சும் பிணி கொண்ட அழுமூஞ்சிகளது உணர்ச்சிப் பசப்புக்குச் செவி சாய்க்காதீர்கள்; தொழிலாளி வர்க்கத் தின் விடுதலைக்காகச் சுட்டுப் பொசுக்கியும் வெட்டி வீழ்த்தி யும் நிச்சயமாய் ஒழிக்கப்பட்டாக வேண்டியவை இன்னமும் உலகில் மிகப் பலவும் இருக்கின்றன; மக்கட் பெருந்திரளின ரிடத்தே ஆத்திரமும் ஆவேசமும் வளர்ந்திடுமாயின், புரட்சி

கரச் சூழ்நிலே எழுமாயின், புதிய நிறுவனங்களைத் தோற்றுவிப்பதற்காகத் தயார் செய்யுங்கள், சாவுக்கும் அழிவுக்குமான இந்தப் பயன்தரும் ஆயுதங்களை உங்களது சொந்த அரசாங்கத்துக்கும் உங்களது சொந்த முதலாளித்துவ வர்க்கத்துக்கும் எதிராக உபயோகியுங்கள்.

இது எளிய காரியமல்லதான், சந்தேகமில்லை. கடுமையான தயாரிப்பு வேலைகளும் பெருந் தியாகங்களும் புரிய வேண்டியிருக்கும். இது நிறுவன ஒழுங்கமைப்புக்கும் போராட்டத்துக்குமான ஒரு புதிய வடிவமாகும்; கற்றறிந்து கொள்ள வேண்டிய ஒன்றுகும் இதுவும்; பிழைகளும் பின்னடைவுகளும் இல்லாமல் அறிவு கைவரப் பெறுவதில்லை. வர்க்கப் போராட்டத்தின் இந்த வடிவத்துக்கும் தேர்தல்களில் பங்கெடுத்துக் கொள்வதற்குமுள்ள உறவு, ஒரு கோட்டையின் மீதான தாக்குதலுக்கும் படை சூழ்ச்சி முறைகள் அல்லது படையணி இடப்பெயர்ச்சி அல்லது அகழ்வரிகளில் காத்திருப்பதற்குமுள்ள உறவைப் போன்றதே ஆகும். வரலாறு இந்தப் போராட்ட வடிவத்தை நிகழ்ச்சி நிரலுக்குக் கொண்டுவருவது அடிக்கடி நிகழ்வதல்ல, ஆனல் இதன் முக்கியத்துவமும் விளைவும் பல பத்தாண்டுகளுக்கு நீடித்துச் செயல்படுகிறவை. இத்தகைய போராட்ட முறை கையாளப் படக் கூடிய, கையாளப்படவும் வேண்டிய நாட்கள், பிற வரலாற்றுச் சகாப்தங்களில் மிகப் பல ஆண்டுகளுக்குச் சமமானவை ஆகும்.

கா. காவுத்ஸ்கியையும் கா. லேகினையும் ஒப்பிட்டுப் பாருங்கள். காவுத்ஸ்கி எழுதுகிருர்:

''கட்சி சிறியதாக இருந்தவரை யுத்தத்துக்கு எதிரான கண்டனச் செயல் ஒவ்வொன்றும் பிரசாரத் துறையில் தீரச் செயலாக இருந்தது... ருஷ்ய, செர்பியத் தோழர்களது செயல்முறைக்குப் பொதுப் பாராட்டு கிடைத்துள்ளது. எவ்வளவுக்கு எவ்வளவு ஒரு கட்சி வலுமிக்கதாகிறதோ, அவ்வளவுக்கவ்வளவு அதிகமாக அதன் தீர்மானங்களது நோக்கங்களில் பிரசாரப் பலன்கள் நடைமுறை விளைவுகளின் கணிப்புடன் பின்னிப் பிணைந்துவிடுகின்றன, இருவகை நோக்கங்களிலும் தக்க கவனம் செலுத்துவது அவ்வளவுக்கு அவ்வளவு கடினமாகிவிடுகிறது; ஆயினும் இரண்டில் எதையும் உதாசினம் செய்துவிட முடியாது. ஆகவே நாம் எவ்வளவுக்கு எவ்வளவு பலம் பெறுகிருேமோ, சிக்கலான ஒவ்வொரு புதிய

சூழ்நிலையிலும் அவ்வளவுக்கு அவ்வளவு சுலபமாக நம் மிடையே கருத்து வேறுபாடுகள் எழுகின்றன'' (சர்வதேசிய மும் யுத்தமும், பக்கம் 30).

காவுத்ஸ்கியின் இந்த வாதங்கள் லேகினுடையவற்றி லிருந்து வேறுபடுவதெல்லாம், இவை வஞ்சகமானவை, பேடித்தனமானவை என்பதில் மட்டும்தான். புரட்சிகரச் செயல்களை இழிவான முறையில் லேகின்கள் நிராகரிப்ப தற்குக் காவுத்ஸ்கி ஆதரவளித்து நியாயம் கற்பிக்கின்ருர், ஆனல் தம் உள்ளத்திலிருப்பதைத் தெளிவாக வெளியிட்டு விடாமல் நரித்தனமாய் இதைச் செய்கின்ருர்; சூசகமாகப் பேசித் தந்திரம் புரிந்து, ஒருபுறம் லேகினேயும் மறுபுறம் ருஷ்யர்களது புரட்சிகரச் செயல்முறையையும் பாராட்டு வதுடன் நின்றுவிடுகிருர். புரட்சியாளர்கள் குறித்து இவ் விதமான போக்கினை ருஷ்யர்களாகிய நாம் மிதவாதிகளிடம் மட்டுமே கண்டு வந்திருக்கிருேம். புரட்சியாளர்களது ''வீர தீரத்தை'' அங்கீகரிக்க மிதவாதிகள் எப்போதுமே தயாரா யிருக்கின்றனர், ஆனல் அதேபோது எக்காரணத்தை முன் னிட்டும் அவர்கள் தமது அதித-சந்தர்ப்பவாதப் போர்த் தந்திரத்தைக் கைவிட மாட்டவே மாட்டார்கள். தன்மான முள்ள புரட்சியாளர்கள் காவுத்ஸ்கியின் ''பாராட்டு மொழி களை'' ஏற்றுக் கொள்ள மாட்டார்கள், பிரச்சினை இவ்விதம் எடுத்துரைக்கப்படுவதை அவர்கள் ஆத்திரமாய் நிராகரிக்க வே செய்வர். புரட்சிகரச் சூழ்நிலை இல்லையேல், புரட்சிகரச் செயலுக்காகப் பிரசாரம் செய்வது அவசிய கடமையல்ல வெனில் ருஷ்யர்களும் செர்பியர்களும் அனுசரிக்கும் செயல் முறை பிழையானதாகும், அவர்களது போர்த்தந்திரம் தவருனதாகும். லேகினேயும் காவுத்ஸ்கியையும் போன்ற மாவீரர்கள் தமது கருத்துக்களே சரியானவை என்ற துணிவையாவது வெளிக்காட்டி, பகிரங்கமாய் இப்படிச் சொல்லிவிட வேண்டும்.

இவ்வாறன்றி, ருஷ்ய, செர்பிய சோஷலிஸ்டுகளின் போர்த்தந்திரம் ''பாராட்டுக்கு'' உரியதெனில், ஜெர்மன், பிரெஞ்சு முதலான ''வலுமிக்க'' கட்சிகள் அனுசரிக்கும் இதற்கு நேர்மாருன போர்த்தந்திரம் நியாயமானதே என்று வாதாடுவது தவருகும் என்பதோடு மன்னிக்க முடியாத

குற்றமும் ஆகும். வலுமிக்க பெரிய கட்சிகள் அரசாங்கத்தால் தமது நிறுவனங்கள் கலைக்கப்பட்டு, தமது நிதிகள் முடக்கி வைக்கப்பட்டு, தமது தலைவர்கள் கைதுசெய்யப் பட்டுவிடும் சாத்தியப்பாட்டைக் கண்டு பயந்து நடுங்கின என்ற தெட்டத் தெளிவான உண்மையைக் காவுத்ஸ்கி வேண்டுமென்றே தெளிவற்ற ஒரு தொடரைக் கொண்டு— ''நடைமுறை விளைவுகள்''—மூடிமறைத்திடுகிறார். புரட்சிகரப் போர்த்தந்திரத்திலிருந்து கசப்பான ''நடைமுறை விளைவுகள்'' உண்டாகுமென வாதாடி, காவுத்ஸ்கி சோஷலிசத்துக்கு இழைக்கப்பட்ட துரோகத்துக்கு நியாயம் கூறுகிறார் என்றுதான் இதற்கு அர்த்தம். இது மார்க்சியத்தை சீரழிப்பதன்றி வேறு என்னவாம்?

யுத்தக் கடன்களை ஆதரித்து ஆகஸ்டு 4ல் ஒட்டுபோட்ட சமூக-ஜனநாயகப் பிரதிநிதிகளில் ஒருவர் பெர்லினில் தொழிலாளர் கூட்டம் ஒன்றில், ''இல்லையேல் நாங்கள் சிறையில் தள்ளப்பட்டிருப்போம்'' என்று அறிவித்தாராம். உடனே தொழிலாளர்கள் பலத்த குரலில், ''அதனால் என்னவாம்? நல்லதுதானே!'' என்று பதிலளித்தார்களாம்.

ஜெர்மன், மற்றும் பிரெஞ்சுத் தொழிலாளர் பெருந்திரளினரிடையே புரட்சிகர உணர்ச்சிகளை ஊட்டி, புரட்சிகரச் செயலுக்குத் தயார் செய்ய வேண்டிய அவசியத்தை அறிவுறுத்துவதற்குக் குறிச்சின்னமான நிகழ்ச்சி வேறு எதுவும் இல்லையெனில், துணிகரப் பேச்சுக்காக நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கைது செய்யப்படுவது பல்வேறு நாடுகளின் பாட்டாளிகளையும் அவர்களது புரட்சிகரப் பணியில் ஒற்றுமை பெறும்படி விடுக்கப்படும் அறைகூவலாகப் பயன்பட்டிருக்கும். இம்மாதிரியான ஒற்றுமையை ஏற்படுத்துவது சுலபமல்ல, ஆகவே நாடாளுமன்ற உறுப்பினர்கள், அவர்களது உயர்ந்த பதவியின் காரணமாய் அனைத்து அரசியல் அரங்கினையும் விரிவாகப் பார்க்கும்படியான நிலையிலுள்ள இவர்கள், முன்முயற்சி எடுப்பது இதே அளவுக்கு அவர்களுக்குரிய கடமையாகிவிடுகிறது.

யுத்த காலத்தில் மட்டுமின்றி, நிச்சயமாக எந்தக் கடுமையான அரசியல் சூழ்நிலையிலுங்கூட—புரட்சிகரமான எவ்வித வெகுஜனச் செயலுக்குரிய காலங்களைப் பற்றிச் சொல்லவே வேண்டாம்—மிகமிக சுதந்திரமான முதலாளித்துவ நாடு

களிலுங்கூட அரசாங்கங்கள் சட்டபூர்வமான நிறுவனங்களைக் கலைக்கவும், அவற்றின் நிதிகளைக் கைப்பற்றவும், அவற்றின் தலைவர்களைக் கைது செய்யவும், இதே வகைப்பட்ட பிற ''நடைமுறை விளைவுகளை'' உண்டாக்கப் போவதாகவும் அச்சுறுத்தவே செய்யும். அப்போது நாம் என்ன செய்யலாம்? இந்தக் காரணங்களை முன்னிட்டு, காவுத்ஸ்கி செய்வது போல, சந்தர்ப்பவாதிகளின் நிலை நியாயமே என வாதாடலாமா? அப்படிச் செய்தால், சமூக-ஜனநாயகக் கட்சிகள் தேசிய மிதவாத-தொழிற் கட்சிகளாக மாற்றமடைவதைப் போற்றிப் புனிதமாக்குவதாகத்தான் அதற்கு அர்த்தம்.

சோஷலிஸ்டாக இருப்பவர் வந்தடையக் கூடிய முடிவு ஒன்றேயொன்றுதான்: ''ஐரோப்பியக்'' கட்சிகளது கலப்பற்ற சட்டபூர்வமான செயலானது, இது ஒன்றே தவிர வேறு ஏதுமல்ல என்பதானது, இப்போது காலத்துக்கு ஒவ்வாததாகிவிட்டது; ஏகாதிபத்தியத்துக்கு முந்திய கட்டத்தில் முதலாளித்துவத்தினது வளர்ச்சியின் விளைவாய் முதலாளித்துவத் தொழிற் கட்சிக் கொள்கைக்கான அடிப்படையாகி விட்டது என்பதுதான். இதனுடன் கூட, சட்டவிரோத அடித்தளத்தை, சட்டவிரோத நிறுவனத்தை, சட்டவிரோத சமூக-ஜனநாயகப் பணியைத் தோற்றுவித்துச் சேர்த்துக் கொண்டாக வேண்டும்; ஆனால் எந்தவொரு சட்டபூர்வமான நிலையையும் கைவிட்டு விடாமல் இதைச் செய்தாக வேண்டும். இந்தப் பாதையை மேற்கொள்ள வேண்டுமென்ற விருப்பமும், மற்றும் இது அவசியமாகுமென்ற உணர்வும் இருக்குமாயின், அனுபவமானது இதை எப்படிச் செய்வதென்று தெளிவுபட காட்டும். இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்பதை ருஷ்யாவின் புரட்சிகர சமூக-ஜனநாயகவாதிகள் 1912-14ல் நிரூபித்துக் காட்டினர். டூமாவில் தொழிலாளர் பிரதிநிதியாக இருந்த முரானவ்—வழக்கு விசாரணையின்[50] போது ஏனையோரைக் காட்டிலும் இவர் சிறந்த முறையில் நடந்து கொண்டார், சைபீரியாவுக்கு ஜாரிஸ்டு அதிகாரிகளால் கடத்தப்பட்டார் — அமைச்சராவதற்குரிய நாடாளுமன்றவாதத்தை அன்னியில் (ஹெண்டர்சன், சம்பா, வண்டர்வேல்டேவிலிருந்து ஸுடெக்கும், ஷெய்டமன் வரையிலானோர் இதைச் சேர்ந்தவர்களே, கடைசியில் கூறப்பட்ட இருவரும் முன்னறைக்கு மேல் உள்ளே நுழைய அனுமதிக்

கப்படவில்லை என்றாலும் இவர்களுங்கூட முற்றிலும் ''அமைச் சராவதற்குரிய'' பேர்வழிகளே!) சட்டவிரோத, புரட்சிகர நாடாளுமன்றவாதம் இருக்க முடியுமென்பதைத் தெளிவாக வே நிரூபித்துக் காட்டினர். கசோவ்ஸ்கிகளும் பத்ரேசவ் களும் அடிவருடிகளது ''ஐரோப்பிய'' நாடாளுமன்றவாதத் தை மெச்சிப் புகழட்டும் அல்லது ஏற்றுக் கொள்ளட்டும்; இத்தகைய சட்டவாதமும், லேகின், காவுத்ஸ்கி, ஷெய்ட மன் ரகத்தைச் சேர்ந்த இத்தகைய சமூக-ஜனநாயகமும் இகழ்ச்சிக்கே அன்றி வேறு எதற்கும் தகுதியுடைத்தவை யல்ல என்பதை ஓயாமல் தொழிலாளர்களுக்கு எடுத் துரைத்துக் கொண்டுதான் இருப்போம்.

## 9

தொகுத்துரைப்போமாக.

ஐரோப்பாவிலுள்ள அதிகார பூர்வமான சமூக-ஜன நாயகக் கட்சிகளில் பெரும்பாலானவை தமது பற்றுக்கோள் களுக்கும் ஷ்டுட்கார்ட்டிலும் பாஸெலிலும் ஏற்கப்பட்ட புனித தீர்மானங்களுக்கும் அப்பட்டமாக இழைத்த துரோ கத்தில் இரண்டாவது அகிலத்தின் தகர்வானது மிகமிக எடுப்பான முறையில் வெளியாகின்றது. ஆனால் சந்தர்ப்ப வாதத்தின் முழுநிறை வெற்றியையும் சமூக-ஜனநாயகக் கட்சிகள் தேசிய மிதவாத-தொழிற் கட்சிகளாக மாற்ற மடைந்ததையும் குறிக்கும் இந்தத் தகர்வு, இரண்டாவது அகிலத்துக்குரிய ஒரு முழு சகாப்தத்தின்—பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியும் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப முமாகிய இந்தச் சகாப்தத்தின்—விளைவே ஆகும். மேற்கு ஐரோப்பிய முதலாளித்துவ, தேசியப் புரட்சிகளது நிறை விலிருந்து சோஷலிசப் புரட்சிகளது துவக்கத்துக்கு மாறிச் செல்வதற்குரிய இந்தச் சகாப்தத்தின் எதார்த்தப் புற நிலைமைகள் சந்தர்ப்பவாதத்தைத் தோற்றுவித்து அதற்கு ஊட்டமளித்தன. இந்தக் காலகட்டத்தில் சில ஐரோப்பிய நாடுகளது தொழிலாளி வர்க்க, சோஷலிஸ்டு இயக்கத்தில் பிரதானமாக சந்தர்ப்பவாதத்தின் எல்லை நெடுகிலுமான வெடிப்பாய் அமையும் பிளவு ஏற்படக் காண்கிறோம் (பிரிட் டன், இத்தாலி, ஹாலந்து, பல்கேரியா, ருஷ்யா); ஏனைய நாடு

களில் இதே எல்லை நெடுகிலும் போக்குகளுக்கிடையிலான விடாப்பிடியான நீண்ட போராட்டம் நடைபெறக் காண்கிறோம் (ஜெர்மனி, பிரான்சு, பெல்ஜியம், ஸ்வீடன், ஸ்விட்சர்லாந்து). பெரிய யுத்தத்தால் உண்டாக்கப்பட்ட நெருக்கடியானது மேல் உறைகள் யாவற்றையும் கிழித்தெறிந்து, சம்பிரதாயங்களை உதறித் தள்ளி, நெடுங்காலமாகவே வினை கொண்டு புடைத்துப் பெருத்துவிட்ட சிழ்க் கட்டியைப் பட்டவர்த்தனமாக்கி, சந்தர்ப்பவாதத்தை முதலாளித்துவ வர்க்கத்தின் கூட்டாளியாக இருந்து அது ஆற்றிடும் மெய்யான பாத்திரத்தில் வெளிப்படச் செய்தது. தொழிலாளர் கட்சிகளிலிருந்து இந்தக் கூறு நிறுவன வழியில் அறவே துண்டித்து அகற்றப்படுவது அவசர அவசியமாகியுள்ளது. ஒரே கட்சியில் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப் படையும், தொழிலாளி வர்க்கத்தின் பகுதியளவு குட்டி முதலாளித்துவப் பிரபுக்குலமும் — தமது ''சொந்த'' தேசத்தின் ''பேரரசு'' அந்தஸ்தால் கிடைக்கும் தனியுரிமைகளில் சில கவளங்களைப் பெற்றுக் கொள்ளும் இந்தப் பிரபுக்குலமும்—ஒருங்கே இருப்பதற்கு ஏகாதிபத்தியச் சகாப்தம் அனுமதிப்பதன்று. சந்தர்ப்பவாதமானது ''கடைகோடி நிலைகளை'' அறியாத ஒரே கட்சியில் இருக்கும் ''நியாயமான வண்ணச் சாயலே'' என்பதான பழைய தத்துவம் இப்போது தொழிலாளர்களை ஏமாற்றும் மிகப் பெரிய மோசடியாகவும், தொழிலாளி வர்க்க இயக்கத்துக்கு மிகப் பெரிய முட்டுக்கட்டையாகவும் மாறிவிட்டது. தொழிலாளிப் பெருந்திரளினரை உடனடியாகவே விலகி ஓடச் செய்யும்படியான ஒளிவுமறைவற்ற சந்தர்ப்பவாதமானது, சாலச்சிறந்த நடுவழி என்பதான இந்தத் தத்துவத்தைப் போல் அவ்வளவு பயங்கரமானதல்ல, அந்த அளவுக்குக் கேடு விளைவிப்பதல்ல. இந்த நடுவழித் தத்துவம் மார்க்சியத் தொடர்களை உபயோகித்துச் சந்தர்ப்பவாத நடைமுறைக்கு நியாயம் கற்பிக்கிறது, வரிசையாகப் பல குதர்க்க வாதங்களைக் கையாண்டு புரட்சிகரச் செயலுக்கு இன்னும் காலம் வரவில்லை என்றும் இன்ன பலவாறுகவும் நிரூபிக்க முயலுகிறது. இந்தத் தத்துவத்தின் மிகவும் பிரபலமான பிரதிநிதியும் இரண்டாவது அகிலத்தில் மெத்தப் பெரியவராக விளங்குகிறவருமான காவுத்ஸ்கி கபட வேடம் பூணுவதில் தாம் ஒப்புயர்வற்றவர்

என்பதையும், மார்க்சியத்தைச் சிரழிக்கும் கலையில் தாம் கைதேர்ந்தவர் என்பதையும் நிரூபித்துக் காட்டியிருக்கிறார். ஸுடெக்கும்களாலும் ஷெய்டமன்களாலும் அத்தனை ஆர்வமோடு கண்ணும் கருத்துமாய்ப் பாதுகாக்கப்படும் இம்மாதிரியான ''மெத்தப் பெரியவரிடமிருந்து'', பத்துலட்சம் உறுப்பினர்களைக் கொண்ட ஜெர்மன் கட்சியில் சற்றேனும் நேர்மையும் வர்க்க உணர்வும் புரட்சித் தன்மையும் கொண்ட உறுப்பினர்கள் எல்லாரும் வெகுண்டெழுந்து விலகி வந்து விட்டனர்.

தேசியவெறி தலைவிரித்தாடும் சூழலில், இராணுவச் சட்டத்தின், யுத்தகாலத் தணிக்கை முறையின் நிர்ப்பந்தத்துக்கு இடையில், பாட்டாளி வர்க்கப் பெருந்திரளினர்—இவர்களது பழைய தலைவர்களில் அனேகமாகப் பத்தில் ஒன்பது பகுதியானோர் முதலாளி வர்க்கத்தின் தரப்புக்கு ஓடிவிட்டவர்களாவர்—ஒற்றுமை இழந்தவர்களாக, திக்கற்ற நிலையில் விடப்பட்டிருக்கிறார்கள். ஆயினும் யுத்தத்தால் தோற்றுவிக்கப்பட்ட புரட்சிகரச் சூழ்நிலை, விரிவடைந்தும் ஆழமடைந்தும் வரும் இந்தச் சூழ்நிலை, தவிர்க்கவொண்ணாத முறையில் புரட்சிகர உணர்ச்சிகளை ஊக்குவித்துச் செல்கிறது. மிகச் சிறந்த, மிகவும் வர்க்க உணர்வு படைத்த பாட்டாளிகள் அனைவரையும் இது பக்குவம் பெறச் செய்து, அவர்களுக்கு அறிவொளி ஊட்டி வருகிறது. மக்கட் பெருந்திரளினரது மனோபாவத்தில் திடீர் மாற்றம் ஏற்படுவது சாத்தியமென்பது மட்டுமல்ல, மேலும்மேலும் இது எதிர்பார்க்கக் கூடியதாகி வருகிறது. ருஷ்யாவில் 1905ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் ''கப்போன் இயக்கம்''[51] சம்பந்தமாக ஏற்படக் கண்டோமே அதற்கு ஒப்பான ஒரு மாற்றமாக இருக்கக் கூடியது இது. அப்போது ருஷ்யாவில் சில மாதங்களுக்குள், சில சந்தர்ப்பங்களில் சில வாரங்களுக்குள்ளாகவுங்கூட, பிற்பட்ட பாட்டாளி வர்க்கத் திரளினரிடமிருந்து லட்சக்கணக்கானோரைக் கொண்ட சேனை ஒன்று உருப்பெற்று வெளிப்பட்டு, பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர முன்னணிப் படையைப் பின்தொடர்ந்து நடைபோட்டது. சக்தி வாய்ந்த புரட்சிகர இயக்கம் இந்த யுத்தத்துக்குப் பிற்பாடு உடனடியாக வளர்ச்சியுறுமா, அல்லது இந்த யுத்தத்தின் போதே வளர்ச்சியுறுமா என்பதெல்லாம் குறித்து நாம் முடிவாகக்

கூறுவதற்கில்லை. ஆனால் எப்படியும் இந்தத் திசையிலான பணி மட்டுமே சோஷலிஸ்டுப் பணியென அழைக்கப்படுவதற்குரிய தகுதியுடைத்ததாகும். உள்நாட்டு யுத்தமெனும் கோஷம் இந்தப் பணியினைத் தொகுத்துரைத்து, நெறியாண்மை புரியும் கோஷமாகும். பாட்டாளி வர்க்கம் அதனுடைய சொந்த அரசாங்கத்துக்கும் சொந்த முதலாளித்துவ வர்க்கத்துக்கும் எதிராய் நடத்தும் புரட்சிகரப் போராட்டத்துக்குத் துணை புரிய விரும்புவோரை ஒன்றுபட வைத்து, உறுதி பெறச் செய்யும் கோஷமாகும் இது.

ருஷ்யாவில் புரட்சிகர சமூக-ஜனநாயகப் பாட்டாளி வர்க்கக் கூறுகள் குட்டிமுதலாளித்துவச் சந்தர்ப்பவாதக் கூறுகளிலிருந்து அறவே துண்டித்துக் கொண்டு வெளிவருவதற்குத் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் வரலாறு அனைத்தாலுமே தயார் செய்யப்பட்டுள்ளது. அந்த வரலாற்றினைக் கவனியாது ஒதுக்கிவிட்டு, ''உட்குழுவாதத்துக்கு'' எதிராகச் சண்டமாருதம் புரிவதன் மூலம் ருஷ்யாவில் பாட்டாளி வர்க்கக் கட்சியானது சந்தர்ப்பவாதத்தின் பல்வேறு வகைகளுக்கும் எதிராய்ப் பல ஆண்டுகளாகப் போராட்டம் புரிந்து வளர்ந்து உருவாகிய மெய்யான நிகழ்ச்சிப் போக்கினைப் புரிந்து கொள்ளும் திறனற்றவர்களாகத் தம்மை ஆக்கிக் கொள்வோர் அந்த இயக்கத்துக்குப் படுமோசமான சேவை புரிவோரே ஆவர். தற்போதைய யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் எல்லாப் ''பேரரசுகளிலும்'' ருஷ்யா மட்டும்தான் அண்மையில் ஒரு புரட்சியை அனுபவித்த அரசாகும். பாட்டாளி வர்க்கம் தீர்மானகரமாகப் பங்காற்றிய அந்த புரட்சியின் முதலாளித்துவ தன்மையானது, தொழிலாளி வர்க்க இயக்கத்தினுள் முதலாளித்துவப் போக்குக்கும் பாட்டாளி வர்க்கப் போக்குக்கும் இடையே பிளவினை உண்டாக்காமல் இருப்பதற்கில்லை. ருஷ்யாவின் சமூக-ஜனநாயகம் *(1883—1894ல்* இருந்தது போல, சித்தாந்தப் போக்காக மட்டுமின்றி) தொழிலாளி வர்க்கப் பெருந்திரளினரது இயக்கத்துடன் இணைப்பு கொண்ட நிறுவனமாகவும் இருந்துள்ள இந்த ஏறத்தாழ இருபது ஆண்டுகளில் *(1894—1914)*, பாட்டாளி வர்க்கப் புரட்சிப் போக்குகளுக்கும் குட்டிமுதலாளித்துவச் சந்தர்ப்பவாத போக்குகளுக்குமிடையே போராட்டம் நடைபெற்றது. *1894—1902*ஆம் ஆண்டுகளிலான

''பொருளாதாரவாதம்''[52] இந்த இரண்டாவது வகையைச் சேர்ந்த ஒரு போக்கே ஆகுமென்பதில் ஐயமில்லை. அதன் வாதங்களிலும் சித்தாந்த இயல்புகளிலும் பலவும்—''ஸ்துரூவேவிய'' வழியில் மார்க்சியத்தைத் திரித்துப் புரட்டுதல், சந்தர்ப்பவாதத்துக்கு நியாயம் கூறும் பொருட்டு ''மக்கட் பெருந்திரளினரைக்'' குறிப்பிட்டுச் சான்றுதாரம் தேடுதல் போன்றதாகிய பலவும்—காவுத்ஸ்கி, குனேவ், பிளெஹானவ் முதலானோரது இன்றைய கொச்சைப்படுத்தப் பட்ட மார்க்சியத்தைக் குறிப்பிடத்தக்க அளவுக்கு ஒத்திருக்கின்றன. பழைய ரபோச்சயா மீசிலும்[53], ரபோச்சியே தேலோவும்[54] இன்றைய காவுத்ஸ்கியிற்கு இணைவானவையாக இருந்ததை சமூக-ஜனநாயகவாதிகளது தற்போதைய தலைமுறையினருக்கு நினைவுபடுத்துவோமாயின் அது நன்றிக்குரிய ஒரு சேவையாக இருக்கும்.

அடுத்த காலகட்டத்துக்குரிய (1903—1908) ''மென்ஷிவிசமானது'' சித்தாந்த வழியிலும் நிறுவன வழியிலும் ''பொருளாதாரவாதத்தின்'' நேரடி வாரிசாகும். ருஷ்யப் புரட்சியின் போது, அது எதார்த்தப் புறநிலையில் பாட்டாளி வர்க்கம் மிதவாத முதலாளித்துவ வர்க்கத்தைச் சார்ந்ததாகி, குட்டிமுதலாளித்துவச் சந்தர்ப்பவாதப் போக்குகளைப் பிரதிபலிப்பதாக அமைந்த ஒரு போர்த்தந்திரத்தைப் பின்பற்றியது. இதற்கு அடுத்த காலகட்டத்தில் (1908—1914) மென்ஷிவிக்குப் போக்கின் பிரதான பெருக்கு கட்சிக்கலைப்பு வாதத்தைத் தோற்றுவித்தது; இந்தப் போக்கின் வர்க்க உட்பொருள் அப்படிப் பட்டவர்த்தனமாகிவிடவே, மென்ஷிவிசத்தின் சிறந்த பிரதிநிதிகள் பலரும் நாஷா ஸாரியா கோஷ்டியின் கொள்கையை எதிர்த்து ஓயாமல் கண்டனக் குரலெழுப்பி வந்தனர். இதே கோஷ்டிதான்—கடந்த ஐந்தாறு ஆண்டுகளாகத் தொழிலாளி வர்க்கத்தின் மார்க்சியக் கட்சிக்கு எதிராய் பெருந்திரளினரிடையே முறையாய்ச் செயல்பட்டு வந்திருக்கும் ஒரே கோஷ்டியான இதுதான்—1914—1915ஆம் ஆண்டு யுத்தின்போது சமூக-தேசியவெறிப் போக்காகியுள்ளது! எதேச்சாதிகாரம் இன்னமும் நிலவி வரும்படியான, முதலாளித்துவப் புரட்சி நிறைவு பெறுமல் நெடுந் தொலைவு பிற்பட்டும், நாட்டு மக்கட் தொகையில் நாற்பத்து மூன்று சதவீதத்தினர் ருஷ்யர்களல்லாத தேசங்

களைச் சேர்ந்தோரான பெரும்பான்மையினரை ஒடுக்கிக் கொண்டும் இருக்கும்படியான ஒரு நாட்டில் இப்படி நிகழக் காண்கிறோம். குட்டிமுதலாளித்துவப் பிரிவோரிலும் குறிப்பாக அறிவுத்துறையினரிலும் குறிப்பிட்ட சில அடுக்கினரும், அற்பசொற்பப் பிரிவினராகிய தொழிலாளர் பிரபுக்குலத்தோரும் அவர்களது ''சொந்த'' தேசத்தின் ''பேரரசுத்'' தனியுரிமைகளில் பங்கு பெறும்படியான இந்த ''ஐரோப்பிய'' ரக வளர்ச்சிக்கு ஒத்த ருஷ்யப் பிரதியும் ஒன்று இருக்கவே செய்கிறது.

ருஷ்யாவின் தொழிலாளி வர்க்கத்தையும் தொழிலாளர்களது சமூக-ஜனநாயகக் கட்சியையும் அவற்றின் வரலாறு அனைத்துமே ''சர்வதேசியப்'' போர்த்தந்திரத்துக்கு—அதாவது, மெய்யாகவே புரட்சிகரமானதும் முரணின்றிப் புரட்சிகரமானதுமாகிய இந்தப் போர்த்தந்திரத்துக்கு—தயார் செய்துள்ளது.

---

பின்குறிப்பு: இந்தக் கட்டுரை ஏற்கெனவே அச்சேறிவிட்ட ஒரு நேரத்தில், காவுத்ஸ்கியும் ஹாயாஸேயும் பெர்ன்ஷ்டைனும் கூட்டாக வெளியிட்ட ஓர் ''அறிக்கை'' பத்திரிகைகளில் வெளிவந்திருக்கிறது. மக்கட் பெருந்திரளினர் இடதுசாரியை நோக்கி விரைந்து செல்வதை இவர்கள் கண்ணுறுகிறார்கள், ஆகவே இப்போது இவர்கள் இடதுசாரியினருடன் ''அமைதி உடன்பாட்டுக்கு வரத்'' தயாராயிருக்கிறார்கள்—இயல்பாகவே, ஸுடெக்கும்களுடன் ''அமைதியைப்'' பாதுகாத்துக் கொள்வதென்ற நிபந்தனையின் பேரில்தான் இதற்கு அவர்கள் தயாராயிருக்கிறார்கள். சந்தேகம் வேண்டாம், Mädchen für alle!*

*1915 மே பிற்பாதியிலும்—*
*ஜூன் முற்பாதியிலும் எழுதப் பெற்றது*

*1915 செப்டம்பரில், ஜினீவாவில்,*
*கம்முனிஸ்டு சஞ்சிகை, இதழ் 1—2ல்*
*வெளிவந்தது*

கையொப்பம்: நி. லெனின்

---

* தெருப் பெண்—விலைமகள்,—மொழிபெயர்ப்பாளர்.

## பதிப்பாளர் குறிப்புகள்

[1] சர்வதேச சோஷலிஸ்டு பியூரோ — இரண்டாவது அகிலத்தின் செயலுக்கும் தகவலுக்குமான நிரந்தர உறுப்பு. 1900ல் நடைபெற்ற பாரிஸ் காங்கிரசின் தீர்மானத்தின் படி நிறுவப்பட்டது. ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் பிரதிநிதியாக 1905 முதல் லெனின் இதில் உறுப்பினராய் இருந்தார். முதல் உலகப் போர் ஆரம்பமானதும் சர்வதேச சோஷலிஸ்டு பியூரோ சமூக-தேசியவெறியர்களது கைக்கருவியாகிவிட்டது.

பக்கம் 3

[2] பூந்த் (லித்துவேனியா, போலந்து, ருஷ்யாவின் யூதர் தொழிலாளர்களது பொதுச் சங்கம்)—1897ல் நிறுவப்பட்டது. பிரதானமாக மேற்கு ருஷ்யாவின் அரைப்பாட்டாளி யூதர் கைவினைஞர்களைக் கொண்டிருந்தது. முதல் உலகப் போரின் போது பூந்த் உறுப்பினர்கள் சமூக-தேசியவெறி நிலைகளை அனுசரித்தனர். பூந்தின் வெளிநாடு நிறுவனத்தின் செய்தி — ஜெனீவாவில் 1911 ஜூனிலிருந்து 1916 ஜூன் வரையில் மொத்தம் 11 இதழ்கள் வெளிவந்தன.

பக்கம் 3

[3] ஷ்டுட்கார்ட் சர்வதேச சோஷலிஸ்டுக் காங்கிரஸ் (இரண்டாவது அகிலத்தின் ஏழாவது காங்கிரஸ்) 1907 ஆகஸ்டு 18 — 24ல் ஷ்டுட்கார்ட்டில் நடைபெற்றது. இக்காங்கிரசின் பிரதான பணிகள் முழுநிறை அமர்வுகளுக்குத் தீர்மானங்களை வகுத்துச் சமர்ப்பித்த கமிஷன்களில் நடைபெற்றன. பிரதான பிரச்சினையாகிய ''இராணுவவெறியும் சர்வதேச மோதல்களும்'' என்பது பற்றிய தீர்மானத்தை வகுத்திட்ட கமிஷனின் பணியில் லெனின் பங்கெடுத்துக் கொண்டார். அ. பெபெல் சமர்ப்பித்த நகல் தீர்மானம் குறித்து விவாதம் நடைபெற்ற போது லெனின் போலந்து

சமூக-ஜனநாயகவாதிகளது பிரதிநிதிகளது ஆதரவுடன் பல திருத்தங்களைச் செய்து, புரட்சிகர மார்க்சியத்தின் மனப்பான்மையில் இந்த நகலில் தீவிர மாற்றங்களைச் செய்வதில் வெற்றி பெற்றுர். மிகவும் முக்கியமான கோட்பாட்டின் அடிப்படையிலான பின்வரும் பிரிவும் இந்தத் தீர்மானத்தில் இடம் பெறலாயிற்று; ''யுத்தம் வெடிக்குமாயின், இவர்கள் (பல்வேறு நாடுகளது தொழிலாளி வர்க்கத்தினரும், நாடாளுமன்றங்களில் உள்ள இவர்களது பிரதிநிதிகளும்—ப-ர்) ...யுத்தத்தால் தோற்றுவிக்கப்படும் பொருளாதார, அரசியல் நெருக்கடியைப் பயன்படுத்தி மக்கட் பெருந்திரளினரை உசுப்பிவிடவும் முதலாளித்துவ வர்க்க ஆதிக்கத்தின் தகர்வினைத் துரிதப்படுத்தவும் எல்லா வழிகளிலும் பாடுபட வேண்டும்'' (புரொலித்தாரி, இதழ் 17, 1907 அக்டோபர் 20, பக்கம் 6). ''இராணுவவெறியும் சர்வதேச மோதல்களும்'' என்ற இந்தத் தீர்மானம் ஏற்கப்பட்டதானது, சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் புரட்சிகரப் பிரிவு சந்தர்ப்பவாதப் பிரிவின் மீது கண்ட பெரிய வெற்றியாகும்.

பாஸெல் காங்கிரஸ்—1912 நவம்பர் 24—25ல் பாஸெலில் நடைபெற்ற சர்வதேச சோஷலிஸ்டுச் சிறப்புக் காங்கிரஸ். உலக ஏகாதிபத்திய யுத்தம் மூண்டெழும் அபாயம் சம்பந்தமான பிரச்சினை குறித்து முடிவு செய்வதற்காக இந்தக் காங்கிரஸ் கூட்டப்பட்டது. முதலாவது பால்கன் யுத்தம் இந்த அபாயத்தை வெகுவாய் அதிகரிக்கச் செய்திருந்தது. நவம்பர் 25ல் இந்தக் காங்கிரஸ் யுத்தத்தைப் பற்றிய அறிக்கையை ஒருமனதாய் ஏற்றுக் கொண்டது. வரவிருந்த உலக யுத்தம் குறித்து இந்த அறிக்கை உலக மக்களுக்கு எச்சரிக்கை செய்தது, இந்த யுத்தத்தின் கொள்ளைக்கார நோக்கங்களைத் தெளிவுபடுத்திற்று, இந்த யுத்தத்தை எதிர்த்து முனைப்புடன் போராட்டம் நடத்துமாறு எல்லா நாடுகளின் சோஷலிஸ்டுகளுக்கும் அறைகூவல் விடுத்தது. ஏகாதிபத்திய யுத்தம் வெடித்திடுமாயின், அதனுல் தோற்றுவிக்கப்படும் பொருளாதார, அரசியல் நெருக்கடியை எல்லா சோஷலிஸ்டுகளும் பயன்படுத்தி, சோஷலிசப் புரட்சிக்காகப் போராட வேண்டுமென்று பாஸெல் காங்கிரஸ் அறிக்கை வற்புறுத்தியது.

பக்கம் 4

4 இங்கு குறிக்கப்படுவது ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சியின் ஹெம்னித்ஸ் காங்கிரசால், 1912 செப்டம்பர் 20ல் ஏகாதிபத்தியம் குறித்தும் யுத்தம் சம்பந்தமாய் சோஷலிஸ்டுகளுடைய போக்கு குறித்தும் ஏற்கப்பட்ட தீர்மானமாகும். இந்தத் தீர்மானம் ஏகாதிபத்தியக் கொள்கையை

கண்டித்தது, சமாதானத்துக்காகப் போராடுவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தியது.

பக்கம் 6

5 நாஷே ஸ்லோவோ (''நமது சொல்'') — மென்ஷிவிக்குச் செய்தியேடு, 1915 ஜனவரியிலிருந்து 1916 செப்டம்பர் வரை பாரிசில் வெளிவந்தது.

பக்கம் 7

6 கட்சிக்கலைப்புவாதிகள்—1905-07ஆம் ஆண்டுப் புரட்சியின் தோல்விக்குப் பிற்பாடு பிற்போக்கு தலைவிரித்தாடிய காலத்தில் ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியில் மென்ஷிவிக்குப் பிரிவினரிடையே ஆதிக்கத்திலிருந்த போக்கைச் சேர்ந்தவர்கள் இவர்கள். பாட்டாளி வர்க்கத்தின் சட்டவிரோதக் கட்சி கலைக்கப்பட வேண்டுமென்றும், ஜாராட்சியின் கீழ் சட்டபூர்வமாக இயங்கும் சந்தர்ப்பவாதக் கட்சி ஒன்று அதனிடத்தில் நிறுவப்பட வேண்டுமென்றும் இவர்கள் கோரினர். ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியினது பிராக் மாநாடு 1912 ஜனவரியில் கூடியபோது அது கட்சிக் கலைப்புவாதிகளைக் கட்சியிலிருந்து விலக்கி வெளியேற்றியது.

பக்கம் 9

7 அகிலம் (*Die Internationale*) — ரோசா லுக்சம்பர்கும் பிரான்ஸ் மேரிங்கும் நிறுவிய ஏடு. முதல் இதழ் 1915 ஏப்ரலில் வெளிவந்தது, பிறகு ஜெர்மனியில் 1918 நவம்பர் புரட்சிக்குப் பிற்பாடு இதன் வெளியீடு திரும்பவும் மேற்கொள்ளப்பட்டது.

பக்கம் 9

8 மூவர் உடன்பாடு, ஆன்டான்ட்—பிரிட்டன், பிரான்சு, ஜாரிஸ்டு ருஷ்யா ஆகிய இவற்றின் ஏகாதிபத்தியக் கூட்டு. இது ஜெர்மனி, ஆஸ்திரிய-ஹங்கேரி, இத்தாலி ஆகியவற்றின் முக்கூட்டுக்கு எதிராய் 1907ல் அமைக்கப்பட்டது.

பக்கம் 9

9 ஸ்துரூவேவியம்—மார்க்சியத்தை மிதவாத-முதலாளித்துவ வழியில் திரித்துப் புரட்டிய ஒரு போக்கு. ருஷ்யாவில் ''சட்டபூர்வ மார்க்சியத்தின்'' பிரதான பிரதிநிதியாகிய பி. ப. ஸ்துரூவேயின் பெயரால் அழைக்கப்படலாயிற்று. ஸ்துரூவே குறித்து பக்கங்கள் 28-29 ஐப் பார்க்கவும்.

பக்கம் 13

[10] *Die Neue Zeit* (''புதிய காலம்'') — ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சியின் தத்துவார்த்த சஞ்சிகை. 1883லிருந்து 1923 வரை ஷ்டுட்கார்ட்டில் வெளிவந்தது.

பக்கம் 16

[11] சோத்சியால்-டெமக்ராத் (''சமூக-ஜனநாயகவாதி'')—ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் மத்திய ஏடான சட்டவிரோத வெளியீடு. 1908 பிப்ரவரி முதல் 1917 ஜனவரி வரை, மொத்தம் 58 இதழ்கள் வெளிவந்தன. முதல் இதழ் ருஷ்யாவில் வெளியாயிற்று, ஏனையவை வெளிநாட்டில்—முதலில் பாரிசிலும் பிற்பாடு ஜெனீவாவிலும்—வெளியாயின. 1911 டிசம்பரிலிருந்து வி.இ. லெனின் இதற்கு ஆசிரியராய் இருந்தார், இதற்காக 80க்கு மேற்பட்ட கட்டுரைகளும் குறிப்புகளும் எழுதினர்.

பக்கம் 18

[12] கோலஸ் (''குரல்'') — மென்ஷிவிக்கு நாளேடு. 1914 செப்டம்பரிலிருந்து 1915 ஜனவரி வரை பாரிசில் வெளிவந்தது.

பக்கம் 21

[13] முக்கூட்டு — ஜெர்மனி, ஆஸ்திரியா-ஹங்கேரி, இத்தாலி ஆகியவற்றின் ஏகாதிபத்தியக் கூட்டு, 1879-82ல் உருவாக்கப்பட்டது.

பக்கம் 23

[14] ழீஸின் (''வாழ்க்கை'') — சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியின் செய்தியேடு, முதலில் பாரிசிலும் பிற்பாடு ஜெனீவாவிலுமாய் 1915 மார்ச்சிலிருந்து 1916 ஜனவரி வரை வெளிவந்தது.

பக்கம் 26

[15] பொருளியலாளர் (*The Economist*) — பிரிட்டிஷ் பொருளாதார, அரசியல் ஏடு, பெரிய தொழில்துறை முதலாளிகளது பத்திரிகை, 1843 முதலாய் லண்டனில் வெளிவருகிறது.

பக்கம் 37

[16] கூட்டில் அடைந்த மனிதர் — இதே பெயரில் அந்தோன் சேகவ் எழுதிய கதையின் தலைமைப் பாத்திரம். எல்லாப் புது முறைகளேயும் முன்முயற்சியையும் கண்டு நடுநடுங்கும் சிறுமதி கொண்ட அற்பரின் குணச் சித்திரமாக விளங்குகிறவர்.

பக்கம் 38

17 இங்கு குறிக்கப்படுவது சுத்தேவிடமிருந்தான ஒரு மேற்கோள்.

பக்கம் 44

18 இங்கு குறிக்கப்படுவது அரசாங்க டூமா அமைக்கப்படுவதையும் அதன் தேர்தல் விதிகளையும் பற்றிய ஜார் அறிக்கை. இது 1905 ஆகஸ்டு 6 (19)ல் வெளியிடப்பட்டது. டூமாவின் சட்டத்துக்கான நகலை வரையுமாறு ஜாரினால் உத்தரவிடப்பட்ட உள்துறை அமைச்சர் புலீகினால் தயாரிக்கப்பட்ட இச்சட்டத்தின்படி தோன்றிய டூமா, புலீகின் டூமா என்றழைக்கப்பட்டது. இச்சட்டம் தேச மக்களில் பெரும்பாலோருக்குத் தேர்தல் வாக்குரிமை இல்லாதபடி செய்தது. இந்த டூமா ஆலோசனை உறுப்பாகுமே அன்றி சட்டமன்றமல்ல. புலீகின் டூமா கூட்டப்படவே இல்லை. மூண்டெழுந்த புரட்சி இயக்கத்தால் இது ஒழிக்கப்பட்டுவிட்டது.

பக்கம் 47

19 அனைத்து-ஸ்லாவியம்—ஸ்லாவிய அரசுகளை ஜாரிஸ்டு ருஷ்யாவின் கீழ் ஒன்றுபடச் செய்வதை நோக்கமாகக் கொண்ட பிற்போக்குவாத அரசியல் போக்கு. துருக்கிய, ஆஸ்திரியா-ஹங்கேரிய ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெறுவதற்காக ஸ்லாவ்கள் நடத்திய போராட்டத்தை அனைத்து-ஸ்லாவியம் இந்தப் பிற்போக்கு நோக்கத்துக்காகப் பயன்படுத்திக் கொள்ள முயன்றது.

பக்கம் 49

20 பெர்ன் மாநாடு—ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் வெளிநாட்டுப் பிரிவுகளது மாநாடு. பெர்ன் நகரில் 1915 பிப்ரவரி 27லிருந்து மார்ச் 4 வரை நடைபெற்றது. லெனினது முன்முயற்சியால் இது கூட்டப்பட்டது. யுத்த காலத்தில் அனைத்து-ருஷ்யக் கட்சிக் காங்கிரசைக் கூட்டுவது சாத்தியமல்ல என்பதால், இது போல்ஷிவிக்குக் கட்சி மாநாட்டுக்குரிய முக்கியத்துவமுடையதாயிற்று. பாரிஸ், ஸூரிச், ஜெனீவா, பெர்ன், லொசான் நகர்களிலிருந்த போல்ஷிவிக்குப் பிரிவுகளையும், மற்றும் ''போழீய்'' கோஷ்டியையும் சேர்ந்த பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் கலந்து கொண்டனர். மத்தியக் கமிட்டி, மத்திய ஏடு (சோத்சியால்-டெமக்ராத்) இவற்றின் பிரதிநிதியாகக் கலந்து கொண்ட லெனின், மாநாட்டின் நிகழ்ச்சிகளை வழிநடத்தினார், நிகழ்ச்சி நிரலின் பிரதான விவாதப் பொருளாகிய ''யுத்தமும் கட்சியின் கடமைகளும்'' என்பது குறித்து உரை நிகழ்த்தினார்.

யுத்தம் குறித்து லெனினால் வரையப்பெற்ற தீர்மானத்தை இக்காங்கிரஸ் ஏற்றுக் கொண்டது.

பக்கம் 51

21 ழொரேசிஸ்டுகள் — ழான் ழொரேஸைப் பின்பற்றிய பிரெஞ்சு சோஷலிஸ்டுகள், இவர்கள் மார்க்சியத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் திருத்தப்படுவதையும், பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளித்துவ வர்க்கத்துக்கும் இடையிலான வர்க்க ஒத்துழைப்பையும் ஆதரித்தனர். 1902ல் இவர்கள் சீர்திருத்தவாத நிலையை ஏற்ற பிரெஞ்சு சோஷலிஸ்டுக் கட்சியை நிறுவினர். இக்கட்சி ழூல் கெட்டின் (Guesde) சோஷலிஸ்டுக் கட்சியுடன் இணைந்து, பிரெஞ்சு சோஷலிஸ்டுக் கட்சியாகியது. பிரெஞ்சு சோஷலிஸ்டுக் கட்சியின் தலைமை உறுப்புகளில் பெரும்பான்மை பலம் பெற்றிருந்த ழொரேசிஸ்டுகள் முதல் உலக யுத்தத்தின் போது (1914—1918) பகிரங்கமாகவே ஏகாதிபத்திய யுத்தத்தை ஆதரித்துச் சமூக-தேசியவெறி நிலையை ஏற்றனர்.

பக்கம் 57

22 மென்ஷிவிக்குகள் — ருஷ்ய சமூக-ஜனநாயக இயக்கத்தில் குட்டி-முதலாளித்துவ, சந்தர்ப்பவாதப் போக்கினர், தொழிலாளி வர்க்கத்தினுள் முதலாளித்துவச் செல்வாக்கு பரவுவதற்கான மார்க்கமாக இருந்தவர்கள். ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் இரண்டாவது காங்கிரசில் (1903, ஆகஸ்டு) இவர்கள் மென்ஷிவிக்குகள் என்ற பெயரைப் பெறலாயினர். இந்தக் காங்கிரசின் முடிவில் கட்சியின் மத்திய உறுப்புகளுக்கு நடைபெற்ற தேர்தல்களில் இவர்கள் சிறுபான்மை வாக்குகளையே பெற்றனர் (சிறுபான்மையைக் குறிக்கும் ருஷ்யச் சொல் ''மென்ஷின்ஸ்துவோ''); லெனின் தலைமையில் அமைந்த புரட்சிகர சமூக-ஜனநாயகவாதிகள் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றனர் (பெரும்பான்மையைக் குறிக்கும் ருஷ்யச் சொல் ''போல்ஷின்ஸ்துவோ''). ''மென்ஷிவிக்குகள்'', ''போல்ஷிவிக்குகள்'' என்ற பெயர்கள் இவ்வாறு தான் வழக்குக்கு வரலாயின.

முதல் உலக யுத்தத்தின் போது மென்ஷிவிக்குகள், இரண்டாவது அகிலத்தைச் சேர்ந்த எல்லாச் சந்தர்ப்பவாதக் கட்சிகளையும் போலவே, சமூக-தேசியவெறிப் போக்கை அனுசரித்தனர். 1917 பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப் பிற்பாடு இவர்கள் முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தின் உறுப்பினர்கள் ஆயினர், அதன் ஏகாதிபத்தியக் கொள்கைக்கு ஆதரவளித்தனர். அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பிறகு இவர்கள்

சோவியத்து மக்களுக்கு எதிராய் முதலாளிகள்-நிலப்பிரபுக் களது எதிர்ப்புரட்சியாளர்கள் நடத்திய ஆயுதமேந்திய போராட்டத்தில் பங்கெடுத்துக் கொண்டார்கள்.

பக்கம் 57

23 சோஷலிசம் (*Le Socialisme*)—ழூல் கெட்டை ஆசிரியராகக் கொண்டு பாரிசில் 1907லிருந்து 1914 ஜூன் வரை வெளி யாகி வந்த சஞ்சிகை.

பக்கம் 57

24 கெட்டிஸ்டுப் போக்கு — 19ஆம் நூற்றுண்டின் இறுதியிலும் 20ஆம் நூற்றுண்டின் தொடக்கத்திலும் பிரெஞ்சு சோஷ லிஸ்டு இயக்கத்தில் ழூல் கெட்டின் தலைமையில் செயல் பட்ட புரட்சிகர மார்க்சியப் போக்கு. புரட்சிகர வர்க்கப் போராட்டத்தின் ஆதரவாளர்களாகிய இந்தக் கெட்டிஸ்டு கள் (Guesdists) 1901ல் பிரான்சின் சோஷலிஸ்டுக் கட்சியை நிறுவிக் கொண்டனர். 1905ல் கெட்டிஸ்டுகள் சீர்திருத்தவாத பிரெஞ்சு சோஷலிஸ்டுக் கட்சியுடன் இணைந்தனர். இக்கட்சியில் அவர்கள் மையவாத நிலையை ஏற்றனர். முதல் உலக யுத்தத்தின் போது கெட்டிஸ்டுகள் சமூக-தேசியவெறி நிலையை அனுசரித்தனர், பிரான்சின் முதலாளித்துவ அரசாங்கத்தில் ழூல் கெட்டு ஓர் உறுப்பினர் ஆனார்.

பக்கம் 57

25 பெர்ன்ஷ்டைனியம்—சர்வதேச சமூக-ஜனநாயக இயக்கத் தில் எழுந்த மார்க்சிய-எதிர்ப்பு, சந்தர்ப்பவாதப் போக்கு. இது பத்தொன்பதாம் நூற்றுண்டின் இறுதியில் ஜெர்மனியில் உதித்தது. ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதி எடுவார்டு பெர்ன்ஷ்டைனின் பெயரை இது பெறலாயிற்று. மார்க்சியத்தை முதலாளித்துவ மிதவாத வழியில் திருத்து வதற்காக முயன்றுர், பெர்ன்ஷ்டைன்.

பக்கம் 58

26 மில்லரானியம் — பிரெஞ்சு சோஷலிஸ்டு எ. மில்லரானின் பெயரைப் பெற்ற சந்தர்ப்பவாதப் போக்கு. 1899ல் மில்லரான் பிரெஞ்சுப் பிற்போக்கு முதலாளித்துவ அர சாங்கத்தில் உறுப்பினராகச் சேர்ந்து கொண்டு முத லாளித்துவ வர்க்கம் அதன் கொள்கையைச் செயல்படுத்த உதவினுர். மில்லரானியத்தைப் பற்றிய பிரச்சினை 1900ல் இரண்டாவது அகிலத்தின் பாரிஸ் காங்கிரசில் விவாதிக் கப்பட்டது. விட்டுக்கொடுத்து இணக்கம் காணும் முறை யிலான தீர்மானத்தைக் கார்ல் காவுத்ஸ்கி முன்மொழிந் தார், இத்தீர்மானம் காங்கிரசால் ஏற்கப்பட்டது. முத லாளித்துவ அரசாங்கத்தில் சோஷலிஸ்டுகள் பங்கு கொள்

வதை இத்தீர்மானம் கண்டனம் செய்ததென்ருலும் ''விதி விலக்கான'' சந்தர்ப்பங்களில் சோஷலிஸ்டுகள் முதலாளித்துவ அரசாங்கத்தில் சேர்ந்து கொள்வது அனுமதிக்கப் படலாமெனக் கூறியது. முதல் உலக யுத்தத்தின் போது பிரெஞ்சு சோஷலிஸ்டுகள் ஏகாதிபத்திய முதலாளித்துவ அரசாங்கத்தில் தாம் பங்கு கொண்டதற்கு நியாயம் கூற இந்த விலக்கிட்டு வரையறையைப் பயன்படுத்திக் கொண்டனர்.

பக்கம் 58

27 *Vorwärts* (''முன்செல்'') — ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சியின் மத்தியப் பத்திரிகையான நாளேடு. *1891* லிருந்து *1933* வரை பெர்லினில் வெளிவந்தது.

பக்கம் 61

28 இங்கு குறிக்கப்படுவது: A. Sartorius von Waltershausen. *Das Volkswirtschaftliche System der Kapital Anlage im Auslande*, Berlin, *1907* (எ.சர்ட்டோரியுஸ் வான் வால்டர்ஸ்ஹாவுசன் எழுதிய வெளிநாடுகளில் முதலீட்டின் தேசிய-பொருளாதார அமைப்பு, பெர்லின், *1907*).

பக்கம் 65

29 இங்கு குறிக்கப்படுவது ரூதர்ஃபெரின் (Riezler K.) *Grundzüge der Weltpolitik in der Gegenwart* (தற்கால உலக அரசியலின் அடிப்படை இயல்புகள்). *1913*ல் பெர்லினில் வெளிவந்தது.

பக்கம் 65

30 *Sozialistische Monatshefte* (''சோஷலிச மாதப் பத்திரிகை'') —ஜெர்மன் சந்தர்ப்பவாதிகளது தலைமையான ஏடு, சர்வதேசத் திருத்தல்வாதத்தின் முக்கிய ஏடுகளில் ஒன்று. பெர்லினில் *1897*லிருந்து *1933* வரை வெளியாகி வந்தது. முதல் உலக யுத்தத்தின் போது சமூக-தேசிய வெறிப் போக்கை அனுசரித்தது.

பக்கம் 68

31 **பிரிட்டிஷ் சோஷலிஸ்டுக் கட்சி** — சமூக-ஜனநாயகக் கட்சியும் இதர சோஷலிஸ்டுக் குழுக்களும் சேர்ந்து *1911*ல் மான்சஸ்டரில் நிறுவிய கட்சி. மார்க்சியக் கருத்துகளின் உணர்வுடன் இக்கட்சி கிளர்ச்சி நடத்தி வந்தது. இது ''சந்தர்ப்பவாதக் கட்சியாக இல்லாமல், மிதவாதிகளைச் சார்ந்திராமல் மெய்யாகவே சுயேச்சையானதாக'' இருந்தது (வி.இ. லெனின்). ஆனால் சொற்ப எண்ணிக்கையிலான உறுப்பினர்களையே கொண்டிருந்தது, மக்கட் பெருந்திரளினருடன் இதற்கிருந்த தொடர்புகள் பலவீனமாயிருந்தன.

இதனல் இக்கட்சி குறுங்குழுவாதத் தன்மை கொண்டதாக இருந்தது. முதல் உலக யுத்தத்தின் போது இக்கட்சியினுள் டிபிள்யூ. களாஹர், ஏ. இன்க்பின், தி. மாக்லின், எஃப். ரோட்ஷ்டைன் முதலானோரைக் கொண்ட சர்வதேசியப் போக்குக்கும், ஹைண்டுமனின் தலைமையில் இயங்கிய சமூக-தேசியவெறிப் போக்குக்கும் இடையே கடும் போராட்டம் நடைபெற்றது. சர்வதேசியப் போக்கினருள் பல பிரச்சினைகள் குறித்து மையவாத நிலையை அனுசரித்தோரும் இருந்தனர். 1916 பிப்ரவரியில் இக்கட்சியின் தலைவர்கள் சிலர் *The Call* (''அறைகூவல்'') என்ற செய்தியேட்டைத் துவக்கினர்கள். சர்வதேசியவாதிகளை ஒன்றிணைப்பதில் இந்தச் செய்தியேடு முக்கிய பங்காற்றியது. 1916 ஏப்ரலில் சால்ஃபோர்டில் கூடிய பிரிட்டிஷ் சோஷலிஸ்டுக் கட்சி வருடாந்தர மாநாடு ஹைண்டுமனும் அவர் ஆதரவாளர்களும் பின்பற்றிய சமூக-தேசியவெறிப் போக்கைக் கண்டனம் செய்தது; இதைத் தொடர்ந்து அவர்கள் இக்கட்சியிலிருந்து விலகிக் கொண்டனர். 1920ல் பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுக் கட்சி அமைக்கப்படுவதற்கு பிரிட்டிஷ் சோஷலிஸ்டுக் கட்சியும் கம்யூனிஸ்டு ஒற்றுமைக் குழுவும் பிரதான பங்காற்றின.

பக்கம் 68

32 தொழிற் கட்சி (*Labour Party*) — தொழிலாளி வர்க்கப் பிரதிநிதிகள் நாடாளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு வகை செய்வதற்காக, தொழிற் சங்கங்கள், சோஷலிஸ்டு நிறுவனங்கள், கோஷ்டிகளின் கூட்டணியாக 1900ல் ''தொழிலாளர் பிரதிநிதித்துவக் குழு'' என்ற பெயரில் அமைக்கப்பட்டது. 1906ல் இக்குழுவுக்குத் தொழிற் கட்சி என்று பெயரிடப்பட்டது. பிரிட்டிஷ் தொழிற் கட்சி ஆரம்பத்தில் இயைபில் தொழிலாளர் கட்சியாகவே அமைக்கப்பட்டதென்ருலும் (பிற்பாடு கணிச அளவில் குட்டிமுதலாளித்துவப் பிரிவினர் சேர்ந்து கொண்டனர்), சித்தாந்தத்தையும் போர்த்தந்திரத்தையும் பொறுத்தவரை அது சந்தர்ப்பவாத நிறுவனமாகவே இருந்தது. தொடக்கம் முதலாகவே அதன் தலைவர்கள் முதலாளித்துவ வர்க்கத்துடன் வர்க்க ஒத்துழைப்புக் கொள்கையைப் பின்பற்றினர். முதல் உலக யுத்தத்தின் போது தொழிற் கட்சித் தலைவர்கள் சமூக-தேசியவெறி நிலையை அனுசரித்தனர்.

பக்கம் 68

33 ஃபேபியன்கள் — 1884ல் நிறுவப் பெற்ற பிரிட்டிஷ் சீர்திருத்த நிறுவனமாகிய ஃபேபியன் கழகத்தின் உறுப்பினர்கள். ஃபேபியஸ் மாக்சிமஸ் (கி.மு. மூன்ரும் நூற்

ருண்டு) என்ற ரோமானியத் தளபதியின் பெயரை இக்கழகம் தனக்குச் சூட்டிக் கொண்டது. ஹனிபாலுக்கு எதிரான யுத்தத்தில் முடிவுகட்டவல்ல போர்களைத் தவிர்த்துக் கொண்டு ஒத்திப்போட்டுச் செல்லும் தந்திரத்தைக் கையாண்டதால் இந்தத் தளபதி ''குன்க்டேட்டர்'' (தாமதவாதி) என்ற துணைப் பெயரைப் பெறலாயினர். பாட்டாளி வர்க்கப் போராட்டம், சோஷலிசப் புரட்சி இவற்றின் அவசியத்தை ஃபேபியன்கள் மறுத்தனர். சிறியச் சீர்திருத்தங்கள் மூலம் சமுதாயத்தில் படிப்படியான மாற்றங்களை உண்டாக்குவதன் வாயிலாகவே முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கான மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்றனர். ஃபேபியனியம் ''மிதமிஞ்சிய சந்தர்ப்பவாதப் போக்காகும்'' என்று லெனின் குணநிர்ணயம் செய்தார். 1900ல் ஃபேபியன் கழகம் தொழிற் கட்சியில் சேர்ந்துகொண்டது. தொழிற் கட்சியின் சித்தாந்தத்துக்குரிய ஊற்றுக்கண்களில் ''ஃபேபியன் சோஷலிசம்'' ஒன்ருகும். முதல் உலக யுத்தத்தின் போது ஃபேபியன்கள் சமூக-தேசியவெறி நிலையை அனுசரித்தனர்.

பக்கம் 68

34 சுயேச்சைத் தொழிற் கட்சி (Independent Labour Party) — வேலைநிறுத்தப் போராட்டம் மும்முரமாகி, முதலாளித்துவக் கட்சிகளிடமிருந்து பிரிட்டிஷ் தொழிலாளி வர்க்கம் சுயேச்சை பெறுவதற்கான இயக்கம் முனைப்பு மிக்கதாகிய போது, 1893ல் நிறுவப் பெற்ற சீர்திருத்தவாத நிறுவனம். கீர் ஹார்டி இக்கட்சிக்குத் தலைமை தாங்கினர். ஆரம்பத்திலிருந்தே இக்கட்சி முதலாளித்துவ-சீர்திருத்தவாத நிலையை ஏற்று, நாடாளுமன்றப் போராட்டத்திலும் மிதவாதக் கட்சியுடனை நாடாளுமன்ற உடன்பாடுகளிலுமே பிரதான கவனம் செலுத்தி வந்தது. முதல் உலக யுத்தத்தின் தொடக்கத்தில் சுயேச்சைத் தொழிற் கட்சி யுத்தத்தை எதிர்த்து அறிக்கை விடுத்தது, ஆனல் விரைவிலேயே சமூக-தேசியவெறி நிலையை அனுசரிக்க முற்பட்டது.

பக்கம் 68

35 *The Daily Herald* ''தினத் தூதன்''—பிரிட்டிஷ் சோஷலிஸ்டுக் கட்சியின் பத்திரிகை, 1912 ஏப்ரல் முதலாய் லண்டனில் வெளிவந்தது. 1922ல் இந்தச் செய்தியேடு தொழிற் கட்சியின் பத்திரிகையாக மாறியது.

பக்கம் 68

36 *The Daily Citizen* (''தினப் பிரஜை'')—நாளேடு; பிரிட்டிஷ் தொழிற் கட்சி, ஃபேபியன்கள், சுயேச்சைத் தொழிற்

கட்சி இவற்றின் சந்தர்ப்பவாதக் கூட்டினது பத்திரிகை; லண்டனிலும் மான்செஸ்டரிலும் 1912லிருந்து 1915 வரை வெளிவந்தது.

பக்கம் 68

37 நாஷா ஸாரியா (''நமது அருணோதயம்'') — மென்ஷிவிக்குக் கட்சிக்கலைப்புவாதிகள் 1910க்கும் 1914க்கும் இடையில் செயின்ட் பீட்டர்ஸ்பர்கில் சட்டபூர்வமாய் வெளியிட்டு வந்த மாத ஏடு. இது ருஷ்யாவில் கட்சிக்கலைப்புவாதிகளது மையமாக இருந்து வந்தது.

பக்கம் 68

38 பிராவ்தாவாதம்—போல்ஷிவிக்குச் செய்தியேடு பிராவ்தாவின் பெயரிலான போக்கு, அதாவது போல்ஷிவிசம்.

பிராவ்தா(''உண்மை'')—சட்டபூர்வமான போல்ஷிவிக்கு நாளேடு, முதலாவது இதழ் செயின்ட் பீட்டர்ஸ்பர்கில் 1912 ஏப்ரல் 22 (மே 5)ல் வெளிவந்தது.

பிராவ்தாவுக்கு லெனின் சித்தாந்த வழிகாட்டியாகப் பணியாற்றினார். நாள்தோறும் அவர் அதற்கு எழுதியும் அதன் ஆசிரியர் குழுவினை நெறியாண்மை புரிந்தும் வந்தார். அவரது வழிகாட்டலில் அது போர்குணம் படைத்த புரட்சிகர ஏடாக வெளிவந்தது.

கட்சியின் நிறுவன ஒழுங்கமைப்புப் பணிகளில் கணிசப் பகுதி பிராவ்தாவின் ஆசிரியர் அலுவலகத்தில் நடைபெற்று வந்தது.

அது ஓயாத போலீஸ் தாக்குதல்களுக்கு இலக்காகி வந்தது. ஜாரிஸ்டு அரசாங்கம் அதற்குத் தடைவிதித்து எட்டு தரம் அதை மூடியது, ஆனால் அது வெவ்வேறு மாற்றுப் பெயர்களில் திரும்பத் திரும்ப வெளிவந்து கொண்டிருந்தது. முதல் உலக யுத்தத்துக்குச் சற்று முன்னதாக 1914 ஜூலை 8 (21)ல் தடுத்து நிறுத்தப்பட்டு மூடப்பட்டது.

1917 பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப் பிற்பாடுதான் அது மீண்டும் வெளிவரத் தொடங்கியது. 1917 மார்ச் 5 (18) முதல் அது ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் மத்திய ஏடாகியது. 1917 ஜூலை-அக்டோபரில் எதிர்ப்புரட்சி இடைக்கால அரசாங்கத்தின் தாக்குதல்களின் காரணமாக, அடிக்கடி அது பெயரை மாற்றிக் கொண்டு, லிஸ்தோக் பிராவ்தி (''பிராவ்தா செய்தித்தாள்''), புரோலித்தாரி (''பாட்டாளி''), ரபோச்சி (''தொழிலாளர்''), ரபோச்சி பூத் (''தொழிலாளர் வழி'') என்ற பெயர்களில் வெளிவந்தது. அக்டோபர் சோஷலிசப் புரட்சியின் வெற்றிக்குப் பிறகு

1917 அக்டோபர் 27 (நவம்பர் 9) முதல் பிராவ்தா என்ற தனது பழைய பெயரில் வெளிவருகிறது.

பக்கம் 68

39 இங்கு குறிக்கப்படுவது ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் ஆருவது அனைத்து ருஷ்ய மாநாடு: இது பிராக் நகரில் 1912 ஜனவரி 5—17 (18—30)ல் நடைபெற்றது. பிராக் மாநாடு உண்மை கட்சிக் காங்கிரசுக்குரிய பங்காற்றியது. கட்சியின் மத்தியப் பத்திரிகையினது ஆசிரியர் குழுவைப் பிரதிநிதித்துவம் செய்த லெனின் இம்மாநாட்டின் தலைமையில் நின்று வழிகாட்டினார். புதிய ரகக் கட்சியாகிய போல்ஷிவிக்குக் கட்சியை அமைத்திடவும், அதன் ஒற்றுமையை உறுதிபெறச் செய்யவும் பிராக் மாநாடு முக்கிய பங்காற்றியது. மென்ஷிவிக்குகளை எதிர்த்து ஒரு காலக் கூறு பூராவிலும் நடைபெற்றிருந்த போராட்டத்தின் விளைவுகளை இம்மாநாடு தொகுத்துரைத்தது. மென்ஷிவிக்குக் கட்சிக்கலைப்புவாதிகளைக் கட்சியிலிருந்து விலக்கி இம்மாநாடு போல்ஷிவிக்குகளின் வெற்றியை உறுதி பெறச் செய்தது. புரட்சிகரப் புதிய எழுச்சி ஏற்பட்டு வந்த நிலைமைகளில் அரசியல் கொள்கை வழியையும் போர்த்தந்திரத்தையும் இது வகுத்தளித்தது. பிராக் மாநாடு மிகுந்த சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்ததாகும். சந்தர்ப்பவாதிகளுடன் நிறுவன வழியில் முழுப் பிளவு ஏற்படும் அளவுக்கு சந்தர்ப்பவாதத்தை எதிர்த்து எப்படி உறுதியுடன் போராட வேண்டும் என்பதை இது இரண்டாவது அகிலத்தின் கட்சிகளைச் சேர்ந்த புரட்சிகரக் கூறுகளுக்குத் தெரியப்படுத்திற்று.

பக்கம் 69

தெஸ்னியாக்குகள் — பல்கேரிய சமூக-ஜனநாயகக் கட்சியில் புரட்சிகரப் போக்கு. 1903ல் இப்போக்கு சுயேச்சையான பல்கேரியத் தொழிலாளர் சமூக-ஜனநாயகக் கட்சியாக உருவாகியது. 1914-18ல் தெஸ்னியாக்குகள் ஏகாதிபத்திய யுத்தத்தை எதிர்த்தனர். 1919ல் இவர்கள் கம்யூனிஸ்டு அகிலத்தில் இணைந்து, பல்கேரியக் கம்யூனிஸ்டுகக் கட்சியை அமைத்தனர்.

பக்கம் 69

41 நோவொ விரேமெ (''புதியக் காலம்'') — பல்கேரிய சமூக-ஜனநாயகத்தின் புரட்சிகரப் பிரிவின் (தெஸ்னியாக்குகள்) விஞ்ஞான, தத்துவ ஏடு. 1897ல் தி. பிளகோயேவால் நிறுவப்பட்டது, 1916 பிப்ரவரி வரை வெளிவந்தது. 1919ல் இதன் வெளியீடு மீண்டும் ஆரம்பமாயிற்று. பிறகு 1923ல் பிற்போக்குப் பல்கேரிய அரசாங்கத்தால்

மூடப்பட்டது. 1947 முதலாய் நோவொ விரேமெ பல்கேரியக் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின் தத்துவமாத ஏடாக வெளிவருகிறது.

பக்கம் 69

42 மக்கள் உரிமை (*Volksrecht*) — 1898 முதலாய் ஸூரிச்சில் வெளியாகி வரும் ஸ்விட்சர்லாந்து சமூக-ஜனநாயகக் கட்சியின் நாளேடு. முதல் உலக யுத்தத்தின் போது (1914-18) இது இடதுசாரி சமூக-ஜனநாயகவாதிகளது கட்டுரைகளை வெளியிட்டு வந்தது.

பக்கம் 70

43 *Berner Tagwacht* (''பெர்ன் நகரக் காவலன்'') — ஸ்விட்சர்லாந்து சமூக-ஜனநாயகக் கட்சியின் செய்தியேடு, 1893 முதல் பெர்னில் வெளிவருகிறது.

பக்கம் 70

44 *L'Humanité* (''மனிதகுலம்'') — பிரெஞ்சு சோஷலிஸ்டுக் கட்சியின் நாளேடாக ழான் ழொரேஸால் 1904ல் நிறுவப்பட்டது. முதல் உலக யுத்தத்தின் போது இந்தச் செய்தியேடு பிரெஞ்சு சோஷலிஸ்டுக் கட்சியின் கடைகோடியான வலதுசாரியின் கையில் இருந்தது, சமூக-தேசியவெறி நிலையை அனுசரித்தது. தூரில் நடைபெற்ற காங்கிரசில் (1920 டிசம்பர்) சோஷலிஸ்டுக் கட்சி பிளவுபட்ட பின், பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சி நிறுவப்பட்டதும் இது இக்கட்சியின் பத்திரிகை ஆகியது. தற்போது இந்த நாளேடு பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்திய ஏடாக பாரிசில் வெளியாகி வருகிறது.

பக்கம் 70

45 ஹெரஸ்திராத்தஸ் — ஆசியா மைனரில் எத்தேஸ் நகரில் வசித்தவர், இவரைப் பற்றிக் கூறப்படும் கதையின்படி இவர் தமது பெயரை என்றும் அழியாததாக்கிக் கொள்ளும் பொருட்டு, ''உலகின் ஏழு அதிசயங்களில்'' ஒன்ருய் எத்தேஸ் நகரிலிருந்த அர்த்தெமீதா கோயிலுக்கு கி.மு. 356ல் தீ மூட்டியவர். பிரபலமடையும் பொருட்டு கொடுங் குற்றமும் புரியத் தயாராயிருப்பவரைக் குறிக்க ஹெரஸ்திராத்தஸின் பெயர் உபயோகிக்கப்படுகிறது.

பக்கம் 71

46 புரூசெல்ஸ் கூட்டு (''ஜூலை மூன்ரும் தேதிக் கூட்டு) — ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியினுள் ஒற்றுமையை மீட்டமைப்பதற்குரிய சாத்தியப்பாடு குறித்துக் ''கருத்துகளைப் பரிமாறிக் கொள்வதற்காக'', சர்வ

தேச சோஷலிஸ்டு பியூரோவின் செயற் குழுவால் 1914 ஜூலை 16—18ல் கூட்டப்பட்ட புருசெல்ஸ் ''இணைப்பு'' மாநாட்டின் போது நிறுவப்பட்ட கூட்டு. ரு.ச.ஜ.தொ. கட்சியின் (போல்ஷிவிக்குகள்) மத்தியக் கமிட்டி, நிறுவனக் கமிட்டி (மென்ஷிவிக்குகள்), பிளெஹானவின் ''எதின்ஸ்துவோ'' (''ஒற்றுமை'') கோஷ்டி, ''விபெரியோத்'' (''முன்னிலே'') கோஷ்டி, பூந்த், லாட்விய சமூக-ஜனநாயகவாதிகள், லித்துவேனிய சமூக-ஜனநாயகவாதிகள், போலந்து சமூக-ஜனநாயகவாதிகள், போலந்து சமூக-ஜன நாயக எதிர்த்தரப்பு, போலந்து சோஷலிஸ்டுக் கட்சி (இடதுசாரியினர்) முதலானவை இம்மாநாட்டில் கலந்து கொண்டன. இம்மாநாடு ஆரம்பமாவதற்கு மிகவும் முன்னதாகவே சர்வதேச சோஷலிஸ்டு பியூரோவின் தலைவர்கள் போல்ஷிவிக்குகளுக்கு எதிராய்க் கூட்டு நடவடிக்கைகள் எடுப்பது குறித்துக் கட்சிக்கலைப்புவாதிகளுடன் உடன்பாட்டுக்கு வந்திருந்தனர். இந்த மாநாடு கருத்துப் பரிமாற்றத்துடன் நின்று கொள்ள வேண்டும், கட்டுப் படுத்த வல்ல தீர்மானங்களை ஏற்கக் கூடாதென்பதையும் மீறி, ரு.ச.ஜ.தொ. கட்சியில் ஒற்றுமை குறித்து காவுத்ஸ்கி முன்வைத்த தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப் பட்டது. போல்ஷிவிக்குகளும் லாட்விய சமூக-ஜனநாயக வாதிகளும் இந்த வாக்கெடுப்பில் கலந்துகொள்ள மறுத்து விட்டனர். ஆனால் பெரும்பான்மை வாக்குகளின் பேரில் தீர்மானம் நிறைவேறியது. லெனின் தலைமையிலான போல்ஷிவிக்குகள் புருசெல்ஸ் மாநாட்டுத் தீர்மானங்களுக்குக் கீழ்ப்படிய மறுத்தனர், ''இணைப்புவாதிகளது'' மெய்யான நோக்கங்களைச் சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்துக்குத் தெரியும்படி அம்பலப்படுத்தினர்.

பக்கம் 72

47 கார்ல் லீப்க்னெஹ்ட் எழுதிய *Der Hauptfeind Steht im eigenem Land* (''சொந்த நாட்டிலே பிரதான பகைவன்'') என்ற வேண்டுகோள் இங்கு குறிக்கப்படுகிறது. *Berner Tagwacht* செய்தியேட்டின் இதழ் 123ல் (1915 மே 31) «Ein Kräftiger Mahnrüf» எனும் தலைப்பில் இது வெளிவந்தது.

பக்கம் 73

48 பிரஷ்ய ஆண்டுப் புத்தகம் (*Preußische Jahrbücher*)—அரசியல், வரலாறு, இலக்கியம் இவை பற்றி ஜெர்மன் கான்சர்வேட்டிவ் மாத வெளியீடு. 1858 முதல் 1935 வரை பெர்லினில் வெளிவந்தது.

பக்கம் 74

49 சோஷலிஸ்டுகளுக்கு எதிரான விசேஷச் சட்டம் — ஜெர்மனியில் தொழிலாளி வர்க்க இயக்கத்தையும் சோஷலிஸ்டு இயக்கத்தையும் எதிர்ப்பதற்காக பிஸ்மார்க் அரசாங்கம் 1878ல் பிறப்பித்த சட்டம். இந்தச் சட்டம் எல்லாச் சமூக-ஜனநாயகக் கட்சியின் நிறுவனங்களுக்கும் தொழிலாளர்களது வெகுஜன நிறுவனங்களுக்கும் தொழிலாளர்களது பத்திரிகைகளுக்கும் தடை விதித்தது. இந்தச் சட்டத்தின்படி சோஷலிச நூல்களும் வெளியீடுகளும் பறிமுதல் செய்யப்பட்டன; சமூக-ஜனநாயகவாதிகள் அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டனர், நாடு கடத்தப்பட்டனர். தொழிலாளி வர்க்க இயக்கம் ஓங்கி வளர்ந்ததன் விளைவாய் ஏற்பட்ட நிர்ப்பத்தம் காரணமாக 1890ல் இச்சட்டம் ரத்து செய்யப்பட வேண்டியதாயிற்று.

பக்கம் 79

50 நான்காவது அரசாங்க டூமாவின் போல்ஷிவிக்குக் குழுவினர் மீது 1915 பிப்ரவரி 10 (23)ல் நடத்தப்பட்ட ஜாரிஸ்டு விசாரணை இங்கு குறிப்பிடப்படுகிறது. நான்காவது டூமாவின் போல்ஷிவிக்கு உறுப்பினர்களாகிய ம. முரானவ், அ. பதாயெவ், அ. பெத்ரோவ்ஸ்கி, எப். சமோய்லவ், ந. ஷாகவ் ஆகியவர்கள் 1914 நவம்பரில் கைது செய்யப்பட்டு, ''தேசத் துரோகக்'' குற்றம் சாட்டப்பட்டனர். இந்தப் பிரதிநிதிகள் கைது செய்யப்பட்ட போது அவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட ஐரோப்பிய யுத்தத்தில் புரட்சிகர சமூக-ஜனநாயகத்தின் கடமைகள் என்ற லெனினது ஆய்வுரையும், ரு.ச.ஜ.தொ. கட்சி மத்தியக் கமிட்டியின் அறிக்கையாகிய யுத்தமும் ருஷ்ய சமூக-ஜனநாயகமும் இவர்களுக்கு எதிரான சாட்சியமாகப் பயன்படுத்தப்பட்டன. நீதிமன்றம் எல்லா போல்ஷிவிக்குப் பிரதிநிதிகளுக்கும் தண்டனை விதித்து குடிமை உரிமைகளைப் பறித்துக் கிழக்கு 'சைபீரியாவுக்குக் கடத்தியது.

பக்கம் 86

51 கப்போன் இயக்கம்—முதலாவது ருஷ்யப் புரட்சிக்கு முன்பு கப்போன் என்ற பாதிரி ஜாரிஸ்டு இரகசியப் போலீசினது உத்தரவின் பேரில் புரட்சிகரப் போராட்டத்திலிருந்து தொழிலாளர்களைத் திசை திருப்பிவிடுவதற்காக, ''ஆலைத் தொழிலாளர்களது ருஷ்யச் சங்கம்'' என்பதாக ஒரு நிறுவனம் அமைத்தார். இவர் தொழிலாளர்களைத் தூண்டிவிட்டு 1905 ஜனவரி 9 (22)ல் குளிர்கால அரண்மனையில் ஜார் மன்னரிடம் ஒரு விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பதற்காக ஓர் ஆர்ப்பாட்டத்துக்கு ஏற்பாடு செய்தார். இந்த ஆர்ப்பாட்டத்தின்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யும்

படி ஜார் கட்டளையிட்டார். இந்தத் தொழிலாளர்கள் வெகுளித்தனமாய் ஜாரிடம் வைத்திருந்த நம்பிக்கை இத்துடன் தகர்ந்து போயிற்று. ஜனவரி 9ஆம் நாள் நிகழ்ச்சிகள் முதல் ருஷ்யப் புரட்சியின் துவக்கமாய் அமைந்தன, இவை ருஷ்யாவின் பாட்டாளிப் பெருந் திரளினர் விழித்தெழுவதற்கு வகை செய்தன. இந்தக் கொடிய துப்பாக்கிய பிரயோகத்தை எதிர்த்து ருஷ்யா பூராவிலும் கண்டன வேலைநிறுத்தங்கள் கிளர்ந்தெழுந் தன.

பக்கம் 89

52 ''பொருளாதாரவாதம்'' — சர்வதேசச் சந்தர்ப்பவாதத் தின் ருஷ்ய வகை, 19ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 20ஆம் நூற்றாண்டின் துவக்கத்திலும் ருஷ்ய சமூக-ஜன நாயக இயக்கத்தில் செயல்பட்டு வந்தது. தொழிலாளர் இயக்கம் கூலி உயர்வுக்கும் வேலை நிலைமைகளில் மேம் பாட்டுக்கும் இவையொத்த பிறவற்றுக்குமான பொரு ளாதாரப் போராட்டத்தை நடத்துவதுடன் நின்றுவிட வேண்டுமெனப் ''பொருளாதாரவாதிகள்'' கூறினர். அரசியல் போராட்டத்தை மிதவாத முதலாளித்துவ வர்க்கத்தாரிடம் விட்டுவிட வேண்டும் என்றனர். தொழி லாளி வர்க்கக் கட்சிக்குள்ள தலைமைப் பாத்திரத்தை இவர்கள் மறுத்தார்கள். தொழிலாளி வர்க்க இயக்கத் தின் தன்முனைப்பான போக்கைப் பூஜித்த இவர்கள் புரட்சி கரத் தத்துவத்துக்குள்ள முக்கியத்துவத்தைக் குறைத்துச் சிறுமைப்படுத்தினர். மார்க்சியக் கட்சியானது தொழிலாளி வர்க்க இயக்கத்துக்குச் சோஷலிச உணர்வை அளிப்பதன் அவசியத்தை இவர்கள் மறுத்தார்கள், இவ்விதம் இவர்கள் முதலாளித்துவச் சித்தாந்தம் இவ்வியக்கத்தில் ஆதிக்கம் புரிய வழி வகுக்க முயன்றார்கள். ''பொருளாதாரவாதிகள்'' சமூக-ஜனநாயகத்தின் அணிகளில் ஒற்றுமையின்மைக்கும் குழப்பத்துக்கும் ஆதரவாய் இருந்தார்கள், மத்தியத்துவத் தொழிலாளி வர்க்கக் கட்சி தோற்றுவிக்கப்படுவதை எதிர்த்தார்கள்.

பக்கம் 91

53 ரபோச்சயா மீசில் (''தொழிலாளர் சிந்தனை'') —''பொரு ளாதாரவாதிகளது'' செய்தியேடு, 1897 அக்டோபரி லிருந்து 1903 டிசம்பர் வரை வெளிவந்தது.

பக்கம் 91

54 ரபோச்சியே தேலோ (''தொழிலாளர் இலட்சியம்'') — வெளிநாடுகளிலிருந்த ருஷ்ய சமூக-ஜனநாயகவாதிகளது

சங்கத்தின் ஏடு. 1899 ஏப்ரலிலிருந்து 1902 பிப்ரவரி வரை ஜெனிவாவில் வெளிவந்தது. இந்த ஏட்டின் ஆசிரியர் குழு வெளிநாடுகளில் ''பொருளாதாரவாதிகளது'' மையமாகச் செயல்பட்டது. ரபோச்சியே தேலோ மார்க்சியத்தை ''விமர்சிக்கும் சுதந்திரம்'' அவசியமென்ற பெர்ன்ஷ்டைனின் கோஷத்தை ஆதரித்தது; ருஷ்ய சமூக-ஜனநாயகத்தின் போர்த்தந்திரம், நிறுவன ஒழுங்கமைப்புப் பணிகள் குறித்த பிரச்சினைகளில் சந்தர்ப்பவாதப் போக்கை அனுசரித்தது.

பக்கம் 91

## பெயர்க் குறிப்பு அகராதி

அக்செல்ரோத் [Axelrod], பாவெல் பரிசவிச் *(1850-1928)*—ருஷ்ய சமூக-ஜனநாயகவாதி. ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் இரண்டாவது காங்கிரசிற்கு *(1903)* பிறகு மென்ஷிவிக்கும் முடிவில் கட்சிக் கலைப்புவாதியும் ஆனார். உலக ஏகாதிபத்திய யுத்தத்தின் போது *(1914-18)* மையவாதம் பேசி, அதன் திரை மறைவில் சமூக-தேசியவெறிக் கொள்கையைக் கடைப்பிடித்தார்.—*9, 11, 12, 19, 21.*

லெக்சின்ஸ்கி [Alexinsky], கிரிகோரி அலெக்சேயெவிச் *(பிறப்பு: 1879)—1905-07*ஆம் ஆண்டுகளின் புரட்சியின் போது சமூக-ஜனநாயகவாதி, போல்ஷிவிக்கு. அப்புரட்சி தோல்வியுற்றபின் வாபஸ்வாதி. உலக ஏகாதிபத்திய யுத்தத்தின் போது *(1914-18)* தேசியவெறியர், நாடுபிடிக்கும் ஜாரிஸ்டுக் கொள்கைக்கு ஆதரவளித்தவர்.—*68.*

எங்கெல்ஸ் [Engels], ஃபிரீட்ரிஹ் *(1820-95)*—விஞ்ஞான கம்யூனிசத்தின் நிறுவகர்களில் ஒருவர், சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தின் தலைவரும் போதனாசிரியருமாவார், கார்ல் மார்க்சின் நண்பரும் போராட்டத் தோழருமானவர்.—*25, 26.*

ஃபாயர்பாக் [Feuerbach], லூத்விக் அந்திரேயஸ் *(1804-72)*—ஜெர்மன் தத்துவவியலாளர், பொருள்முதல்வாதி, நாத்திகர், மார்க்சியத்தின் முன்னோடிகளில் ஒருவர்.—*45*.

கசோவ்ஸ்கி [Kosovsky], வி. *(1870-1941)*—ருஷ்ய சமூக-ஜனநாயகவாதி, மென்ஷிவிக்கு. உலக ஏகாதிபத்திய யுத்தத்தின் போது *(1914-18)* — சமூக-தேசியவெறியர்.— *3, 87*.

கத்தே [Goethe], ஜொஹான் வால்ஃப்காங் *(1749-1832)*—மாபெரும் ஜெர்மன் கவிஞர், சிந்தனையாளர்.—*44*.

கரிபால்டி [Garibaldi], ஜியூசெப்பே *(1807-82)*—இத்தாலியின் தேசிய மாவீரர், இத்தாலியப் புரட்சிகர ஜனநாயகத்தின் தலைவர், உன்னத ஜெனரல். 1848-67ஆம் ஆண்டுகளில் இத்தாலியின் ஐக்கியத்துக்காகவும், அன்னிய ஆதிக்கத்துக்கு அடிமைப்பட்டிருக்கும் நிலை, பிரபுத்துவ, எதேச்சாதிகார ஆட்சி, சமயச் சபைப் பிற்போக்கு இவற்றை எதிர்த்தும் போராட்டம் நடத்தியவர்.—27.

கர்டேனின் [Gardenin], யூ. —*பார்க்கவும்:* செர்னோவ் வி.மி.

காய்யோ [Caillaux], ஜோசஃப் *(1863-1944)*—பிரெஞ்சு அரசுத் துறையாளர், தீவிரவாதக் கட்சியின் தலைவர். உலக ஏகாதிபத்திய யுத்தத்துக்கு *(1914-18)* முன்பு—நிதி அமைச்சர், அமைச்சரவைத் தலைவர், உள்துறை அமைச்சர். ஜெர்மன் ஆதரவுக் கொள்கையைப் பின்பற்றியவர்.—*22*.

காவுத்ஸ்கி [Kautsky], கார்ல் *(1854-1938)*—ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சி, இரண்டாவது அகிலம் இவற்றின் தலைவர்களில் ஒருவர். ஆரம்பத்தில் மார்க்சியவாதி, பிற்பாடு மார்க்சியத்தை விட்டுத் துறந்த ஓடுகாலி. சந்தர்ப்பவாதத்தின் மிகவும் அபாயகரமான, தீய வகைப்பட்டதாகிய மையவாதத்தின் (காவுத்ஸ்கிவாதத்தின்) சித்தாந்தவாதி. உலக ஏகாதிபத்திய யுத்தத்தின் போது *(1914-18)*—சமூக-தேசியவெறியர். அதீத-ஏகாதிபத்தியம் என்னும் பிற்போக்குத் தத்துவத்தின் மூலவர். ருஷ்

யாவின் சோஷலிசப் புரட்சியையும் சோவியத் ஆட்சியதி காரத்தையும் எதிர்த்தவர்.—6, 7, 9, 10, 12, 13, 16 18-20, 23-26, 28, 31-36, 38-60, 62, 71-74, 77, 78 83-88, 91, 92.

கிரிம் [Grimm], ராபர்ட் (1881-1958)—சுவிஸ் சமூக-ஜன நாயகக் கட்சியின் தலைவர்களில் ஒருவர். உலக ஏகா திபத்திய யுத்தத்தின் போது (1914-18)—மையவாதி, ஸிம்மர்வால்டு, கின்தால் மாநாடுகளின் பணியில் பங்கு கொண்டவர், சர்வதேச சோஷலிஸ்டுக் கமிஷனின் தலைவர்.—70.

கிரேய்லிக் [Greulich], ஹெர்மன் (1842-1925)—சுவிஸ் சமூக-ஜனநாயகக் கட்சியின் நிறுவர்களில் ஒருவர், அதன் வலதுசாரிப் பிரிவின் தலைவர். உலக ஏகாதிபத் திய யுத்தத்தின் போது (1914-18) சமூக-தேசியவெறியர். —69.

கிளாவுசெவிட்ஸ் [Clausewitz], கார்ல் (1780-1831) — பிரஷ்ய ஜெனரல், பிரபல இராணுவத் தத்துவவாதி, நெப்போலியனது யுத்தங்களின், மற்றும் பல யுத்தங் களின் வரலாறு குறித்து பல நூல்கள் எழுதியவர்.— 24, 25.

குச்கொவ் [Guchkov], அலெக்சாந்தர் இவானவிச் (1862-1936)—ருஷ்ய முதலாளி, அக்டோபரிஸ்டுக் கட்சியின் அமைப்பாளரும் தலைவரும் ஆவார்.—27.

குனேவ் [Cunow], ஹெ‌ன்ரிஹ் (1862-1936)—ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதி, வரலாற்றியலாளர், சமூகவியலா ளர், மனித இன ஆய்வாளர். ஆரம்பத்தில் மார்க்சிய வாதிகளின் பக்கம் இருந்தவர், பிற்பாடு திருத்தல்வாதி யும் மார்க்சியத்தின் புரட்டரும் ஆனவர். உலக ஏகாதி பத்திய யுத்தத்தின் போது (1914-18)—சமூக-ஏகாதி பத்தியத்தின் தத்துவவாதி.— 12, 13, 16, 18, 28, 48, 91.

கெட்டு [Guesde], ழூல் (1845-1922)—பிரெஞ்சு சோஷ லிஸ்டு இயக்கம், இரண்டாவது அகிலம் ஆகியவற்றின்

அமைப்பாளர்கள், தலைவர்களில் ஒருவர். பிரான்சில் மார்க்சியக் கருத்துகளைப் பரப்புவதிலும் சோஷலிஸ்டு இயக்கத்தை வளர்த்திடுவதிலும் முக்கியப் பங்காற்றினார். ஆனால் வலதுசாரி சோஷலிஸ்டுகளின் கொள்கையை எதிர்த்துப் போராடுகையில் அவர் குறுங்குழுவாதத் தன்மையதான தவறுகள் இழைத்தார். உலக ஏகாதிபத்திய யுத்தத்தின் *(1914-18)* தொடக்கத்தில் சமூக-தேசியவெறிப் போக்கைப் பின்பற்றினார், பிரான்சின் முதலாளித்துவ அரசாங்கத்தில் சேர்ந்து கொண்டார். *—6, 7, 57, 57, 77.*

கோர்ட்டர் [Gorter], ஹெர்மன் *(1864-1927)*—டச்சு இடதுசாரி சமூக-ஜனநாயகவாதி, நூலாசிரியர். உலக ஏகாதிபத்திய யுத்தத்தின் போது *(1914-18)*—சர்வதேசியவாதி, ஸிம்மர்வால்டு இடதுசாரிக் குழுவின் ஆதரவாளர். *—69.*

சம்பா [Sembat], மர்சேல் *(1862-1922)*—பிரெஞ்சு சோஷலிஸ்டுக் கட்சியின் தலைவர்களில் ஒருவர். உலக ஏகாதிபத்திய யுத்தத்தின் போது *(1914-18)*—சமூக-தேசியவெறியர். பிரான்சின் ஏகாதிபத்திய ''தேசியப் பாது காப்பு அரசாங்கத்தில்'' *1914* ஆகஸ்டு முதல் *1917* செப்டம்பர் வரை பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்தவர். *—71, 72, 86.*

சர்ட்டோரியுஸ் வான் வால்டர்ஹாவுசன் [Sartorius von Waltershausen], ஔகுஸ்ட் *(பிறப்பு: 1852)*—ஜெர்மன் முதலாளித்துவப் பொருளியலாளர், ஜெர்மன் ஏகாதிபத்தியத்துக்காகப் பரிந்து பேசி பிராசாரம் புரிந்தவர். உலகப் பொருளாதாரம், அரசியல் குறித்து புத்தகங்கள் எழுதியவர். *—65.*

சலாந்திரா [Salandra], அந்தோனியோ *(1853-1931)*—இத்தாலிய அரசுத் துறையாளர், இத்தாலியின் தொழில் துறை ஏகபோகத்தினர், பெரு நில வேந்தர்களது ''மிதவாதக் கூட்டின்'' கடைகோடியான வலதுசாரியின் தலைவர்களில் ஒருவர், *1914-16*ல் இத்தாலியின் அமைச்

சரவைத் தலைவர், உலக ஏகாதிபத்திய யுத்தத்தில் (1914-18) மூவர் உடன்பாட்டு அரசுகளின் தரப்பில் இத்தாலி பங்கு கொள்வதை ஆதரித்தவர்களில் ஒருவர்.—27.

சாவின்கவ் [Savinkov], பரீஸ் விக்தரவிச் *(1879-1925)*—சோஷலிஸ்டுப் புரட்சியாளர் கட்சியின் தலைவர்களில் ஒருவர், முடிவில் சோவியத் மக்களுக்கு எதிரான எதிர்ப் புரட்சிப் போராட்டத்திற்கு ஏற்பாடு செய்தோரில் ஒருவராகச் செயல்பட்டவர்.—27.

செர்னேவ் [Chernov], விக்தர் மிஹாய்லவிச் (கர்தேனின், யூ.) *(1876-1952)*—சோஷலிஸ்டுப் புரட்சியாளர் கட்சியின் ஒரு தலைவரும் தத்துவவாதியுமாவார். மார்க்சியத்தை எதிர்த்துக் கட்டுரைகள் வெளியிட்டார்.—27.

டவித் [David], எடுவார்டு *(1863-1930)*—ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சியினது வலதுசாரியின் தலைவர்களில் ஒருவர், திருத்தல்வாதி. உலக ஏகாதிபத்திய யுத்தத்தின் போது *(1914-18)*—சமூக-தேசியவெறியர்.—7, 59, 81.

டியூமா [Dumas], ஷார்ல் *(பிறப்பு: 1883)*—பிரெஞ்சு சோஷலிஸ்டு, பத்திரிகையாளர், நூலாசிரியர். உலக ஏகாதிபத்திய யுத்தத்தின் போது *(1914-18)*—சமூக-தேசியவெறியர்.—7.

திருல்ஸ்திரா [Troelstra], பிட்டர் இயேல்லெஸ் *(1860-1930)*—டச்சுத் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் முக்கியஸ்தர், வலதுசாரி சோஷலிஸ்டு, டச்சு சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் நிறுவகரும் (1894), தலைவருமாவார்; சந்தர்ப்பவாதி. உலக ஏகாதிபத்திய யுத்தத்தின்போது *(1914-18)*—ஜெர்மானிய சாயல் கொண்ட சமூக-தேசியவெறியர்.—69.

தெலெசி [Delaisi], ஃபிரான்சிஸ் *(பிறப்பு: 1873)*—பிரெஞ்சுக் குட்டிமுதலாளித்துவப் பொருளியலாளர், சிண்டிக்கலிஸ்டு, சாத்வீகவாதி.—11.

நிக்கலாய் [Nicholas], இரண்டாவது *(1868—1918)—1894* லிருந்து *1917* வரை ஆட்சியில் இருந்த ருஷ்யாவின் கடைசிப் பேரரசர்.—*25, 47.*

நெப்போலியன் [Napoleon], மூன்ருவது (போனப்பார்ட் [Bonaparte], லூயி) *(1808-73)—1852*லிருந்து *1870* வரை பிரான்சின் பேரரசர்.—*26.*

பத்ரேசவ் [Potresov], அலெக்சாந்தர் நிக்கலாயிவிச் (ஸ்தரவேர்) *(1869-1934)*—மென்ஷிவிக்குத் தலைவர்களில் ஒருவர். பிற்போக்குத் தலைவிரித்தாடிய காலத்தில்*(1907-10)*—கட்சிக் கலைப்புவாதி. உலக ஏகாதிபத்திய யுத்தத்தின் போது *(1914-18)*—சமூக-தேசியவெறியர்.—*23, 87.*

பாயிஷ் [Paish], ஜார்ஜ் *(1867-1957)*—ஆங்கிலேய முதலாளித்துவப் பொருளியலாளர், சாத்விகவாதி. உலகப் பொருளாதாரம், அரசியல் குறித்து நூல்கள் எழுதியவர்.—*22, 36.*

பிரான்டிங் [Branting], கார்ல் யால்மர் *(1860-1925)*—ஸ்வீடன் சமூக-ஜனநாயகக் கட்சியின் தலைவர், சந்தர்ப்பவாதி. உலக ஏகாதிபத்திய யுத்தத்தின் போது *(1914-18)*—சமூக-தேசியவெறியர். *1917*ல் ஏடன் தலைமையில் அமைந்த கூட்டு அரசாங்கத்தில் சேர்ந்து கொண்டவர்.—*69.*

பிரெயில்ஸ்ஃபோர்டு [Brailsford], ஹென்ரி நோயல் *(பிறப்பு: 1873)*—ஆங்கிலேய முதலாளித்துவ நூலாசிரியர், சாத்விகவாதி.—*22.*

பிளெஹானவ் [Plekhanov], கியோர்கி வலென்தினவிச் *(1856-1918)*—ருஷ்ய, சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் தலைசிறந்த ஒரு தலைவர். ருஷ்யாவில் முதன்முதலாய் மார்க்சியத்தைப் பரப்பியவர், ருஷ்யாவின் முதலாவது மார்க்சிய நிறுவனமான உழைப்பு விடுதலைக் குழுவை நிறுவியவர் *(1883)*. ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் இரண்டாவது காங்கிரசுக்குப்

பிற்பாடு (1903) மென்ஷிவிக்கு ஆனர். உலக ஏகாதிபத்திய யுத்தத்தின் போது (1914-18)—சமூக-தேசியவெறியர். அக்டோபர் சோஷலிசப் புரட்சியை அவர் ஆதரிக்கவில்லை, ஆனல் சோவியத் ஆட்சியதிகாரத்துக்கு எதிரான போராட்டத்தில் பங்கெடுத்துக் கொள்ளவில்லை.—6-10, 16, 18-21, 23-26, 28, 54, 57, 58, 68, 71,72, 77, 91.

பிஸ்ஸலட்டி [Bissolati], லியோனிதா (1857-1920)—இத்தாலிய சோஷலிஸ்டுக் கட்சியின் நிறுவகர்களில் ஒருவர், அதன் சீர்திருத்த வாதப் பிரிவினர்களது தலைவர். 1912ல் இத்தாலிய சோஷலிஸ்டுக் கட்சியிலிருந்து விலக்கப்பட்டார், ''சமூக-சீர்திருத்தக் கட்சி''யை நிறுவினர். உலக ஏகாதிபத்திய யுத்தத்தின் போது (1914-18)—சமூக-தேசியவெறியர், மூவர் உடன்பாட்டு அரசுகளுடன் சேர்ந்து கொண்டு இத்தாலி இந்த யுத்தத்தில் பங்கெடுத்துக் கொள்வதை ஆதரித்தவர்.—69.

பெர்ன்ஷ்டைன் [Bernstein], எடுவார்டு (1850-1932)—ஜெர்மன் சமூக-ஜனநாயகம், இரண்டாவது அகிலம் இவற்றின் கடைகோடியான சந்தர்ப்பவாதிகளது தலைவர், சீர்திருத்தவாதம், திருத்தல்வாதம் ஆகியவற்றின் தத்துவாசிரியர்.—92.

பெல்கர் [Belger], எர்வின் (1875-1919க்கும் 1922க்கும் இடையில்)—ஜெர்மன் முதலாளித்துவ அரசியல்வாதி, பொதுவிவகாரக் கட்டுரையாளர், முடியரசுவாதி, தேசியவெறியர், ஜெர்மன் ஏகாதிபத்தியத்துக்காகப் பரிந்து பேசி பிரசாரம் செய்தவர்.—65

பெனெக்குக் [Pannekoek], ஆன்டனி (1873-1960)—டச்சு சமூக-ஜனநாயகவாதி. டச்சு சமூக-ஜனநாயகக் கட்சியின் இடதுசாரியினது செய்தியேடாகிய *De Tribune* இன் நிறுவகர்களில் ஒருவர், உலக் ஏகாதிபத்திய யுத்தத்தின் போது (1914-18)—சர்வதேசியவாதி. — 13, 69.

மார்க்ஸ் [Marx], கார்ல் *(1818-83)*—விஞ்ஞானக் கம்யூனிசத்தின் நிறுவகர், மாமேதையான சிந்தனையாளர், சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தின் தலைவரும் போதனுசிரியரும் ஆவார்.—*9, 25—27, 29, 46, 51, 52.*

மார்த்தவ் [Martov], எல். (த்ஸெதெர்பாவும், யூலி ஒசிப்பவிச்) *(1873-1923)*—மென்ஷிவிக்குத் தலைவர்களில் ஒருவர். உலக ஏகாதிபத்திய யுத்தத்தின் போது *(1914-18)* மையவாதி. *1917*ல் மென்ஷிவிக்கு-சர்வதேசியவாதக் குழுவுக்குத் தலைமை தாங்கினுர். அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப்பின் சோவியத் ஆட்சியதிகாரத்துக்கு எதிராய்ப் போராடினுர்.—*56, 61.*

மானிட்டர் [Monitor], — ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதியான ஒரு சந்தர்ப்பவாதி. இந்தப் புனைப்பெயரில் *1915* ஏப்ரலில் பழமைவாத ஏடாகிய *Preußische Jahrbücher* இல் ஒரு கட்டுரை வரைந்தார். இதில் அவர் சமூக-ஜனநாயகத்தின் மையவாதத் தன்மையைப் பகிரங்கமாகப் புகழ்ந்தார். சந்தர்ப்பவாதிகளுக்கும் முதலாளித்துவ வர்க்கத்துக்கும் பயனுடையதாயிருக்கும் இதனை, ''இடதுசாரி'' சொல்வீச்சைக் கொண்டு முதலாளித்துவ வர்க்கத்துடன் ஒத்துழைக்கும் கொள்கையைச் சந்தர்ப்பவாதிகள் மூடிமறைக்க உதவியாக இருக்கும் இதனை வருங்காலத்திலும் கைவிடாது பாதுகாக்க வேண்டும் என்ருர். —*74.*

மில்லரான் [Millerand], அலெக்சாண்டர் எத்தியேன்*(1859-1943)*—பிரெஞ்சு அரசியல்வாதி, *1890*ஆம் ஆண்டுகளில் சோஷலிஸ்டுகளுடன் சேர்ந்து கொண்டார். *1899*ல் சோஷலிசத்துக்குத் துரோகம் புரிந்து வால்டெக்-ரூசோ முதலாளித்துவ அரசாங்கத்தில் சேர்ந்து, பாரிஸ் கம்யூனைப் படுகொலை புரிந்தவரான ஜெனரல் கல்லிஃபேயுடன் அங்கே ஒத்துழைத்தார். *1904*ல் சோஷலிஸ்டுக் கட்சியிலிருந்து விலக்கப்பட்டபின், பிரியான் [Briand], விவியானி [Viviani], ஆகியோருடன் சேர்ந்து ''சுயேச்சை சோஷலிஸ்டுகள்'' என்ற கோஷ்டியை அமைத்தார். *1909-10*லும், *1912-13*லும், *1914-15*லும் அமைச்சர்

பதவிகள் வகித்தார், 1920-24ல் பிரெஞ்சுக் குடியரசுத் தலைவராயிருந்தார்.—27.

முரானவ் [Muranov], மத்வேய் கான்ஸ்தன்தினவிச் *(1873-1959)*—ருஷ்ய சமூக-ஜனநாயகவாதி, போல்ஷிவிக்கு. நான்காவது அரசாங்க டூமாவில் உறுப்பினர். ஏகாதிபத்திய யுத்தத்தை எதிர்த்துப் புரட்சிகரச் செயல்களில் ஈடுபட்டதற்காகக் கைது செய்யப்பட்டு, டூமாவின் ஏனைய போல்ஷிவிக்கு உறுப்பினர்களுடன் கூட தண்டிக்கப்பட்டு 1914 நவம்பரில் சைபீரியாவுக்குக் கடத்தப்பட்டார்.—*86.*

மேரிங் [Mehring], ஃபிரான்ஸ் *(1846-1919)*—ஜெர்மன் தொழிலாளர் இயக்கத்தில் தலைசிறந்தவர், ஜெர்மன் சமூக-ஜனநாயகத்தினது இடதுசாரிப் பிரிவின் தலைவர்களிலும் தத்துவவாதிகளிலும் ஒருவர், புரட்சிகர ''ஸ்பார்ட்டகஸ் கழகத்தின்'' தலைவர்களில் ஒருவர், ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சியை நிறுவுவதில் பங்கு கொண்டவர்.—*9, 47, 54, 55.*

ராதெக் [Radek], கார்ல் பெர்ன்கார்தவிச் *(1885-1939)*—கலீஷியா, போலந்து, ஜெர்மனியின் சமூக-ஜனநாயக இயக்கத்தில் பங்கு கொண்டவர். உலக ஏகாதிபத்திய யுத்தத்தின் போது *(1914-18)*—சர்வதேசியவாதி. தேசங்களின் சுயநிர்ணய உரிமை பற்றிய பிரச்சினையில் அவர் தவறான நிலையை ஏற்றார். 1917 முதல் போல்ஷிவிக்கு. 1923லிருந்து திரோத்ஸ்கியின் எதிர்ப்பியக்கத்தில் முனைப்பாய்ச் செயல்பட்டார், கட்சியெதிர்ப்புச் செயற்பாட்டுக்காகக் கட்சியிலிருந்து விலக்கப்பட்டார்.—*13.*

ராபர்ஸ்பேர் [Robespierre], மாக்ஸிமிலியன் மரீ இஸிடோர் *(1758-1794)*—18ஆம் நூற்றாண்டின் முடிவில் நடைபெற்ற மாபெரும் பிரெஞ்சு முதலாளித்துவப் புரட்சியின் தலைவர்களில் ஒருவர், ஜாக்கபின்களது தலைவர், 1793-94ல் புரட்சிகர அரசாங்கத்துக்கு நடைமுறையில் தலைவராய் இருந்தவர்.—*27.*

ரிட்ஸ்லர் [Rizler], குர்ட் (ரூதர்ஃபெர்) *(1882-1955)*—ஜெர்மன் அரசுறவுத் துறையாளர், தத்துவவியலாளர், நூலாசிரியர்; ஜெர்மன் ஏகாதிபத்திய முதலாளித்துவ வர்க்கத்தின் மிதவாத-முடியரசுவாதப் பிரிவின் பிரதிநிதி, உலக அரசியல் குறித்து நூல்கள் எழுதியவர்.—65.

ரூதர்ஃபெர் [Ruedorffer], —பார்க்கவும்: ரிட்ஸ்லர், குர்ட்.

ரோப்ஷின் [Ropshin], வி. —பார்க்கவும்: சாவின்கவ் ப.வி.

லஸ்ஸால் [Lassalle], ஃபெர்டினண்டு *(1825-64)*—ஜெர்மன் சோஷலிஸ்டு, அனைத்து-ஜெர்மானியத் தொழிலாளர் சங்கத்தை நிறுவியவர். முக்கியமான அரசியல் பிரச்சினைகளில் சந்தர்ப்பவாத நிலையை மேற்கொண்டார். இதற்காக மார்க்சும் எங்கெல்சும் இவரைக் கடுமையாய் விமர்சித்தனர்.—44.

லாயிட் [Lloyd], ஜார்ஜ், டேவிட் *(1863-1945)*—பிரிட்டிஷ் அரசுத் துறையாளர், மிதவாதக் கட்சியின் தலைவர். 1916-22 ஆம் ஆண்டுகளில் பிரிட்டிஷ் பிரதமர்.—22, 36.

லீப்க்னெஹ்ட் [Liebknecht], கார்ல் *(1871-1919)*—ஜெர்மன், சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தில் முக்கியமான தலைவர். உலக ஏகாதிபத்திய யுத்தத்தின் போது *(1914-18)*—புரட்சிகர சர்வதேசியவாதி, புரட்சிகர ''ஸ்பார்ட்டகஸ் கழகத்தின்'' அமைப்பாளரும் தலைவருமாய் இருந்தவர், ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சியின் நிறுவகர்களிலும் 1919 ஜனவரியில் நடைபெற்ற பெர்லின் தொழிலாளர்களது எழுச்சியின் தலைவர்களிலும் ஒருவர். அந்த எழுச்சி தோல்வியுற்றபின் எதிர்ப்புரட்சியாளர்களால் கொடிய முறையில் கொல்லப்பட்டார்.—81.

லுக்சம்பர்க் [Luxemburg], *(1871-1919)* ரோசா —ஜெர்மன், போலிஷ், சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தில் தலைசிறந்தவர், இரண்டாவது அகிலத்தின் இடதுசாரிப் பிரிவின் தலைவர்களில் ஒருவர், ஜெர்மன் கம்யூனிஸ்டுக்

கட்சியின் நிறுவகர்களில் ஒருவர். *1919* ஜனவரியில் எதிர் புரட்சியாளர்களால் படுகொலை செய்யப் பட்டார்.—*9, 47, 54, 55.*

லுக்காஸ் [Lucas] சார்ல்ஸ் பிரெஸ்ட்வுட் *(1853-1931)*—ஆங்கிலேய காலனி அதிகாரி, வரலாற்றியலாளர், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்காகப் பரிந்து பேசி பிரசாரம் புரிந்தவர், பிரிட்டிஷ் காலனி சாம்ராஜ்யத்தின் வரலாறு குறித்து நூல்கள் எழுதியவர்.—*65.*

லெஞ்ச் [Lensch], பாவுல் *(1873-1926)*—ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதி. உலக ஏகாதிபத்திய யுத்தத்தின் போது *(1914-18)*—சமூக-தேசியவெறியர்.—*16, 28, 58, 59.*

லெனின் [Lenin], விளதிமிர் இலியீச் *(1870-1924).—16—18, 48, 92.*

லேகின் [Legien], கார்ல் *(1861-1920)*—ஜெர்மன் வலது சாரி சமூக-ஜனநாயகவாதி, ஜெர்மன் தொழிற்சங்கத் தலைவர்களில் ஒருவர், திருத்தல்வாதி. உலக ஏகாதிபத்திய யுத்தத்தின் போது *(1914-18)*—சமூக-தேசிய வெறியர்.—*60, 73, 78-80, 83, 84, 87.*

வண்டர்வேல்டே [Vandervelde], எமீல் *(1866-1938)*—பெல்ஜியத் தொழிலாளர் கட்சித் தலைவர், இரண்டாவது அகிலத்தின் சர்வதேச சோஷலிஸ்டு பியூரோவின் தலைவர், சந்தர்ப்பவாதி. உலக ஏகாதிபத்திய யுத்தத்தின் போது *(1914-18)*—சமூக-தேசியவெறியர்; முதலாளித்துவ அரசாங்கத்தில் சேர்ந்து அமைச்சர் பதவிகள் வகித்தவர்.—*9, 71, 72, 86.*

வில்ஹெல்ம் [Wilhelm], இரண்டாவது (ஹோஹன்சோலர்ன் [Hohenzollern]) *(1859-1941)* — ஜெர்மன் பேரரசர், பிரஷ்யாவின் மன்னர் *(1888-1918).—25.*

வையான் [Vaillant], எடுவார்டு மரீ *(1840-1915)*—பிரெஞ் சோஷலிஸ்டு, இரண்டாவது அகிலத்தின் தலைவர்களில்

ஒருவர். *1905*ல் பிரான்சின் சோஷலிஸ்டுக் கட்சியும் சீர்திருத்தவாத பிரெஞ்சு சோஷலிஸ்டுக் கட்சியும் இணைந்து ஒன்றுகியபின், பிரதான பிரச்சினைகளில் இவர் சந்தர்ப்பவாத நிலையை ஏற்ருர். உலக ஏகாதிபத்திய யுத்தத்தின் போது *(1914-18)*—சமூக-தேசியவெறியர். —*54, 57, 58, 70.*

ஜெல்யாபவ் [Zhelyabov], அந்திரேய் இவானவிச் *(1850-81)*—பெயர்பெற்ற ருஷ்யப் புரட்சியாளர், ''நரோத்னயா வோல்யா'' [மக்களது சித்தம்] கட்சியின் அமைப்பாளரும் தலைவருமாவார். ஜாரிசத்தை எதிர்த்து அரசியல் போராட்டம் நடத்துவது அரசியம் என்பதை உணர்ந்து கொண்ட முதலாவது நரோத்னிக்குகளில் ஒருவர். ஜார் மன்னர் இரண்டாம் அலெக்சாந்தரைக் கொல்வதற்கு இவர் தலைமையில் பல முயற்சிகள் செய்யப்பட்டன. *1881* மார்ச் *1*ல் இரண்டாம் அலெக்சாந்தர் கொல்லப்பட்ட போது அதற்கான தயாரிப்பில் பங்கு கொண்டார் என குற்றஞ்சாட்டப் பட்டுக் கொல்லப் பட்டவர்.—*27.*

ஜிஃபென் [Giffen], ராபர்ட் *(1837-1910)*—ஆங்கிலேய முதலாளித்துவப் பொருளியலாளர், புள்ளிவிவரவியலாளர், முதலாளித்துவத்துக்காகப் பரிந்து பேசி பிரசாரம் செய்தவர்.—*22.*

ஷுல்த்ஸே [Schultze], எர்னஸ்டு *(1874-1943)*—ஜெர்மன் பொருளியலாளர், ஜெர்மன் ஏகாதிபத்தியத்துக்காகப் பரிந்து பேசி பிரசாரம் செய்தவர்.—*40.*

ஷெய்டமன் [Scheidemann], ஃபிலிப் *(1865-1939)*—ஜெர்மன் சமூக-ஜனநாயகத்தின் கடைகோடியான சந்தர்ப்பவாத வலதுசாரியின் தலைவர்களில் ஒருவர். ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சியின் நிர்வாகக் குழுவில் *1911*லிருந்து உறுப்பினர். உலக ஏகாதிபத்திய யுத்தத்தின் போது *(1914-18)*—சமூக-தேசியவெறியர்.—*60, 73, 86, 87, 89.*

ஸ்துரேபெல் [Ströbel], ஹென்ரிஹ் *(1869-1945)*—ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதி. உலக ஏகாதிபத்திய யுத்தம்

தொடங்கிய போது அதை எதிர்த்தார்; ''சர்வதேசிய வாதக்'' கோஷ்டியில் சேர்ந்து கொண்டார்; இங்கு அவர் காவுத்ஸ்கிவாதத்தை நோக்கி ஊசலாடிய ஒரு போக்கின் பிரதிநிதியாக இருந்தார். முடிவில் 1916ல் காவுத்ஸ்கி வாதிகளுடன் முழுமையாகச் சேர்ந்து கொண்டுவிட்டார். 1917ல் சுயேச்சை ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சியின் அமைப்பாளர்களில் ஒருவர்.—*74.*

ஸுடெக்கும் [Südekum], ஆல்பெர்ட் *(1871-1944)*—ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சியின் சந்தர்ப்பவாதத் தலைவர்களில் ஒருவர், திருத்தல்வாதி. உலக ஏகாதிபத்திய யுத்தத்தின் போது *(1914-18)*—சமூக-ஏகாதிபத்திய வாதி.—*16, 48, 54, 71—73, 86, 89, 92.*

ஸ்துருவே [Struve], பியோத்தர் பெர்ங்கார்தவிச் *(1870-1944)*—ருஷ்ய முதலாளித்துவப் பொருளியலாளர், நூலாசிரியர். அரசியலமைப்புச் சட்ட ஜனநாயகக் (காடேட்டு) கட்சியின் தலைவர்களில் ஒருவர். 1890ஆம் ஆண்டுகளில் ''சட்டபூர்வ மார்க்சியத்தின்'' தலைமையான பிரதிநிதியாக இருந்தார். மார்க்சின் பொருளாதார, தத்துவவியல் போதனைகளை ''விமர்சிக்கவும்'', அவற்றுடன் ''கூட்டிச் சேர்க்கவும்'' வேண்டும் என்றார்; இவ்விதம் அவர் மார்க்சியத்தையும் தொழிலாளி வர்க்க இயக்கத்தையும் முதலாளித்துவ வர்க்கத்தின் நலன்களுக்குத் தகவமைக்க முயற்சி செய்தார்.—*28*

ஹாயாஸே [Haase], கூகோ *(1863-1919)*—ஜெர்மன் சமூக-ஜனநாயகத் தலைவர்களில் ஒருவர், மையவாதி.—*72, 73, 92.*

ஹார்ம்ஸ் [Harms], பெர்ன்ஹார்டு *(1876-1939)*—ஜெர்மன் பொருளியலாளர், கத்தேடர்-சோஷலிசத்தின் பிரதிநிதிகளில் ஒருவர், ஜெர்மன் ஏகாதிபத்தியத்துக்காகப் பரிந்து பேசி பிரசாரம் செய்தவர்.—*36.*

ஹெகல் [Hegel], கியோர்க் வில்ஹெல்ம் ஃபிரீட்ரிஹ் *(1770-1831)*—மாபெரும் ஜெர்மன் தத்துவவியலாளர், புறநிலைக் கருத்துமுதல்வாதி. இயக்கவியலை ஆழமான, விரிவான முறையில் வளர்த்துச் செப்பம் செய்தார், இது

தத்துவவியலுக்கு ஹெகல் ஆற்றிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சேவையாகும், இது இயக்கவியல் பொருள்முதல்வாதத்தின் தத்துவார்த்தத் தோற்றுவாய்களில் ஒன்ருகியது. ஆனுல் ஹெகலின் இயக்கவியல் கருத்துமுதல்வாதத் தன்மையதாய் இருந்தது.—*21, 24.*

ஹெண்டர்சன் [Henderson], ஆர்தர் *(1863-1935)*—ஆங்கிலேய அரசியல்வாதி; தொழிற் கட்சி, தொழிற்சங்க கவுன்சில் இவற்றின் வலதுசாரி தலைவர்களில் ஒருவர்; சமூக-தேசியவெறியர். 1915க்கும் 1931க்கும் இடையில் பல தரம் பிரிட்டிஷ் அரசாங்கத்தில் உறுப்பினராக இருந்தவர்.—*86.*

ஹேனிஷ் [Haenisch], கொன்ராட் *(1876-1925)*—ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதி. உலக ஏகாதிபத்திய யுத்தத்தின் போது *(1914-18)*—சமூக-தேசியவெறியர்.—*58, 59.*

ஹைண்டுமன் [Hyndman], ஹேன்ரி மெயர்ஸ் *(1842-1921)*—ஆங்கிலேய சோஷலிஸ்டு, சீர்திருத்தவாதி, 1900-10ஆம் ஆண்டுகளில் சர்வதேச சோஷலிஸ்டு பியூரோவின் உறுப்பினர். பிரிட்டிஷ் சொஷலிஸ்டுக் கட்சித் தலைவர்களில் ஒருவர், 1916ல் சால்ஃபோர்டில் நடைபெற்ற இக்கட்சியின் மாநாடு ஏகாதிபத்திய யுத்தம் குறித்து இவர் அனுசரித்த சமூக-தேசியவெறி நிலையைக் கண்டனம் செய்தபின் இந்தக் கட்சியிலிருந்து விலகினுர்.—*6, 7, 9, 20, 54, 57, 58.*

ஹைனே [Heine] வால்ஃப்காங் *(1861-1944)*—ஜெர்மன் அரசியல்வாதி, வலதுசாரி சமூக-ஜனநாயகவாதி.—*59.*

ஹாக்லுந்து [Höglund] கார்ல் இட்ஸெத் கான்ஸ்தான்தின் *(1884-1956)*—ஸ்வீடனில் சமூக-ஜனநாயக இயக்கம், சோஷலிஸ்டு இளைஞர் இயக்கம் இவற்றின் இடதுசாரியின் தலைவர். உலக ஏகாதிபத்திய யுத்தத்தின் போது *(1914-18)*—சர்வதேசியவாதி. 1917-24ல் ஸ்வீடன் கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைவர்களில் ஒருவர். சந்தர்ப்பவாதத்துக்காக 1924ல் கம்யூனிஸ்டுக் கட்சியிலிருந்து விலக்கப்பட்டவர்.—*69.*

## வாசக நேயர்களுக்கு

இந்த மொழிபெயர்ப்பைப் பற்றியும் இந்தப் புத்தகத்தின் தயாரிப்பைப் பற்றியும் வாசகநேயர்களின் கருத்தை முன்னேற்றப் பதிப்பகம் மகிழ்வுடன் வரவேற்கும்.

கடிதங்களைத் தயை செய்து "Progress Publishers, 21, Zubovsky Boulevard, Moscow, USSR" என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
தலைமை அலுவலகம்
6, Nallathambi Chetty Street, Madras-2
ஷோ-ரூம்
6/30, Mount Road, Madras-600002
கிளைகள்
80, West Tower St., Madurai-1
87/89, Oppanakara St., Coimbatore-1
Singarathope, Tiruchirapalli-8
Cherry Road, Salem-1

## முன்னேற்றப் பதிப்பகம்

## தமிழில் சோவியத் நூல்கள்

லெனின் வி.இ. என்ன செய்ய வேண்டும்?

*1901*ஆம் ஆண்டின் இறுதியிலும் *1902* ஆம் ஆண்டின் துவக்கத்திலும் எழுதப்பட்ட இந்நூல், அனைத்துலகிலும் ருஷ்யாவிலும் நடைபெற்ற சமூக-ஜனநாயக இயக்கத்தில் சந்தர்ப்பவாதம், திருத்தல்வாதம் ஆகியவற்றை எதிர்த்து எழுதப்பட்டது. அதில் புரட்சிகரத் தொழிலாளர் இயக்கத்திற்கு விஞ்ஞானக் கம்யூனிசத் தத்துவத்தின் முக்கியத்துவம் தெளிவுபடுத்தப்படுகிறது; தொழிற் சங்கவாதக் கொள்கைக்கும் மெய்யான புரட்சிகரப் பாட்டாளி வர்க்கக் கொள்கைக்கும் உள்ள அடிப்படை வேறுபாடு சுட்டிக்காட்டப்படுகிறது.

தொழிலாளர் இயக்கத்தில் கட்சி, ஒழுங்கமைப்பு செய்து தலைமைதாங்கும் புரட்சிகரச் சக்தியாகும் என்ற கோட்பாடு நூலின் அடிப்படைக் கருத்தாகும். புதிய வகைக் கட்சியைப் பற்றிய கோட்பாடுகளை லெனின் வகுத்தளித்தார்.

நூலில் பதிப்பாளர் குறிப்புகள் சேர்க்கப் பட்டுள்ளன.

லெனின் வி. இ. ஜனநாயகப் புரட்சியில் சமூக-ஜன நாயகவாதத்தின் இரண்டு போர்த்தந்திரங்கள்

1905ஆம் ஆண்டில் ஜூன்-ஜூலையில் எழுதப்பட்ட இந்நூலில் லெனின் மார்க்சியக் கட்சியின் போர்த்தந்திர அடிப்படைக் கோட்பாடுகளை உருவாக்கினர்; மென்ஷிவிக் கட்சியினரின் சிறுமுதலாளித்துவப் போர்த் தந்திரக் கோட்பாடுகளைத் தாக்கி முறியடித் தார். முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சியில் பாட்டாளி வர்க்கத்திற்குள்ள தலைமைப் பாத்திரம் பற்றியும், ஜார் ஆட்சியைக் கவிழ்த்து ஜனநாயகக் குடியரசை நிறுவுவதற்கு அனைத்து மக்களின் ஆயுதமேந்திய எழுச்சி மிகவும் முக்கியமான வழியாகும் என்னும் கருத்தைப் பற்றியும், தற்காலிகப் புரட்சி அரசாங்கம் பற்றியும், பாட்டாளி வர்க்கத்தினர், விவசாயிகளின் புரட்சி-ஜன நாயகச் சர்வாதிகாரம் பற்றியும் விளக்கி எழுதினர்; சோஷலிசப் புரட்சியின் புதிய தத்துவத்தையும் முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சி சோஷலிசப் புரட்சியாக மாறிச் செல்வதைப் பற்றிய தத்துவத்தையும் உருவாக்கினர்.

நூலின் இறுதியில் குறிப்புகள் சேர்க்கப் பட்டுள்ளன.

[illegible]

[illegible]

В. И. Ленин

[illegible]

[illegible]